அமுதசுரபி

ஜூலை '94
லை ரூ. 6/-



புதுச்சேரி இலக்கியச் சிறப்பிதழ் -

தோப்புக்கரணம்

ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள்



['தமிழில் தவறுகளை அறிவோம்' என்ற தலைப்பில் டாக்டர் தி. முத்துக் கண்ணப்பர் எழுதிவரும் பயன் மிக்க, அருமையான தொடரில் ஏப்ரல் மாத இதழில் 'தோப்புக்கரணம்' என்பதன் சரியான உருவம் 'தோற்புக்கரணம்' எனக் கூறியுள்ளார். இச்சமயத்தில், ஸம்ஸ்கிருத 'தோர்பி(ஹ்) கர்ணம்'தான் 'தோப்புக்கரணம்' எனத் திரிந்து வந்தது என்று, அண்மையில் விதேஹ முக்தியுற்ற ஸ்ரீகாஞ்சி மஹா பெரியவர்கள் விளக்கியிருப்பதை வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். *ரா. கணபதி*]

தோப்புக்கரணத்தை ஆதியில் உண்டாக்கியவர் மஹாவிஷ்ணு. அவர் ஒரு ஸமயம் ஸஹோதரி (பார்வதி)யைப் பார்ப்பதற்காகவும், தமக்கு ரொம்பவும் ஆப்தமான பரமேச்வரனோடு ஸல்லாபிப்பதற்காகவும், மருமான் கணேசரைக் கொஞ்சி விளையாடுவதற்காகவும் கைலாஸத்துக்கு வந்திருந்தார். அப்போது தம்முடைய சக்கரத்தைச் சுற்றிக் குழந்தைக்கு வேடிக்கை காட்டினார். உடனே குழந்தை தும்பிக்கையை நீட்டிச் சக்கரத்தைப் பிடுங்கிக் கொண்டு லபக்கென்று வாய்க்குள் போட்டு நன்றாக அடக்கிக்கொண்டு விட்டது. மஹாவிஷ்ணு நயமாகவும் பயமாகவும் எத்தனை பண்ணியும் அது சக்கரத்தை வெளியே போட மாட்டேனென்று அடம் பண்ணி விளையாடிற்று.

அப்போதுதான் மஹாவிஷ்ணு யுக்தி பண்ணி, காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போட்டார்.

அதைப் பார்த்ததும், எப்போதுமே சிரித்த முகமாயிருக்கும் 'ப்ரஸன்ன வதன'க் குழந்தை விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தது. அப்படிச் சிரிக்கிறபோது, வாயில் அடக்கிக் கொண்டிருந்த சக்கரம் குபுக்கென்று வெளியிலே வந்து விழுந்தது. சடக்கென்று அதை மஹாவிஷ்ணு எடுத்து வைத்துக் கொண்டுவிட்டார்.

மஹாவிஷ்ணு கைகளால் காதுகளைப் பிடித்துக் கொண்டது ஸம்ஸ்கிருதத்தில் 'தோர்பி: கர்ணம்' என்று குறிப்பிடப்பட்டது. 'தோர்பி:' என்றால் 'கைகளால்'. 'கர்ணம்' என்பது காது என்று தெரிந்ததே. கையால் காதைப் பிடித்துக் கொள்ளும் 'தோர்பி(ஹ்) கர்ண'மே தோப்பிக்கரணம், தோப்புக்கரணம் என்றெல்லாம் ஆகிவிட்டது.

குட்டிக் கரணம் என்கிற மாதிரி இங்கே 'கரணம்' இல்லை; 'கர்ணம்' என்று சொல்ல வேண்டும்.

முதலில் யாரோ மநுஷாள் இதை ஆரம்பிக்காமல் மஹாவிஷ்ணுவே ஆரம்பித்தார் என்பதற்கும் 'தோர்பி(ஹ்) கர்ணம்' என்ற வார்த்தையிலேயே 'எவிடென்ஸ்' (சான்று) இருக்கிறது. அதைப் புரியவைப்பதற்குக் கொஞ்சம் ஸம்ஸ்கிருத இலக்கணம் சொல்லித் தரணும்.

தமிழ், இங்கிலீஷ் முதலான பாஷைகளில் ஒருமை-பன்மை, ஸிங்குலர்-ப்ளூரல் என்ற இரண்டுதான் இருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட எல்லாம் பன்மை, ப்ளூரல் என்று வைத்து விடுகிறோம். ஸம்ஸ்கிருதத்தில் மட்டும் ஏக வசனம், த்வி வசனம், பஹு வசனம் என்று மூன்று இருக்கின்றன. ஏகவசனம் என்பது ஒருமை. த்வி வசனம் என்பது தமிழிலும் இங்கிலீஷிலும் இல்லாதது. அதை 'இருமை' என்று வேண்டுமானால் சொல்லலாம்! இரண்டு பேர் அல்லது இரண்டு வஸ்துவை மட்டும் அது குறிக்கும். இரண்டுக்கு மேலே போகிற எல்லாம் பஹு வசனம். சிவம்-சக்தி, பரமாத்மா-ஜீவாத்மா, பகவான்-பக்தன், ஸதி-பதி, குரு-சிஷ்யன் என்றிப்படியும், ஒரு மநுஷ்ய ஜீவனை எடுத்துக் கொண்டால் அவனுக்கு இரண்டு கண், இரண்டு காது, இரண்டு கை, இரண்டு கால் என்றெல்லாமும் இருப்பதாலோ என்னவோ, இரண்டு என்பதற்குத் தனி ஸ்தானம் தந்து 'த்வி வசனம்' என்ற ஒன்றை வைத்திருக்கிறது.

மநுஷ்யர்களால் தோப்புக் கரணம் ஆரம்பிக்கப்பட்டிருந் தால், 'கைகளால் காதுகளைப் பிடிப்பது' என்பதில் 'கைகளால்' என்பதற்கு த்விவசன வார்த்தை தான் இருக்க வேண்டும். ஏனென் றால் மநுஷ்யனுக்கு இருப்பது இரண்டு கைதானே? 'தோஸ்' என்பது கை. முதல் வேற்றுமை ஒருமையில் ஒரு கையை 'தோ:' என்று சொல்ல வேண்டும். 'கைக ளால்' என்பது மூன்றாம் வேற் றுமை. 'ஒரு கையால்' என்பதற்கு 'தோஷா' என்று சொல்ல வேண் டும். 'இரண்டு கைகளால்' என்ப தற்கு 'தோர்ப்யாம்'. மநுஷ்யர் களான நாம் இரண்டு கைகளால் போடும் தோப்புக்கரணத்தை 'தோர்ப்யாம் கர்ணம்' என்றுதான் சொல்ல வேண்டும். இது பேச்சு வழக்கில் திரிந்தால்கூட 'தோப் பாங்கரணம்' என்றுதான் ஆகி யிருக்குமே தவிர, இப்போது நாம் சொல்வது போல, அது 'தோப் பிக்கரணம்' என்றோ, அல்லது 'தோப்புக்கரணம்' என்றோ ஆகி யிருக்காது.

'தோர்பி:' என்று மூல ரூபத்தில் இருந்திருந்தால்தான் அது சிதைந்து 'தோப்பி', 'தோப்பு' என்று ஆகியிருக்கும். 'தோர்பி:' என்பதோ இரண்டுக்கு மேற்பட்ட பல கைகளைக் குறிக்கும் பஹு வசனமாக இருக்கிறது.

தோஷா – ஒரு கையால்;

தோர்ப்யாம் – இரண்டு கைக ளால்;

தோர்பி (ஹ்) – இரண்டுக்கு மேற் பட்ட கைகளால்.

விஷ்ணுவுக்கு எத்தனை கை? நாலு கை, இரண்டுக்கு மேற்பட்ட நாலு கைகளால் அவர் காதைப் பிடித்துக் கொண்டதால்தான் தெளிவாக பஹு வசனத்தில் 'தோர்பி(ஹ்)' என்று சொல்லி, அது 'தோப்பி', 'தோப்பு' என்று ஆகி யிருக்கிறது!



மழை

கர்மயோகி

அன்னை மழையை அருள் என்கிறார். சூட்சுமத்தில் அருள் ஸ்தூலத்தில் மழையாகிறது. மழை பெய்ய வருண ஜபம் செய்வதுண்டு. அதை முறையாகச் செய்தால் தவறாமல் மழை பெய்யும். கற்புக்கரசிக்கு மனம் கட்டுப் பாட்டில் உள்ளது. அந்தக் கட்டுப்பாட்டை ஆசையின் விகாரங்கள் தொடர, ஆசை உணர்ச்சியாலானது. வாழ்வில் காற்று, வெளி, மழை ஆகியவை (Vital) உணர்ச்சிக்குரியவை. ஆசையை அழித்த கற்புக்கரசிக்கு உலகில் உணர்ச்சிக்குரியவை கட்டுப்படும். எனவே அவள் 'பெய்' என்றால் மழை பெய்யும். பக்தர்கள் மழை வேண்டுமென்றால் மழையை அழைத்தால் வரும் என்கிறார் அன்னை. தியானத்திலமர்ந்து, "மழை, மழை, மழை, மழை" என்றழைத்தால் மழை வரும் என்கிறார். தண்ணீர்ப் பஞ்சமுள்ள நாளில் வெளியில் போய் உள்ளே வந்த தம்பதி தண்ணீரில்லாததால், அன்னைக்குப் பிரார்த்தனை செய்தார்கள். ஒரு மணி நேரத்தில் பெருமழை பெய்தது. தேவையான தண்ணீரைப் பிடித்தனர் என ஒரு பெண்மணி எனக்கு எழுதியிருந்தார்.

அன்னை பக்தர் விவசாயியானால், அவர் நிலத்தில் உரிய காரியங்களைச் செய்தால் தண்ணீர் வேண்டும் என்ற நாளில் பிரார்த்தனையின்றி மழை பெய்யும். பிரார்த்தனையை மேற்கொண்டால் நிச்சயமாக மழை பெய்யும். நிற்க வேண்டும் என்ற அளவுக்கும் பெய்யும்.

தன் 15 ஏக்கர் நிலத்தில் ஒருமுறை நீர் பாய்ச்சி முடிந்தவுடன் மழை பெய்வதை பக்தர் கண்டார். ஏன் நீர் பாய்ச்சியபின் மழை பெய்கிறது, முன்னமே பெய்யக் கூடாதா என நினைத்தார். நிலம் வறண்ட பின் நிர்ப்பந்தத்தால் நீர் பாய்ச்சுகிறோம் என்று நினைத்தார். தன் கடமையை வற்புறுத்தலால் முடிக்கிறோம், கடமை முடிந்தவுடன் மழை பெய்கிறது என்று புரிந்து கொண்டார். அடுத்த ஆண்டு மனதை மாற்றிக்கொண்டு ஜனவரியில் நிலம் வறண்டு போகுமுன் கால்வாய், பாத்தி போட்டு நீர் பாய்ச்ச ஆயத்தமானார். முதல் நாளே பெரு மழை பெய்தது. பாய்ச்சும் நீரைவிட மழைநீர் வளமானது. நிலம் ஆழமாக ஈரமாகி அதிக நாள் ஈரம் காயாமலிருக்கிறது என்பதால் இடைவெளி அதிகமாக விட்டு நீர் பாய்ச்சலாம். அடுத்த பாய்ச்சலுக்கு உரிய காலத்திற்கு முன் தயாரானார். மீண்டும் மழை பெய்தது. ஜனவரி முதல் ஜூன் வரை வெயிற்காலத்தில் 24 முறை தண்ணீர் பாய்ச்சுபவர் அந்த ஆண்டு ஒரே ஒருமுறைதான் தண்ணீர் பாய்ச்சினார்.

தண்ணீர் உணர்வைக் குறிக்கும். உணர்வு நெகிழ்ந்துள்ள நேரம், இடத்தில் தண்ணீர்ப் பஞ்சமிருக்காது. வறண்ட ஊர்களில் மனம் வறட்சியாய் இருக்கும். மனம் உணர்ச்சியால் நனைந்தால், நிலம் மழையால் நனையும். தண்ணீர்ப் பஞ்சம் வரப்போகிறது என்ற பொழுது அன்பர்கள் கூடிப் பிரார்த்தனை செய்தனர். அந்த ஊரில் அதன்பின் தொடர்ந்து 4 வருஷம் நீர்ப்பஞ்சம் விலகியிருந்தது. பிறகு பக்தர்கள் நீர்ப் பிரச்னையை மறந்தனர். மீண்டும் பஞ்சம் தலைதூக்கியது. நம்பிக்கையில்லாமல் பக்தர் என்பவருடன் அளவளாவினால் நீருக்குப் பஞ்சம் வருவதைக் காணலாம்.

1914 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி அன்னை முதன் முதலாக புதுவை வந்து தான் தியானத்தில் கண்ட "கிருஷ்ணா"வைக் கண்டு சில நாள் தங்கியிருந்து பிரான்சுக்குத் திரும்பினார். மீண்டும் 1920 இல் யுத்தம் முடிந்தவுடன் நிரந்தரமாகப் புதுவைக்கு வந்து பகவானுடன் தங்கிவிட்டார்.

"நான் புதுவைக்கு வந்த வருஷத்தில்தான் அளவுகடந்த மழை பெய்தது. கடந்த 100 ஆண்டுகளில் பெய்யாத மழை அது என்றனர்" என்று அன்னை கூறுகிறார். அன்னையே அருள். அருளே மனித உருவமாக வந்ததால் அதைத் தெரிவிக்க மழை வருகிறது.

அன்னைக்குச் சமர்ப்பணமாக விவசாயம் தொடங்கிய பக்தர் தான் நிலம் வாங்கிய ஆண்டு அபரிமிதமான பெருமழை பெய்ததைக் கண்டார். 30 வருஷமாக அதுபோன்ற அளவு மழையை அவர் காணவில்லை என நினைத்துக் கொண்டிருந்தபோது, "இந்த நூற்றாண்டில் இதுவரை மூன்று முறை பெருமழை பெய்துள்ளது. அதில் 1960 ஆம் ஆண்டும் ஒன்று" என்று வானிலை அறிக்கையில் கண்டார்.

தண்ணீர் அபரிமிதமான சொந்த ஊரிலிருந்து தண்ணீரில்லாத ஊருக்கு சர்க்கார் வேலையாகப் போனார். வீடு மாடியில். காலை 5 மணிக்குத் தண்ணீர் சிறிது நேரம் வரும், பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். சில நாள் கழித்து மோட்டார் ரிப்பேர், கீழே போய்த்

தண்ணீர் பிடித்து மேலே எடுத்து வரவேண்டும். வீட்டுக்காரர் மோட்டாரை ரிப்பேர் செய்யப் பிடிவாதம் செய்கிறார். அவர் பட்டபாடு குடியிருப்பவர்களும், நீர்ப் பஞ்சமான ஊரிலுள்ளவர்களும் அறிவார்கள். அவர் ஆசிரமம் வந்தபொழுது தன் வேதனைகளைச் சித்திரித்துவிட்டு, அன்னை இதற்கு வழி சொல்லியிருக்கிறாரா எனக் கேட்டு அறிந்ததுடன் கீழ்வருவனவற்றைச் சேகரம் செய்து கொண்டு போனார்.

– நீரை விரயமாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

– மனம் நெகிழ்வாக இருக்க வேண்டும்.

– நீருக்காகப் பிரார்த்திக்க வேண்டும்.

– வீட்டுக்காரர் ரிப்பேர் செய்யாவிட்டாலும் அவர் மீது கோபம் கூடாது.

– தண்ணீர் விஷயத்தில் நம் கடமைகளைச் சரிவரத் தாமதமின்றிச் செய்ய வேண்டும்.

– முடியுமானால், மோட்டாரை ரிப்பேர் செய்யும்படி வீட்டுக்காரரைக் கேட்கக்கூடாது.

– எவர் மீது எரிச்சல்பட்டாலும், நம் வீட்டில் தண்ணீர் வராது.

இந்தக் கருத்துகள் அவருக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் ஏற்றுக் கொண்டார். வீட்டுக்காரரைக் கேட்காமலிருப்பதை அவரால் ஏற்க முடியவில்லை. திரும்ப ஊர் போய்ச் சேர்வதற்குள் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு கேட்பதில்லை என முடிவு செய்தார். வீட்டிற்குப் போன பொழுது, மோட்டார் ரிப்பேராகியிருந்தது. சற்று நேரம் தண்ணீர் அதிகம் வந்தது. பெரிய நிம்மதி. ஏற்கெனவே மனம் அரை குறையாக ஏற்ற கருத்துகளை இப்பொழுது முழுமையாக ஏற்றுக் கொண்டவுடன், பஞ்சமில்லை என்று சொல்லுமளவுக்குத் தண்ணீர் வந்தது. மனம் சந்தோஷப்பட்டு, பஞ்சம் நீங்கிய பின்னும் தன் மனதை ஆசிரமக் கருத்துகளால் நிரப்பினார். அடுத்த முறை ஆசிரமம் வர அவர் புறப்படும் பொழுது அந்த ஊரில் உள்ள ஒரே ஒரு வசதியான தண்ணீர்த் திட்டத்தோடு தன் வீட்டுப்பகுதியை இணைக்கப் போகிறார்கள் எனக் கேட்டுப் பரவசப்பட்டு விட்டார்.

புதுவைக்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து ஆட்கள் ஆசிரம டிபார்ட்மெண்ட் ஒன்றில் வேலை செய்கிறார்கள். அவர்கள் சரியாக வருவதில்லை. அவர்கட்கு ஆசிரமம் மீது கோபம், அன்னையைப் பிடிக்காது. நிற்காமல் வரச் சொன்னால், ஊரில் நீர்ப்

பஞ்சமிருப்பதால் வர முடியவில்லை என்று கண்டு, அன்னையிடம் சொன்னார் தலைவர். அன்னை ஸ்ரீ அரவிந்தர் படத்தை எடுத்துக் கொண்டு ஊரை வலம் வரச் சொன்னார்கள். அடுத்த நாள் மழை அதிகமாகப் பெய்யத் தொடங்கிற்று. பல நாளாகியும் நிற்கவில்லை. மீண்டும் தலைவர் அன்னையிடம் மழை அதிகமாக இருப்பதாகச் சொன்னார். அன்னை புன்னகையுடன் கேட்டுக் கொண்டார். மழை நின்று விட்டது.

ஒரு வருடம் தொடங்கிய பொழுது பஞ்சாங்கப் பலன்களைப் பார்த்த பக்தர் ஒருவர் அந்த ஆண்டு நாடே தண்ணீருக்குக் கஷ்டப்படும் என்று அறிந்து, தன் விவசாயத்தைக் காப்பாற்ற முனைந்தபொழுது, பஞ்சாங்கம் சொல்வதையே வானிலை இலாக்காவும் சொல்லக் கேட்டுத் துணுக்குற்று, தினமும் 15 நிமிஷம் சீசன் முடியும் வரை 100 நாளைக்கு மழைக்காகப் பிரார்த்தனை செய்ய முடிவு செய்தார். பஞ்சாங்கமும், வானிலை இலாக்காவும் பொய்க்குமாறு அந்த ஆண்டு குறைவில்லாமல் மழை பெய்தது. அவருடன் பிரார்த்தனையில் உட்கார்ந்தவர், 100 நாளில் பக்தர் பிரார்த்தனையை முடித்த பின்னும் பல நாள் பிரார்த்தித்தார். சீசன் முடிந்து 4 மாதம் வரை ஒவ்வொரு மாதமும் கணிசமான மழை பெய்தது. வானிலை இலாக்கா "இது வழக்கத்திற்கு மாறானது" என்றது. இந்த உபரி மழை 3 வருடம் தொடர்ந்தது.

காவிரி நீருக்காக கர்நாடகாவும், தமிழ்நாடும் ஏன் சண்டை போட வேண்டும் என வருந்திய பம்பாய் தமிழ் அன்பர் ஒருவர் காவிரி பொங்க வேண்டுமென்று ஒரு வருஷம் பிரார்த்தனை செய்தார். அந்த ஆண்டு காவிரி பொங்கிற்று. சட்டப்படி கர்நாடகா கொடுக்க வேண்டிய நீர் தமிழ்நாட்டில் உபரியாகி உபயோகப்படுத்த முடியாமல் இறுதியில் கடலில் கலந்தது.

தான் வளர்க்கும் பூந்தோட்டத்திற்கு மழை வேண்டுமென ஒரு குழந்தை அன்னையைக் கேட்ட பொழுது, அதிக மழை என் தோட்டத்தை நாசமாக்கும், தொடர்ந்து சிறு மழை நெடு நேரம் வேண்டும் என மாலை 3 மணிக்குப் பிரார்த்தனை செய்ததில் அன்றிரவு இரவு முழுவதும் தூறலாக இருந்ததைக் கண்டு குழந்தை வியப்படைந்தது.

தஞ்சூரில் நீர்ப் பஞ்சம் என ஆசிரமம் வந்து, பிரார்த்தித்து விட்டு வீட்டுக்குப் போய் மூன்று நாள் பிரார்த்தனையை மேற்கொள்ள முடிவு செய்த பக்தர், பஸ்ஸை விட்டு வீட்டுக்குப் போன அரை மணிக்கெல்லாம் பெரு மழை பெய்தது.

விவசாயத்திலிருந்த பக்தரான இளைஞருக்கு மழையில்லை எனில் பீதி வரும். ஆனால் பிரார்த்திக்கத் தோன்றாது. பலரும் நினைவு படுத்திப் பிரார்த்தனையை மேற்கொள்வார். மறுநாள் அல்லது அடுத்த நாள் மழை பெய்யும். அடுத்த முறை மழையில்லை எனில் அன்னை நினைவு வராது. புலம்புவார். மற்றவர் பிரார்த்திக்கச் சொன்னால் செய்வார். ஓரிருநாள் கழித்து மழை வரும். 8,10 முறை பார்த்தபின் ஆச்சரியப்பட்டு பிரார்த்தனை தவறுவதேயில்லை என்றார்.

தண்ணீர்ப் பஞ்சமேயறியாத கல்கத்தாவிலிருந்து சென்னை வந்தவர் பஞ்சத்தில் துவண்டு போனார். பம்பில் தண்ணீர் செந்நிறமாக வருவதைக் கண்டு அஞ்சினார். அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு பிரார்த்தனையை மேற்கொள்ளப் பொறுமையின்றி அலறினார். தனக்கு உடனே வேறு வீடு கிடைத்ததையும், பஞ்சமே யில்லாமல் தண்ணீர் வந்ததையும் வியந்து எழுதி அதைப் பிரசுரிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

1952-54 இல் இராஜாஜி சென்னை முதலமைச்சராக இருந்தபொழுது தண்ணீர் வறண்டுவிட்டது. எல்லாக் கோயில்களிலும், மாதா கோயில், மசூதிகளில் பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக் கொண்டார். எதிர்க்கட்சிகள் ஏளனம் செய்தன. பெருமழை பெய்து பஞ்சம் நீங்கியது.

அமெரிக்காவில் மழையில்லை என பக்தர் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனைக்கு அங்கு மழையில்லை. பிரார்த்தனை செய்யும் பொழுதெல்லாம் புதுவையில் மழை பெய்தது. சுமார் 3,4, மாதம் வரை அவர் பிரார்த்தனைக்கு அமெரிக்காவில் மழை பெய்யவில்லை. பிறகு பெய்தது. தொடர்ந்து பெய்தது. அபரிமிதமாகவும் பெய்தது.

சென்னையில் அதிகமான பக்தர்களிருப்பதால், அவர்கள் மழைக்கான முயற்சியை முழுமையாக மேற்கொண்டால், சென்னையில் நீர்ப்பஞ்சம் நிரந்தரமாக விலகும்; உள்ளம் நெகிழ்ந்தால் மழை பெய்யும். வறண்ட உணர்ச்சியுடையவருடைய தொடர்பு மழைக்கான பிரார்த்தனையைப் பார்க்க இடையூறாக இருக்கும்.

இக்கட்டுரை அன்னைக்கு ஒரு மௌனமான பிரார்த்தனை. இதை எழுதிய அடுத்த 3 நாளில் புதுவையில் 12 அடி மழை. தமிழ்நாடு முழுவதும் பெருமழை, மதுரையில் 10 அடி மழை. தாம்பரம் 9 அடி மழையைப் பெற்றது. மழை, நீர் வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தால் பூரணமாகப் பலிக்கும்.

தமிழில் தவறுகளை அறிவோம்

டாக்டர் தி. முத்து கண்ணப்பர்

தாக்கல் : இதுவும் உருதுமொழிச் சொல்லே. தமிழில் 'தாக்கல்' என்றால் 'அடித்தல்', 'மோதுதல்', 'முட்டுதல்' என்று பொருள்படும்.

தாக்கு+அல் = தாக்கல். தாக்கு+தல் = தாக்குதல். தாக்கல் என்பதும் தாக்குதல் என்பதும் ஒரே பொருள் தருவனவே. 'அல்' என்பதும் 'தல்' என்பதும் விகுதி. 'தாக்கல்' என்பது 'அல்' விகுதிபெற்ற தொழிற்பெயர் என்றும், 'தாக்குதல்' என்பது 'தல்' விகுதிபெற்ற தொழிற்பெயர் என்றும் கூறும் இலக்கணம். மாடுகள் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளலாம். வலியவன் மெலியவனைத் தாக்கலாம். குத்துச்சண்டை வீரன் எதிர்த்தவனை ஒரே தாக்கில் தாக்கி வீழ்த்தலாம். ஆனால் 'விண்ணப்பத்தைத் தாக்குவதும், வேட்பு மனுக்களைத் தாக்குவதும்' நம் தமிழ் ஏடுகளில் காணப்படுகின்றன. உலகம் போற்றும் நம் தமிழ் மறையான 'திருக்குறளில்', 'பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து' என்னும் அடியைக் காணலாம். அதாவது தகர் என்பது ஆட்டுக்கடா. 'பொரு' என்றால் போரிடு என்பது பொருள். 'தாக்கல்' என்பது 'முட்டி மோதி' என்று பொருள்படும். இரண்டு ஆட்டுக் கடாக்கள் ஒன்றையொன்று தாக்கிக் கொள்கின்றன; மோதிக்கொள்கின்றன என்பது பொருள்.

'வேட்பு மனு'வைப் பதிவு செய்யலாம். உரியவரிடம் பதிவாக்கலாம். 'தாக்கல்' என்னும் நல்ல தமிழ்ச் சொல்லின் உண்மைப் பொருள் மாறாமல் இருந்தால் கவலையில்லை. ஆனால், வேறு பொருளிலல்லவா வழங்கப்படுகிறது? இது நல்ல தமிழ் வேண்டுவோரின் தலையில் பலத்த தாக்கலாக அல்லவா உள்ளது? சிந்திப்போம்!

தணிக்கை : இது மற்றுமோர் உருதுச் சொல்.

'விண்ணப்பங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன' என எழுத்தில் உள்ளதைக் காண்கிறோம். 'தணிக்கை' என்னும் சொல்லின் தமிழ்ப் பொருள் 'பார்வையிடுதல்', 'மேற்பார்வை' என்பன. 'Inspection', 'Supervision' என்னும் ஆங்கிலச் சொற்களின் நேர் தமிழ்ச் சொல் எனக் கொள்ளலாம். 'விண்ணப்பங்கள்
பார்வையிடப்பட்டன' என்பது எவ்வளவு தெ
வாக உள்ளது!

பரவாயில்லை : நம் வீட்டுக்கு வருபவர்க
நோக்கி 'இந்த நாற்காலியில் உட்காருங்க
என்றால், அவர் 'பரவாயில்லை' என்கிறார்
சற்று உடல்நலம் இல்லாதவர்களைப் பார்த்
'இப்போது உடல்நிலை எப்படி உள்ளது?' எ
றால், 'பரவாயில்லை' என்பார். 'ஏதாவ
குடிக்கிறீர்களா?' என்றால் 'பரவாயில்லை
இருக்கட்டுங்க' என்பார்.

இப்படிப் பல பொருள்தரும் ஒரு சொ
தமிழில் இல்லை. 'தாவிலை' என்று சொல்
லாமே' என்று தமிழன்பர் சிலர் கூறுவர்
'தாவிலை' என்றால் 'குற்றமில்லை' என்ப
பொருள். ஆனால் மேலே சொன்ன அத்தனை
பொருள்களையும் இது உணர்த்துவதாக
தெரியவில்லை.

இந்தப் 'பரவாயில்லை' என்னும் சொ
றொடர் இரண்டு சொற்களால் ஆனது. பர்வ
நஹி (நகி). இது ஓர் இந்திமொழிச் சொ
றொடர். இதில் ஒரு வேடிக்கை! இந்தியு
தமிழும் இனிமையாக இணைந்து உறவா
யுள்ள சொற்றொடர் இது!

'பர்வாநகி' என்னும் இத்தொடர் திராவி
இனமொழியைச் சார்ந்த தமிழ், தெலுங்
மலையாளம் முதலியனவற்றில் எடுத்தாள
பட்டுள்ளது.

முதல் சொல்லாகிய 'பர்வா' என்னும் இந்தி
சொல்லை அப்படியே வைத்துக்கொண்
தெலுங்கர் அடுத்து வரும் தங்கள் சொல்லாகி
'லேது' என்பதைச் சேர்த்து 'பர்வாலேது' எ
கிறார்கள். அவ்வாறே மலையாள மொழியின
'பர்வா இல்லா' என்கிறார்கள். தமிழில் 'பரவ
யில்லை' என்கிறோம். இப்படிச் சில சொற்க
இயல்பாய் நுழைந்து, அவ்வம்மொழிமயமா
விடுகின்றன. இத்தகைய சொற்களை விலக்
அல்லது தவிர்க்க நினைப்பது வேண்டாத வீ
செயல். இப்படி வழங்குவது பரவாயில்லை
அல்லவா?

பேட்டி : இதுவும் உருதுச் சொல்லே. 'பெ
யோரைக் காணல்' என்பது போன்ற பொருளி
பயன்படுத்தப்படும் சொல் இது. ஆங்கிலத்தி
'Interview' என்னும் சொல்லின் பொருளை
இது உணர்த்தும். 'Interview' என்னும் ஆ
கிலச் சொல்லுக்கு 'நேர்காணல்' என்று தமி
கூறப்படுகிறது. பொதுவாகப் பெரியவர்க
உயர்ந்தவர்களை மற்றவர் காண்கின்றபோ
பயன்படுத்தப்படும் சொல்தான் இந்த 'பேட்
என்னும் உருதுச்சொல். 'தங்களைக் கா

சொல்லாட்சி

இன்று படிப்பகம் ஒன்றில் சிறிது நேரம் இருந்தபோது அமுதசுரபி இதழ் கண்ணில் பட்டது. அதைப் புரட்டியபோது தங்கள் கட்டுரையைக் கண்டேன். (பிழையில்லாமல் எழுதுவது பற்றியது) அதை முழுவதும் படித்தேன். தாங்கள் பல நாள்களாக இவ்விதம் எழுதி வருகிறீர்கள் என்பதையும் தெரிந்துகொண்டேன். தாங்கள் செய்துவரும் தொண்டு இக்காலத்துக்கு இன்றியமையாத ஒன்று. இப்பொழுதெல்லாம் பிழையில்லாமல் எழுத வேண்டும் என்று சொன்னாலே பலருக்கு வேம்பாகக் கசக்கிறது. தமிழாசிரியர்கள், பேராசிரியர்கள் கூட பிழைபட எழுதுகிறார்கள்; இலக்கணப் பகைவர்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயம் பொது மக்களில் பலர் தமிழன்பர்களாய், பிழையில்லாமல் எழுதவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களாய் இருப்பது மகிழ்ச்சி தருகிறது.

தாங்கள் அத்தகைய பணி செய்து வருவது தெரிந்ததும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இனி மாதந்தோறும் தாங்கள் எழுதுகின்றவற்றைப் படிப்பேன்.

இக்கட்டுரையில் 'மற்றும்' என்ற சொல் தவறாகப் பயன்படுத்தப் படுவது பற்றி எழுதியிருந்தீர்கள். Secretary & Commissioner பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். நான் பெரிய குளம் வட்டத் தமிழாசிரியர் கழகத்தின் செயலராக இருந்த போது, பொருளாளர் பொறுப்பும் அதனுடன் இணைந்திருந்ததால் Secretary & Treasurer என்பதற்கு செயலாளரொடு பொருளாளர் என்ற சொல்லைப் பயன்படுத்தி வந்தேன். முதிய தமிழாசிரியர்கள் பலர் அச் சொல்லாட்சியை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள். இதனைத் தங்கள் ஆய்வுக்குக் கொண்டு வருகிறேன்.

கு. தாணு சுப்பிரமணியன்
6, ஆறாட்டுத் தெரு, ஒழுகினசேரி,
நாகர் கோயில் 629001

வேண்டுகிறேன்' 'தங்கள் காட்சியை வேண்டுகிறேன்,' என்று தமிழில் சொல்லலாம்.

மாமூல் : இது அரபுமொழிச் சொல். 'பழைய வழக்கம்' என்பது இதன் தமிழ்ச் சொல். இதை 'பழைமையானது', 'வழக்கமானது' என்று அழகான தமிழில் சொல்லலாமே! 'மாமூல்' என்னும் இச்சொல் 'கையூட்டு' (லஞ்சம்) என்னும் பொருளிலும் இப்போது பரவலாக வழங்கப் படுகிறது. இந்த 'மாமூல்' நமக்கு வேண்டாமே. நேர்மையான - பழைமையான தமிழ் உள்ளதே!

ரத்து : இதுவும் ஓர் அரபுமொழிச் சொல். இதற்குரிய தமிழ்ச் சொற்கள் தள்ளல், விலக்கல், கைவிடல், நீக்கல், விட்டுவிடல், விடல், விடுதல் முதலியன. இவ்வளவு தமிழ்ச் சொற்கள் இருக்க 'ரத்து' எதற்கு? இதனைத் தள்ளுபடி செய்ய வேண்டாமா?

'வரிவிதிப்பு ரத்து செய்யப்பட்டது'

'தூத்துக்குடி விரைவு வண்டி ரத்து செய்யப் பட்டது'.

'பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ரத்து செய்யப்பட்டன'.

இவ்வாறு வானொலியில் கூறப்படுவதையும், பத்திரிகைகளில் எழுதப்படுவதையும் காண்கிறோம். இவற்றை முறையே 'வரிவிதிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது'. 'ரயில்கள், பேருந்துகள் ...டா' என்று கூறலாமே! வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பரவலாக வழங்கிவரும் இந்த 'ரத்தை'த் துரத்துவோம்! நல்ல தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துவோம்.

'பாக்கி' : இந்த உருதுமொழிச் சொல் தமிழில் மிகப்பரவலாக வழங்கி வருகிறது. இதன் தமிழ் 'மிச்சம்', 'மீதி' என்பன. இந்தப் 'பாக்கி'யை நீக்கி இனி 'மிச்சம்' பிடித்து வாழ்வது நல்ல தமிழர் கடமை!

'வாபஸ்' : 'வாபஸ்' என்னும் இந்த உருதுச் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல் இருக்கிறதா என்றே சிலருக்கு ஐயம் ஏற்பட்டுள்ளது. அவ்வளவு அழுத்தம் திருத்தமாக அது தமிழில் பதிந்துள்ளது. திரும்பப் பெறுதலில் தயக்கம் காட்டுதல் நமக்கு மிகவும் பழக்கமாகிவிட்டது. தவறு என்றால் அதனைத் திரும்பப் பெறுதல் தானே பெருந்தன்மையானது? எனவே, அறிந்தோ அறியாமலோ தவறு செய்தால், பேசினால் - அதற்காக நாம் வருத்தம் தெரிவித்து அதனைத் திரும்பப்பெறுதலே (வாபஸ்) நல்லது.

'வாய்தா' : 'வாய்தா' என்னும் இந்த உருதுச் சொல்லுக்கு 'தள்ளிப்போடுதல்' 'தவணை', 'கெடு' என்பன உரிய தமிழ்ச் சொற்கள். 'பத்து நாள் வாய்தா போட்டிருக்கிறார்கள்' என்று சொல்வதை 'பத்துநாள் கெடு' அல்லது 'பத்து நாள் தள்ளிப் போட்டிருக்கிறார்கள்' என்று இடத்துக்கு உரியவாறு சொல்லலாம்/எழுதலாம்.

'பட்டுவாடா' : 'சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டது' என்று பரவலாகப் பேசப் படுகிறது. இந்த உருதுச் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொற்கள் 'கொடுக்கப்பட்டது', 'தரப்பட்டது', 'அளிக்கப்பட்டது', 'வழங்கப் பட்டது' என்பன. இவற்றில் உரிய ஒன்றைப் பயன்படுத்தலே ஏற்புடையது!

'புகார்' : "இங்கே 'புகார்' புத்தகம் வைக்கப்பட்டுள்ளது" என்று சில அலுவலகங்களில்

பார்க்கிறோம். 'புகார் செய்தார்' என்கிறோம். இந்த உருதுச் சொல்லுக்கு 'முறையீடு', 'குற்றங் குறை கூறல்' முதலியன உரிய தமிழ்ச் சொற்கள்.

தமிழில் புகார் என்பதற்குப் 'புகமாட்டார்', 'நுழையமாட்டார்' என்பனவே சரியான பொருள் களாம். காவிரிப்பூம்பட்டினத்தைக் கூடப் 'புகார்', 'பூம்புகார்' என்று சொல்வதுண்டு. அதாவது இந்தப் பொருள் இவ்வூரில்/நகரில் இல்லையென்று, அங்குள்ள மக்கள் வேற்றி டத்தில் புக (நுழைய) மாட்டார் என்பது பொருள். எனவே இனிப் 'புகாரை' விடுத்து, வேண்டும் போது உரிய இடத்தில் முறையீடு செய்வோம். வீணாகக் குற்றம் குறை கூறுதலையும் தவிர்ப் பது நல்லது.

'ஜப்தி' : நீதிமன்றங்களில் பெரிதும் வழங் கும் உருதுமொழிச் சொல். "சொத்துகளை 'ஜப்தி' செய்ய உத்தரவாயிற்று" என்றெல்லாம் சொல்வதுண்டு. கைப்பற்றல், பறித்தல், பறி முதல் செய்தல் என்னும் தமிழ்ச் சொற்களைத் தக்கவாறு பயன்படுத்தலாம்.

இவ்வாறே ஆங்கிலச் சொற்களும், பிற மொழிச் சொற்களும் தமிழில் பரவி வரு கின்றன. இந்நிலையை நாம் வளரவிடக் கூடாது. ஆனால், பிறமொழிச் சொற்களில் சில நீண்ட நெடுநாள்களாக வழக்கில் இருந்து பழைமையாகிவிட்டவை. இவற்றையெல்லாம் முழுமையாகவே தமிழாக்க வேண்டும் என் பது வீண்முயற்சிதான். தமிழில் அவற்றின் உண்மைப் பொருளை அறியவேண்டுமல்லவா? அந்தக் குறிக்கோளோடுதான் இங்கே சில அயல்மொழிச் சொற்களும், அவற்றின் தமிழ்ச் சொற்களும், விளக்கங்களும் கூறப்பட்டுள்ளன. வேண்டுவோர் அறிந்து பயன்படுத்தட்டும்! வேண்டாதோரை நாம் வற்புறுத்த முடியுமா?

ஆனாலும், இவற்றுக்குரிய தமிழ்ச் சொற் களே தமிழில் வழங்கும் காலமும் வரும். வரு தல்தான் சிறந்தது! அந்த முயற்சியையும் நாம் தளரவிடுதல் கூடாது.

திருத்தம்


ஏப்ரல் மாத இதழ் பக்கம் 55, பத்தி 3, வரி இரண்டு 'குறள்' என்பது 'மூதுரை' என்று இருத்தல் வேண்டும்.

சில ஆங்கிலச் சொற்றொடர்களும் அவற் றுக்கு நேரான தமிழ்ச் சொற்றொடர்களும் :

ஆங்கிலேயர் பல நூற்றாண்டுகளாக நம்மை ஆண்டனர். ஆதலின் அலுவலக ஆணைகள், குறிப்புகள், விளக்கங்கள் முதலியன ஆங்கி லத்திலேயே பல்லாண்டுகளாக செயல்முறை யில் உள்ளன. தமிழ் மொழி ஆட்சிமொழியாக, அரசுமொழியாகச் செயல்படுத்தப்படச் சட்டம் இயற்றப்பட்டது. தமிழ் முறைக்கு, மரபுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம். கடிதப் போக்குவரத்து, ஆணைகள், குறிப்புகள் முதலி யன சிறிது சிறிதாகத் தமிழில் வந்து கொண் டிருக்கின்றன. இவற்றை உரியவாறு செயல் படுத்தத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் என்னும் ஒரு துறையும் உள்ளது. ஆட்சிமொழிச் சட்டம் 1956இல் இயற்றப்பட்டது. முப்பத்தெட்டு ஆண்டு களாகியும் இன்னும் தமிழ் உரியவாறு செயல் படுத்தப்படவில்லை என்பது வருந்தத்தக்கது.

நம் நாடு ஏறத்தாழ 250 ஆண்டுகள் ஆங்கில ஆதிக்கத்தில் இருந்ததால் ஆங்கிலமே ஆட்சி மொழியாக வழக்கிலிருந்தது. ஆங்கிலத்தி லேயே எழுதி எழுதி ஊறிப்போன அலுவலர் களும், அதிகாரிகளும் தமிழுக்குரிய நடையில் - முறையில் ஆணைகள், குறிப்புகள், கடிதங்கள், விளக்கங்கள் முதலியவற்றை எழுதுவதில் பெரிதும் இடர்ப்படுகின்றனர். ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு நடை - மரபு உண்டு. ஆங்கில நடை அல்லது மரபை ஒட்டியே, எழுதிப் பழகிப்போன அலுவலர்கள், அப் படியே தமிழில் எழுதுகின்றனர். அவை பெரும் பாலும் நேர் மொழி பெயர்ப்பாகவே தோன்று கின்றன. தமிழ் நடையில் அவை எழுதப்படல் வேண்டும். oo

ராக்கெட்



புஷ்பா தங்கதுரை


1. ராக்கெட் என்ன தத்துவத்தில் இயங்குகிறது?

ஒரு பலூனை ஊதுங்கள். அதன் வாயை இறுகப் பிடித்திருப்பீர்கள்! இப்போது பலூனைத் தரையில் வைத்துவிட்டு வாயைத் திறந்து விடுங்கள். பலூன் என்ன செய்யும்?

அடைத்து வைத்திருந்த காற்று வெளியே ஓட, பலூன் அதன் வேகத்தில் சற்று தூரம் முன்னால் செல்லும்.

அதாவது அடை பெற்ற காற்று வழி கிடைத்தவுடன் பலூன் வாய் வழியே வெளியே போக,

அதற்கு நேர் எதிர் திசையில் பலூன் சிறிது தூரம் நகர்ந்து போகும்.



ஓர் இயக்கம் நடந்தால் அதன் நேர் எதிராக அதே அளவு எதிர் இயக்கமும் நடக்கிறது என்பது தத்துவம்.

இதை அறிந்து உலகுக்கு சொன்னவர் நியூட்டன்! அவரது மூன்றாவது 'இயக்க' தத்துவம் இது!

2. அப்படியானால் ராக்கெட்டிலிருந்து காற்று வெளியே போக அதனால் அந்த ராக்கெட் முன்னால் போகிறதா?

காற்று போகவில்லை. ராக்கெட்டுக்குள் எரி ரசாயனம் ஏதாவது ஒன்றை வைத்திருப்பார்கள்.

அதைக் கொளுத்தி விட்டதும் அது ஆவியாகி விரிவடையும். உள்ளே இருப்பதற்கு இடைவெளியில்லாமல் ராக்கெட்டின் அடி பாகத்தில் உள்ள துவாரத்தின் வழியே பிய்த்துக் கொண்டு வெளியே போகும்.

அது அப்படி வெளியே போவதால் ஓர் இயக்கம் நடைபெறுகிறது.

3. இதனால் இதற்கு எதிராக இதே அளவில் எதிர் இயக்கம் நடைபெற வேண்டுமே!

ஆமாம்! அதுவும் நடக்கிறது! ராக்கெட் எழும்பி மேலே போகிறது.

4. இந்த ராக்கெட் எவ்வளவு தூரம் மேலே போக முடியும்! சிறிது தூரம் போனபின் விழுந்து விட வேண்டுமே!

உண்மைதான்! ஒரு கல்லை எறிகிறீர்கள் வானத்தை நோக்கி! அந்தக் கல்லுக்குக் கொடுத்த வேகத்தின் அளவுக்குத்தான் அது மேலே போகும். பிறகு புவியின் ஈர்ப்பு சக்தி அதைக் கீழே விழச் செய்யும்! ராக்கெட்டின் எரி ஆவி அதை எவ்வளவு தூரம் மேலே கொண்டு போக முடியுமோ அவ்வளவு தூரம் கொண்டு போகும். பிறகு ராக்கெட் கீழே விழ வேண்டியது தான்.

5. அப்படியானால் ராக்கெட் ஆகாயத்தில் பறக்கிறது என்கிறார்களே எப்படி?


நீங்கள் ஆகாயத்தில் கல் எறிகிறீர்கள். கீழே விழுகிறது. காரணம் புவி ஈர்ப்பு. இந்தப் புவி ஈர்ப்பைச் சமாளிக்கக்கூடிய வேகத்தில் கல்லை எறிந்தால் கல் கீழே விழாது. அது பூமியைச் சுற்ற ஆரம்பித்துவிடும். அந்த வேகம் எவ்வளவு தெரியுமா? விநாடிக்கு 5 மைல்! அதாவது மணிக்கு 18000 மைல் வேகத்தில் கல் பறக்க வேண்டும்.

6. அப்போது ஏன் அது பூமியைச் சுற்றுகிறது? பூமியை விட்டு ஆகாயத்திலேயே போய் விட வேண்டியது தானே!

18000 மைலில் போனால் ட அந்த ராக்கெட்டையும் பூமி கீழே இழுக்கும்! அப்போது ராக்கெட் ஒரு வளைவாகப் பறந்து கீழே விழ விழ, அதன் வேகம் இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று தள்ளித் தள்ளிப் போக வைக்கும். விழவும் செய்யும் அதே நேரம் விழவும் விழாது. இந்த இழுபறி நிலையில் அந்த ராக்கெட் பூமியைச் சுற்ற ஆரம்பிக்கிறது.

ஏதாவது உதாரணம் சொல்லட்டுமா?

கார்த்திகை போது வாணம் சுற்றுவார்களே, பார்த்திருக்கிறீர்களா?



கயிற்றில் வாணத்தைக் கட்டித் தலைக்கு மேலே சுற்றுவார்கள்.

வாணம் சுற்றும்போது உங்கள் கயிறுதான் அதன் புவிஈர்ப்பு! வாணத்தைக் கீழே இழுக்கப் பார்க்கிறது.

ஆனால் வாணம் சுழலும் வேகம் இருக்கிறதே, அதே வேகம் அதைக் கீழே விழாமல் காப்பாற்றுகிறது.

இப்படி ஈர்ப்பு சக்தியும், வேகமும் ஒன்றுக்கொன்று விளையாட அதன் பலன் அந்த வாணம் மேலே சுற்றுகிறது. அது போலத்தான் ராக்கெட் 18000 மைல் வேகத்தில் பறக்க, புவி ஈர்ப்பு உள்ள கார்த்திகை (வாணத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் கயிறு) அதைக் கீழே இழுத்து விட முடியாமல் இருந்துவிட, ராக்கெட் பூமியைச் சுற்றிக்கொண்டே இருக்கும்.

7. சர்க்கஸில் கூண்டுக்குள் மோட்டார் சைக்கிளை ஓட்டுகிறார்களே! அது இதே தத்துவம் தானா?

ஆமாம்! வேகம் மிகக் குறைவாக இருக்கிற வரை கூண்டின் அடியில்தான் மோட்டார் சைக்கிளில் சுற்றுவார். அவர் வேகம் அதிகம் ஆக ஆக அவர் கூண்டின் நட்ட நடுவில் அட்டகாசமாகச் சுற்றிக்கொண்டிருப்பார். கீழே நோக்கி விழமாட்டார். இந்தத் தத்துவத்தில்தான் ராக்கெட்டும் பூமியைச் சுற்றுகிறது. அதன் வேகம்தான் அதைக் கீழே விழாமல் காப்பாற்றுகிறது.

8. கிரகங்கள் எல்லாம் சூரியனைச் சுற்றுகின்றனவே, அவை எப்படி?

இதே தத்துவம்தான் அங்கேயும். தங்கள் தங்கள் வேகங்களுக்கு இணங்க சூரியனை வெவ்வேறு சுற்றுப் பாதைகளில் கின்றன.

9. இந்த ராக்கெட் பூ விட்டு வெளியே போக வே மானால்...?

சரி, பூமியை விட்டு வெ போக வேண்டுமானால் அப் அதற்கு 25000 மைல் வேண்டும். இந்த வேக பூமியின் ஈர்ப்பு முழுவ தாண்டி வெளியே போய்வ போய்க்கொண்டே இருக்கும்! வாயு அப்போது தேவைப்பட ஏனெனில் அந்த உயரத்தில் ஈர்ப்பு இல்லை, காற்று போ இதர உராயும் தடங்கல்க இல்லை. இப்படிப் போகும் கெட்களைக் குறிப்பிட்ட களில் திருப்பிவிட்டால் குறிப் கிரகங்களைப் போய் அடையும்

தொலைபேசி : 5228545, 510535

ஸ்ரீராம் டிரஸ்ட்

(அமுதசுரபி வெளியீட்டாளர்கள்)

தபால் பை : 5043, 145, லிங்கச் செட்டி தெரு, சென்னை-1

'அமுதசுரபி' ஆயுள் சந்தாத் திட்டம் விதிமுறைகள்

1. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் / பெண் / இருபாலரும் இந்தத் திட்டத்தில் சேரலாம்.
2. ஒரு முறை ரூ. 1,000/-ம் செலுத்தியவர்கள் பிறகு எந்தத் தொகையும் செலுத்த வேண்டாம். இந்தத் தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. இந்தத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.
3. சந்தாதாரரின் ஆயுட்காலம் முழுமையும் ஒவ்வொரு மாதமும் அமுதசுரபியும் மற்றும் ஆண்டுதோறும் தீபாவளி மலரும் அனுப்பி வைக்கப்படும்.
4. ஆயுள் சந்தாதாரர், தம்முடைய ஆயுள் சந்தா உரிமையை வேறு - ஒருவருக்கு மாற்ற இயலாது.

இந்தத் திட்டத்தில் சேர்பவர்களுக்கு ரூ.101/– மதிப்புள்ள நூல்கள் அன்பளிப்பாக அளிக்கப்படும். (நீதியரசர் ச. மோகன் எழுதிய தியாக தீபம் ரூ.40/– ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளிய அமுத மொழி ரூ.20/– கமலாபத்மகிரீசன் எழுதிய பாரதியும் புஷ்கினும் ரூ.16/– வசுமதி ராமசுவாமி எழுதிய சந்தனச் சிமிழ் ரூ.25/–)

இங்கு கத்தரிக்கவும்

'அமுதசுரபி' - ஆயுள் சந்தாதாரர் திட்டம்

விண்ணப்பப் படிவம்

பெயர் : ....

பிறந்த தேதி : .... தொழில் : ....

முகவரி :

ஆயுள் சந்தாதாரர் திட்ட விதிமுறைகள்படி, இத்துடன் ரூ. 1,000/-ம் (ரூபாய் ஆயிரம் மட்டும்) ரொக்கம்/செக்/டிராப்ட் / எண் .... தேதி.................... வங்கி..) அனுப்பியுள்ளேன். மேலே குறிப்பிட்ட முகவரிக்கு 'அமுதசுரபி' இதழ்களைத் தொடர்ந்து அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

கையொப்பம்.

தனிமரத் தோப்பு

ராஜேந்திரகுமார்

4

செண்பகப் பூவின் நறுமணம் நாசியை நெருடியது. சற்றே தள்ளியிருந்த மல்லிகைப் பந்தலில் நேற்று மாலை மொட்டவிழ்ந்தும் செடியிலிருந்த காரணத்தால் வாடாமல் இன்னமும் காற்றில் பரவ விட்ட மணமும் கலவையாகக் கலந்து சுகமாக இருந்தது. தன்னை மறந்த நிலையில் தாயின் சமாதியையே பார்த்துக் கொண்டிருக்க அனாமிகா 'எனக்குப் பிடிக்காது' என்ற சஞ்சீவியின் குரலுக்குத் திரும்பிப் பார்த்தாள்.

"உம்! என்ன? எது பிடிக்காது உனக்கு?"

"எதையும் அரைகுறையாகத் தெரிஞ்சுக்கறது பிடிக்காது. துப்பறியும் நாவல் படிக்க எடுத்தால்கூட கடைசிப் பக்கத்தைப் படித்துப் பார்த்து முடிவைத் தெரிஞ்சுக்கிட்டுதான் முதல் பக்கத்தையே புரட்டிப் பார்க்கிறவன் நான். சஸ்பென்ஸுன்னா கொஞ்சம்கூடப் பிடிக்காது".

"சரி... அதை ஏன் இப்ப எங்கிட்டே சொல்கிறாயாம்?"

"உன் அம்மாவைப் பற்றிச் சொன்னீங்க. சரி. அதைப் பாதியிலே விட்டுட்டா எனக்குப் பிடிக்காது".

"என்ன சொன்னேன்? என் அம்மாவைப் பற்றி என்ன சொன்னேன்?"

"அதான் கடைசி வரை தனி மரமாகவே இருந்து செத்துப் போனாங்கன்னு!"

"அது எதுக்கு உனக்கு? அதைத் தெரிஞ்சு உனக்குப் ஆகப் போகிறதென்ன?"

"பெரிசா ஒண்ணும் ஆகப் போகிறதில்லை. என்னமோ தெரியலை. ஒரு க்யூரியாஸிடி".

அவள் நடக்கத் தொடங்கவே - ஓடிப் போய்க் குறுக்கே கைகளை மறித்து நிறுத்தினான். "கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்?" என்றவன் கேட்டான்: "சொல்லேன், உங்க அம்மா ஏன் தனி மரமானதாகச் சொன்னே?"

"அது பெரிய கதை".

"சுருக்கமா இரண்டே வார்த்தையிலே சொல்லேன்".

"இரண்டே வார்த்தை சொல்லலாமா?"

"ஷ்யூர்".

"காலத்தின் கட்டாயம்" என்றவள் அவனை விட்டு விலகி நகர்ந்து போனதும் -

'ஙே' என்று விழித்தவாறு நின்று கொண்டிருந்தான் - சஞ்சீவி.

உதட்டை மென்று சிரித்துக் கொண்டே போய் விட்டாள், அனாமிகா.

அவளுக்கு அவன் சுறுசுறுப்பு பிடித்திருந்தது.

மைதானத்தில் கும்பலோடு இவள் அமர்ந்து கன்னத்தைத் தாங்கிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது -

பிடிவாதமாக காலால் பந்தை லாகவமாகச் சுழற்றிச் சுற்றி அடுத்தவர் கால் படாமல் உருட்டிக் கொண்டு போவதும், கோல் கீப்பர் ஏமாந்த நேரம் பார்த்து நெட்டுக்குள்ளே அனுப்புவதும் - தன் நண்பர்கள் கைகளோடு கைகளை மோதித் தட்டி விட்டு உற்சாகக் கூத்தாடுவதும் -

பேசிக் கொண்டே முன்னால் போகும் நண்பன் - "அதைப் பத்தி நீ என்ன நினைக்கிறே சஞ்சீவி?" என்று கேட்கும்போதுதான் வந்து பின்னால் நின்று "எதைப் பத்திக் கேட்கிறே?"

"பாதகா... மறுபடியும் எல்லாத்தையும் சொல்லி அழணுமா? சொல்கிறப்ப எங்கே பராக்குப் பார்த்துக்கிட்டிருந்தே?"

"நான் எங்கே இங்கே இருந்தேன்? காண்டீனைத் தாண்டி வந்தோமா? புதுசா ஸ்பெஷல் வடை வாசனை வந்ததா? உள்ளே போய் இரண்டு வடை தின்று காப்பியும் குடிச்சிட்டு ஓடி வந்து இப்பதான் சேர்ந்துகிட்டேன்".

"பாவி! அவ்வளவு சீக்கிரமாகவா? கடிச்சுத் தின்னியா? இல்லே, யானை மாதிரி முழுசா முழுங்கிட்டியா?"

மரத்துக்குப் பின்னால் நின்று கேட்டுக் கொண்டிருக்கும் அனாமிகா வாய் பொத்தி சிரிப்பை அடக்கி ஓடுவாள். அதை –

பல தடவை பார்த்திருக்கிறான்.

அவளுக்கு இவன் குறும்புத்தனம் மிகவும் பிடிக்கும்.

பயம் அதிகமுள்ள தனபாக்கியம் புரபசர் பாடம் எடுக்கும்போது வகுப்பின் பின் வரிசைக்கும் சுவருக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் நடக்காமல் கைகளைக் கட்டிக் கொண்டு கண்களை உருட்டிக்கொண்டு பேய் போல தானாக நகர்ந்து அந்தக் கடைசிக்கும், இந்தக் கடைசிக்கும் போய் வந்து நடுங்க வைப்பாள்.

கதறியவாறு அந்தம்மாள் போய் பிரின்ஸி பாலோடு வருவதற்குள் சக்கரம் அமைந்த ஸ்கேட்டிங் பூட்ஸைக் கழற்றி மறைத்து வைத்து நல்ல பூட்ஸை அணிந்து நல்ல பிள்ளையாக அமர்ந்து கொண்டு விடுவான்.

இவனுக்குப் பதிலாக புரபசருக்குத்தான் பிரின்ஸிபாலிடம் டோஸ் கிடைக்கும்.

வகுப்பிலேயே திமிர் பிடித்தவள் என்று பெயர் வாங்கிய மீனாட்சியின் டிபன் கேரியரைத் தள்ளிக்கொண்டு போய் வழித்து வழித்துத் தின்று விட்டு ரப்பர் பல்லி, தேள், பாம்பு என்று போட்டு வைத்து விடுவான். இடைவேளையின்போது கும்பலுக்கு நடுவில் டிபன் பாக்ஸைத் திறந்தவள் டப்பாவும் மூடியும் பக்கத்துக்கு ஒன்றாகப் பறக்க விட்டு அலறுவதை ரசித்துப் பார்ப்பான்.

அமர்ந்திருக்கும் அனாமிகாவும் சிரித்து விடுவாள்.

ஒருமுறை – அந்த அனாமிகாவின் கார் கல்லூரி வளாகத்தைத் தாண்டி வரும்போது அந்த ரகளையைப் பார்த்தாள்.

நாலைந்து மாணவர்கள் இந்த சஞ்சீவியைப் போட்டு அடித்துத் துவைத்துக் கொண்டிருந்தார்கள். இவள் அழுத்திய ஹார்ன் ஒலிக்கு மற்றவர்கள் ஓடி விட – இவன் மட்டும் தரையில் ரத்தக் களறியாகக் கிடக்க –

ஓடிப்போய் அவனைத் தூக்கி நிறுத்தி கைத்தாங்கலாகக் காருக்குக் கூட்டி வந்தாள். "ஐயோ பக்கத்தில ஆஸ்பத்திரிகூட எதுவுமில்லையே".

"ஆஸ்பத்திரி வேணாம்" முனகலாகச் சொன்னான், "வீட்டுக்குப் போயேன்".

"விலாசம் சொல்லு".

"ஏன் உன் வீட்டு விலாசம் உனக்கே தெரியாதா?"

"மைகாட்! என் வீட்டுக்கா? நோ, நெவர்!"

"இத பாரு. இன்னைக்கு எப்படியாவது உன் வீட்டுக்கு வருகிறதுன்னு தீர்மானம் பண்ணிதான் சிநேகிதர்களை விட்டு என்னை அடிக்கிற மாதிரி பாவலாப் பண்ணச் சொன்னேன்".

"நீ எதுக்கு என் வீட்டுக்கு வரணும்?"

"நீதான் ஆள் வைச்சு என்னை அடிச்சுப் போட்டேன்னு கூசாம உங்கப்பாகிட்டே பொய் சொல்லப்போறேன்".

"நம்ப மாட்டார்".

"நம்பும்படியா சொல்ல எனக்குத் திறமை இருக்கு. நீ போ!"

"என்ன சொன்னே? உன் சிநேகிதர்கள் அடிச்ச பாவ்லா அடியிலா இப்படி பாளம் பாளமா வெடிச்சு ரத்தம் வருது?"

"எது? இதுவா? காயமா?" என்று ஒவ்வொன்றாக பிய்த்துப் போட்டான். பிளாஸ்திரியை நடுவில வெட்டி டிஞ்சர் மருந்தில துவைச்சு பஞ்சு மேலே ஒட்டிட்டா டிட்டோ காயம் மாதிரியே தெரியும். எப்படி? நல்லா ஏமாந்துட்டியா?"

கார்க் கதவைத் தள்ளித் திறந்தாள். "அவுட், அவுட்..."

"ஓ... நோ... ப்ளீஸ், ஹாஸ்டல் மெஸ்ஸிலேயும், கான்டீன்லேயும் சாப்பிட்ட காப்பிக்கு நாக்கே செத்துப் போச்சு. ஒரு நாளாவது உன் வீட்டு பில்டர் காப்பி சாப்பிட்டால்தான் நாக்குக்கு உயிர் வருமாம்".

"யார் சொன்னது?"

"உப நிஷத்துகள்லே சொல்லியிருக்கு".

சிரித்து விட்டாள்.

"அப்பாடா சிரிச்சாச்சா! அப்ப காப்பி உண்டு. தாங்க்யூ".

காரை நகர்த்தினாள்.

வீட்டு வாசலில் காரை நிறுத்தியதும் கேட்டான்: "உங்க அப்பா இருப்பாரா?"


"ஏன் பயமாயிருக்கா?"

"இல்லை. அவரைப் பார்த்து மாமனாரேன்னு கூப்பிட ஆசை".

"உதை. உதைபடுவே. அந்த வேலையெல்லாம் வச்சுக்காதே. உனக்கென்ன? காப்பி வேணும். மணமும் குணமுமாக. தரச் சொல்றேன். குடிச்சிட்டுப் போய்கிட்டே இரு. அதை விட்டு அப்பா, ஆட்டுக் குட்டின்னு கேட்டுகிட்டிருக்காதே. முழுசா போய் ஹாஸ்டல் சேர மாட்டே" – கார்க் கதவைத் தள்ளி இறக்கினாள்.

"இறங்கிக்கோ".

ஹாலுக்குள் போனதும் சோபாவைக் காட்டினாள். "வாலாட்டாமல் உட்கார்ந்திரு.



காப்பி சொல்லிட்டு வரேன். தாயம்மா! ஒரு ஸ்பெஷல் காப்பி போட்டுக் கொண்டு வா" என்றவாறே உள்ளே போனதும் –

பார்வையால் சுவரை – சுவரில் இருந்த படங்களை – வருடியவன், நிமிர்ந்தான்.

அவள் வந்ததும் – "வாபஸ் வாங்கிட்டேன்" என்றான்.

"எது? காப்பி கேட்டதையா? பரவாயில்லே. சொல்லி ஆச்சு. சாப்பிட்டுட்டே போ".

"அதைச் சொல்லல்லே. உங்கம்மா யாரு, ஏன் அப்படித் தனி மரமா இருந்தாங்கன்னு கேட்டேனே. அதை வாபஸ் வாங்கிட்டேன். உங்கம்மா பெயர் வசந்த மாளவிகா தானே?"

"அவங்க பெயர் உனக்கெப்படித் தெரியும்?"

"பெயர் மட்டுமில்லே. அநேகமா சரித்திரமே தெரியும்னு நினைக்கிறேன்".

அவனைப் பார்த்துக் கொண்டே இருந்த வளின் கண்கள் கலங்கின.

தலை குனிந்து கொண்டாள்.

"அப்பா!" என்ற மகளின் குரலுக்குத் திரும்பிப் பார்த்தார், சஞ்சீவி. மகள் இனியா கண்ணாடிக் கதவைப் பாதி திறந்து நின்றாள்.

"என்னப்பா இது? ஏ.ஸி. அறையிலே, அதுவும் தூங்கிட்டு இருந்த எனக்குக் கேட்டது டெலிஃபோன் ஓசை. வெளியே அதுவும் கண் விழிச்சுகிட்டிருக்கிற உங்களுக்குக் கேட்கலையா? போங்கப்பா. ரெஸ்டாரெண்ட் லேர்ந்து ஃபோன் பேசறாங்க. மதிய சாப்பாட்டுக்கு என்ன வேணும்னு கேட்கிறாங்க?"

"எனக்குப் பசி இல்லே. மந்தமாயிருக்கு. ஒரே ஒரு நான், மட்டன் ஆர் சிக்கன் கறி. அது போதும். உனக்கென்ன வேணுமோ சொல்லிக்க!".

"நான்-வெஜிடேரியனா? அம்மா இல்லாத தைரியமா?"

"இல்லே. நான்-வெஜ் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும்".

உள்ளே போய் ஃபோனை எடுத்துத் தனக்கு ஒரு சைவ சாப்பாடும் அப்பாவுக்கு நான், கறிக் குழம்பும் சொல்லி விட்டு ஃபோனை வைக்கும்போதுதான் மனதில் கேள்வி வந்தது.

'அவளுக்குப் பிடிக்கும் என்றாரே! அம்மா, ஆர்தடக்ஸ். பூண்டு கூடச் சேர்த்துக்காத ஜென்மமாச்சே! அப்புறம் எந்த 'அவளை'ச் சொல்கிறார்?' திரும்பிப் பார்த்தபோது – சொன்னாள், "அப்பா! பிராடுப்பா நீங்க".

கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் முதுகைக் காட்டியவாறு கடலைப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

அவரோடு பேச எழுந்தவள் – அவர் தனிமையைக் கெடுக்கப் பிடிக்காமல் மீண்டும் அமர்ந்து குட்டை மேஜை மேலிருந்த அன்றைய பத்திரிகையைப் பிரித்துத் தலைப்புகளைப் படிக்கலானாள்.

பங்களாவில் – ஏ.ஸி. அறையில் – எதிரே இருந்த டிரஸ்ஸிங் டேபிளின் மூன்று கண்ணாடிகளும் அனாமிகாவை மூன்று கோணங்களில் காட்டிக் கொண்டிருக்க –

சிலையாய் அமர்ந்திருந்தாள், அனாமிகா. எதிரேயிருந்த பீங்கான் கோப்பையில் நரையைக் கறுப்பாக்கும் டை கலந்து வைக்கப் பட்டிருந்தது. அப்படியுமிப்படியுமாக தலையைத் திருப்பிப் பார்த்தாள். முன் நெற்றியில் ஆரம்பித்து ஒரு பட்டைப் போல வெள்ளை நரை பின்னோக்கிச் சென்றது.

பீங்கான் கோப்பையில் பிரஷ்ஷைத் துவைத்துத் துவைத்து அக்கறையாக அந்த வெள்ளைப் பட்டையைக் கறுப்பாக்கினாள். காதோரமாக இருந்த உதிரி நரைகளைப் பார்க்கும்போது –

நினைத்துக் கொண்டாள். இத்தனை நாளும் அலட்சியம் செய்த நரையை மறைக்கும் ஆசை இன்று மட்டும் வருகிறது!

ஏன்?

கதவு தட்டப்பட்டது. திரும்பாமல் சொன்னாள் : "உள்ளே வா, ராஜாத்தி!".

உள்ளே வந்த ராஜாத்தியின் கண்களில் சில விநாடி நேர வியப்பு தோன்றி மறைந்தது.

"சொல்லேன் ராஜாத்தி" என்றாள், அவளைப் பாராமலே.

"மானேஜரய்யா வேலைக்குத் திரும்பிட்டாரும்மா!".

"எதிர்பார்த்ததுதான்".

"உங்களை அவசரமாக் கீழே வரச் சொல்றார்".

கோபமாகத் திரும்பிப் பார்த்தாள் : "அவரை இங்கே வரச் சொல்லு".

"அய. அதில்லையம்மா. ஃபோன் வந்திருக்கு".

"அவரே பேசிப்பார்".

"அய. இது மெட்ராஸ்லேர்ந்து வந்திருக்கும்மா. பாப்பா பேசுது. வினிதா பாப்பா".

மலச்சிக்கல் நீங்க

ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அந்தச் சாற்றில் அரைத் தேக்கரண்டியளவு சோற்று உப்பைப் போட்டுக் கலக்கி விடியற்காலையில் சாப்பிட வேண்டும்.

மூன்று நாள் சாப்பிட்டால் போதும்.



— ஜி. எஸ்.

இருமல்



மிளகுத் தூளும், பனை வெல்லமும் சம அளவாகக் கலந்து சுண்டைக்காய் அளவு சாப்பிட்டால் சூட்டு இருமல் அடங்கும்.

மீண்டும் முகம் இறுக, திரும்பிப் பார்த்தாள். "அம்மா எஸ்டேட்டுக்குப் போயிருக்கிறதாகச் சொல்லி, அவரையே விவரம் கேட்டுக்கச் சொல்லு".

"அம்மா! பேசறது, உங்க குழந்தை!"

"அந்த உறவெல்லாம் வெட்டி எறிஞ்சாச்சு. எல்லாம் பதினாறு வருஷத்துக்கு முந்தியே முடங்கிப் போன பழைய கதை".

"ஆனாலும் - பாப்பா ஏதோ ஆசையா" என்றவள், இவள் பார்த்த பார்வைக்குப் பயந்து போய், "சரி... சரி... அப்படியே சொல்லிடச் சொல்றேன்" என்று வெளியேறிப் போனதும் கறுப்பு மசி பிரஷ்ஷை மீண்டும் எடுத்தாள்.

"எல்லா உறவுகளுக்கும் முழுக்குப் போட்டு பல வருஷமாச்சு. இத்தனை வருஷமா வராத பாசம் இப்ப மட்டும் பொத்துகிட்டு வருகிறதாக்கும்?"

இரண்டு படிக்கொரு காலாக வைத்து இறங்கி வந்த ராஜாத்தி ரிசப்ஷனில் ஃபோன் வாயைப் பொத்தியிருந்த மானேஜரிடம் சொன்னாள்.

கேள்வியாகப் பார்த்தார்.

"சீக்கிரமாச் சொல்லிடுங்கைய்யா. அம்மா இறங்கி வருகிற நிலையில் இல்லே".

பொத்திய கையை விலக்கி உரத்த குரலில் சொன்னார் : "ஸாரி பாப்பா! அம்மா எஸ்டேட் பக்கம் போயிருக்காப்போல இருக்கு. நான் லீவ் முடிஞ்சு இப்பதான் வந்தேனா - இன்னமும் சரியா செட்டில் ஆகாததினாலே தெரியலை. என்ன விஷயம் சொல்லு? அவங்க வந்ததும் சொல்றேன்".

ஃபோனில் குரல் சீற்றமாக ஒலித்தது. "நா சென்ஸ்! ஒரு தாய்க்கும் மகளுக்கும் நடுவே ஆயிரமிருக்கும். நீர் என்னய்யா நடுவி ஊறுகாய்?"

"சரி... அப்படியே சொல்லிடறேன்".

"ஏய்...ய்...ய்ய்... வேணாம். நான் அங் வருகிறதாகச் சொல்லு".

"என்றைக்கு?"

"உடனே! கிளம்பியாச்சு. காரிலே வரே என்னோட சில கெஸ்ட்ங்க வராங்க. ரெண் காட்டேஜை ப்ரீயா வைச்சு வையுங்க".

"அவ்வளவுதானே? வைச்சுடட்டுமா?"

சென்னையில் எரிச்சலாக ஃபோனை அழுத்திக் கோபமாக வைத்தாள், வினிதா.

"பாஸ்டர்ட்! என் அம்மாகிட்டே பேசறதுக்கு கண்டவங்ககிட்டே அனுமதி வாங்க வேண் யிருக்கு. சே!" வாய் மட்டும் புலம்பியதே தவி மனம் வெட்கப்பட்டு நினைத்தது.

"கூப்பிட்டதும் ஆசையாக ஓடிவரும் அ வுக்கு நான் என்ன அப்படி நெருங்கிப் பழ விட்டேன்? குழந்தையிலிருந்து அப்படி என் நெருக்கமிருந்தது?

'அப்பா இறந்தபோதுகூட சவ அடக்க துக்குப் போய் - உடனே திரும்பி - 'காரியத்துக் வருகிறேன்' என்று அந்நியர்களைப் போல ஓ வந்தவள்தானே, நான்? இப்ப பாசத்துக் உரிமை கொண்டாட என்ன உரிமை இரு கிறது?'

அச்சமாக நினைத்துப் பார்த்தாள் ஃபோனில் பேசவே இத்தனை தயங்கு இவளா 'பணம் வேணும்' என்று கேட்டது அள்ளித் தரப் போகிறாள்?

நம்புவதில் சிரமம் வரவர ஒ தீர்மானத்துக்கு வந்தாள்.


அப்பாவின் உயிலின் இரண்டாவது ஷரத்தைக் கொண்டு வர வேண்டியதுதான் நடத்திக் காட்ட வேண்டியதுதான்.

'அவள் உயிரோடு இருக்கும்வரை சொத்து களை விற்க, பிள்ளைகளுக்கு எந்த உரிமை மில்லை. அவள் மரணத்துக்குப் பிறகு,

கதவினைத் திறந்து உள்ளே வந்தது, அந் ஆறடி உயரமான பயங்கர உருவம். முகம் முழுவதும் அச்சம் தரும் அறுப்பு வடுக்கள்.

"வா, பாண்டி! உனக்கு வேலை தர போகிறேன்" என்றாள், தீர்க்கமான குரலில் "என்னோட ஊருக்கு வருகிறாய், நீ!"

—தொடரு



ண்மணி

இசைஞானி இளையராஜாவின் ன்னிசையில் கவிஞர் வாலி, லவர் புலமைப்பித்தன், கவிஞர் த்துலிங்கம் ஆகியோர் எழுதிய ட்டு இனிய பாடல்கள் இந்தப் டல் கேசட்டில் இடம் பெற் ள்ளன.

லஸ்ல 'ஜே' பஸ்ல, நேற்று ந்த காற்று, மடிசார் புடைவை, ஓ ன் தேவ தேவியே, உடல் தழுவத் ழுவ, ஆசை வந்த இதயம், சரி ான பருப்புப் பொடி - ஆகிய ாடல்களை மனோ, ஜானகி, ளையராஜா, சித்ரா, எஸ்.பி. ாலசுப்ரமணியம், லேகா, வர்ணலதா, மலேசியா வாசு தவன் ஆகியோர் தங்களது இனிய ரலில் பாடியுள்ளார்கள்: தாளம் பாட வைக்கும் பாடல்கள்.

ஊரெல்லாம் பூப்பந்தல்

ஆத்தங்கரைப் பிள்ளையாரே, துசா ஒரு வெட்கம், சந்தனப் வே, வெட்ட வெளியிலே, அந்த ரத்தில் பந்தல், சந்தனப் பூவே ஆகிய பாடல்கள் அடங்கியது இந்தப் . பூப்பந்தல், மின்மினி, மனோ, உமா ரமணன், ஸ்வர்ண லதா, தியாகராஜன், லதா ஆகி யோர் இப் பாடல்களை தேவாவின் தேனிசையில் பாடியுள்ளனர்.

செந்தமிழ்ச் செல்வன்

மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதனும் இசைஞானி இளையராஜாவும் இணைந்து இசையமைத்துள்ள படம் இது. பாடல்களை கவிஞர் வாலி எழுதி யிருக்கிறார்.

பாட்டு எசப்பாட்டு, தாய்க் குலமே, மச்சான் என்னைக் கேளு, குயிலே கூடு எங்கே, ராத்திரிப் பொழுது, ஒடுங்க காளைகளா, குயிலே ஆகிய பாடல்களை எஸ்.பி.பி., சித்ரா, ஸ்வர்ணலதா, மலேசியா வாசுதேவன்- ஆகியோர் மிக அருமையாகப் பாடியுள் ளார்கள்.

மண்ணுக்கு மரியாதை

புதிய இசையமைப்பாளர் தேவ தேவன் இசையில் அன்புதுரை, உதயபாரதி, பிறைசூடன், அருவி ராதா, மோகன் ஆகிய கவிஞர்கள் எழுதிய 6 பாடல்கள் இந்தப் பாடல் கேசட்டில் இடம் பெற் றுள்ளன. மலேசியா வாசுதேவன், மனோ, சித்ரா, ஸ்வர்ணலதா, ஜெயச்சந்திரன், ரஜினி, சுனந்தா ஆகியோர் சிறப்பாகப் பாடிய பாதையில் பள்ளம், பொன்மானே, பூமழையோ, ஆதிசக்தி ஆனவளே, ஆலமரம் போல, ராத்திரி இன்னும், ஆகிய 6 பாடல்கள் இக் கேசட்டில் இடம் பெற்றுள்ளன.

வாழ்க சனநாயகம்

ஏ.பிஸிடி., கோடம்பாக்கம், அடேய் மச்சி, அடி பூங்குயிலே, அம்மா வாங்கோ, சைதாப் பேட்டை சிங்காரி, வாங்கோ - ஆகிய பாடல்களை மன்சூர் அலிகான் இசையில் சுபா, சுரேஷ் பீட்டர்ஸ், மனோ, அனுபமா, டி.எஸ். ராகவேந்தர், அந்தோணி, பழனி, மன்சூர் அலிகான் ஆகி யோர் பாடியுள்ளனர்.


(மேற்காணும் ஐந்து கேசட் களும் வெளியீடு - பிரமிடு ஆடியோ, 73, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 34. ஒவ் வொன்றும் விலை ரூ. 30/-)


ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்/ மாண்புமிகு சந்திரஹரி

இந்தக் கேசட்டில் இரண்டு படப்பாடல்கள் இடம் பெற் றுள்ளன. கங்கை அமரன் இசை யில் இப்படங்களின் பாடல்களை கவிஞர் வாலி, தஞ்சை வாணன் மற்றும் கங்கை அமரன் எழுதி யுள்ளனர். 'ஆட்டம் பாட்டம் கொண் டாட்டம்' படத்தில் நான்கு பாடல் களும், மாண்புமிகு சந்திரஹரியில் ஐந்து பாடல்களும் இடம் பெற் றுள்ளன.

(வெளியீடு -ஸ்ரீதேவி ஆடியோ, சென்னை - 34. விலை - ரூ. 30/-)

— அறந்தாங்கி சங்கர்





☆ தங்கத்தேர் திட்ட ஆலோசகர் திரு டி.கே. சேதுராமன் ஐ.ஏ.ஏ. எஸ்

இந்தியா என்றில்லை. உலகம் முழுக்க பக்தர்களின் அன்புத் தெய்வமாக இருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் பகவான் பாலாஜி, 'கோவிந்தா, கோவிந்தா' என்கிற சரண கோஷங்களுடன் பக்தர்களைத் தம் வயப்படுத்தித் திருமலையில் அருளாட்சி புரிகிறவர்.

ஒரு தங்கத் தேர் உருவாகிறது

இந்த செல்வம் கொழிக்கும் திருமலை வேங்கடாசலபதி ஆலயத்திற்கு இதுவரை தங்கத்தேர் இல்லாதது மிகப் பெரிய ஆச்சர்யமே!

மரத்தேர் ஒன்றும், வெள்ளித் தேர் ஒன்றும் ஆலயத்தின் எதிர்ப்புறம் கம்பீரமாய் தத்தமது இடங்களில் நின்றிருக்க, அமைதியாய் கீழ்த்திருப்பதியில் ஒரு தங்கத் தேர் உருவாகிக் கொண்டிருக்கிறது.

திருப்பதி திருமலை தேவஸ்தான நிர்வாகக் கட்டடத்தில் தங்கத் தேர் தயாரிப்புப் பணிகள் தமிழ்நாடு பூம்புகார் கலைக் கழகத்தின் உறுதுணையுடன் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன.

தங்கத் தேர் திட்டத்தின் ஆலோசகர் திரு டி.கே. சேதுராமன், ஐ.ஏ.எஸ். அவர்களைச் சந்தித்தோம்.

மாதிரி வரைபடம் நம்முன் விரிக்கப்பட்டு, விவரிக்கப்பட்டது. சக்கரத்திலிருந்து கும்பம் வரை இருபத்தி ஒன்றரை அடி உயரம். அகலம் ஐந்தரை அடி. திருமலைக் கோயிலில் பொன் வேயப்பட்ட தங்கவிமான ஆனந்த நிலையத்தைப் போன்ற அமைப்புடன் தேரின் மேல் பாகம். மத்தியில் உற்சவர் அமர, தங்க ஊஞ்சல்.

உற்சவரை அழைத்துச் செல்லும் இரு குதிரைகள். ஏழுரை அடியில் கீழ்த்தளம்.

5 டன் மைசூர் தேக்கும், 750 கிலோ செம்பும், 28 கிலோ தங்கமும் தேவைப்படும் என்று திட்டமிட்டுப் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. மொத்தச் செலவு ரூபாய் இரண்டரைக் கோடி ஆகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

தேரின் ஒவ்வோர் இடத்திலும் மிக நுண்ணிய வேலைப்பாடுகள்.



☆ பூம்புகார் நிறுவனம் வடிவமைத்த ச கொடுக்கும் வேலைப்பாடமைந்த பாகங்கள், செப்புத்தகட்டில்.

படங்கள் : யோகா



☆ செப்புத் தகடுகள் எடைப் போடப்படுகின்றன.

அடுக்கடுக்கான தளங்களின் கூடுகளுக்குள் திருமாலின் பல அவதாரங்களைக் குறிக்க சம்பிரதாய வடிவங்கள். சிங்க முகங்களிலும் தங்கக் கலையழகு.

பூம்புகார் நிறுவனம் தேரை வடிவமைத்து தமிழக பொற்கலைஞர்களையும், சிற்பக்கலைஞர்களையும் வைத்து, தேரைத் தயாரித்துக் கொண்டிருக்க - தேர், உருவாகத் தேவையான அத்தனைப் பொருள்களையும் தந்து கண்காணிப்புப் பணியை மேற்கொண்டுள்ளது திருப்பதி திருமலை தேவஸ்தானம்.

அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதியில் பகுதி பகுதியாக, தேரின் மர வேலைகளுடன் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவையே தங்கத் தேரின் உள்பாகம்.

இதற்கு மேல் செம்பை வைத்து; செதுக்கி வைக்கப்பட்ட மர வேலைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொண்டிருந்தனர்.

செம்புத் தகடுகள் வெட்டி வடிவமைக்கப்பட்டு எடை போடப்படுகின்றன. கொதி கலனுக்குள் கொண்டு செல்லப்படுகின்றன. செம்பு வெளிர் நிறமாக்கப்பட்டதும் செம்புடன் நைட்ரிக் அமிலமும், பாதரசமும் பூசப்பட்டு மீண்டும் சூடாக்கி பிரத்யேக அறைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

அறைக்கு வெளியே துப்பாக்கி சகிதமாய் காவலாளி. உயர் அதிகாரிகளின் கூரிய பார்வை.

தங்கத்தைத் தட்டித் தகடாக்கி, இனிப்புப் பண்டங்களின் மேல் ஒட்டப்படும் ரேக்குகள் போல் இரண்டிரண்டு தாள்களுக்கு நடுவே மெல்லிய தங்கத் தகடுகளாய் புத்தக வடிவில் இரண்டு அதிகாரிகளின் மேற்பார்வையில் தரப்படுகின்றன.

இந்த நுண்ணிய தங்க ரேக்குகளை மிக மெல்லிய டிஷ்யூ பேப்பர்போலாக்க ஐதராபாத்திலிருந்து ஆட்கள் அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

இவர்களிடம் 200 மில்லி கிராம் கொண்ட தங்கத்தை இயந்திரத்தில் விட்டு ரிப்பன்களாக்கிச் சிறு சிறு சதுர வடிவத்தில் அறுத்துத்



☆ ஒட்டகத் தோலுக்கடியே வைத்துத் தட்டித்தட்டித் தங்கத் தகடு மிகமிக மெல்லியதாக்கப்படுகின்றன.



☆ செப்புத் தகடுகள் குறிப்பிட்ட வெப்ப நிலையில் சூடாக்கப்படுகின்றன.



☆ பாதரசப் பூச்சுக் கொடுத்து செப்புத் தகட்டை ஒரு பதத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

தர - அந்த சதுர வடிவ சிறிய தங்கப் பரப்பை, பதப்படுத்தப்பட்ட ஒட்டகத் தோலின் மையத்தில் வைத்து சுத்தியலால் அடிக்கிறார்கள். பதப்படுத்தப்பட்ட மிக மெல்லிய ஒட்டகத் தோல் மட்டுமே இந்த அடிகளைத் தாங்குகின்ற வலிமை பெற்றுள்ளது. வியப்பான விஷயம்தான்.

மூன்று மணி நேரம் இடைவிடாமல் மூவாயிரம் அடிகளை சதுர வடிவ தங்கப் பரப்பில் அடிக்க 200 மில்லி கிராம் தங்கம், தங்க ரேக்குகளாகின்றன.

இத் தங்க ரேக்குகள், சுத்தமாக்கப்பட்ட செம்புத் தகடுகளின் மேல்வைத்து பாதரசம் தெளித்து ஒட்ட வைக்கப்படுகின்றன.

இப்படி ஒட்ட வைக்கப்பட்ட தங்க வேலைப்பாடுத் தகடுகள் மீண்டும் கொதிகலனுக்குச் சென்று சூடாக்கப்பட - மஞ்சள் நிறமாய் மாறுகின்றன. ஒரு குறிப்பிட்ட நிலைக்கு வந்ததும், அஹெட் கல் பதித்த உளியின் துணையுடன் தகடுகள் பாலிஷ் செய்யப்பட, பளபளப்பான மெருகேறுகிறது.

இவற்றைப் பகுதி பகுதியாக பீரோக்களில் அடுக்க - தங்கத் தேரின் ஒவ்வோர் அடியும் மிக நுட்பமாய் - நேர்த்தியாய் - தயாராகிறது.

பணி தொடங்கி ஒன்றரை வருடங்கள் ஓடி விட்டன. இந்த ஜூன் மாத முடிவில் அத்தனை பாகங்களும் தயாராகி விடும்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய தங்கத் தேராக உருவாகும் இப் பகுதிகள் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொது மக்களின் முன்னிலையிலேயே கோக்கப்பட்டு பவனி வரும் காட்சி வெகு தொலைவில் இல்லை.

1300 பாகங்கள் தேராக முழுமை பெற ஒரு மாதம் ஆகுமாம். பல காலமாய் வேங்கடாசலபதிக்குத் தங்கத்தேர் உருவாக்க நினைத்து அது நழுவி நழுவி இப்போதுதான் முடிவடையப் போகிறது.

பகவான் பாலாஜியின் தங்கத் தேர்ப் பவனியைக் கண்முன் கொண்டு வந்தோம். மெய் சிலிர்த்தோம்.



☆ தயார் நிலையில் பீரோக்களில் தங்கத் தேரின் பாகங்கள்.



பூம்புகார் கலைக் கழகத்தின் மேற்பார்வையாளர் திரு. ராம லிங்கத்திடமும், திருப்பதி தங்கத் தேர் திட்டத்தின் ஆலோசகர் திரு. டி.கே. சேதுராமனிடமும் வணக்கத்துடன் விடை பெற்றோம்.

—விக்கிரமன்

தொகுப்பு : நாகராஜ குமார்



☆ அஹெட கலவினால தஙகததை மெரு கேற்ற கிறார்கள்





☆ பதபபடுததிய செப்புத் தகட்டில் தஙக ரேகுகளை ஒட்டுகிறார்கள்.

கங்காபுரிக் காவலன்

13. மனித திட்டம், இறைவன் செயல்!

கோதாவரி பேராறு இரு கரைகளையும் அணைத்தவாறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. வெகு தொலைவிலுள்ள கடலரசனுடன் சேர அது விரைந்து கொண்டிருந்தது. எதிர்க்கரை ஓர் மெல்லிய கோடு போல் தெரியுமளவுக்குப் பரந்து விரிந்திருந்த கோதாவரியின் அழகைக் கண்டு ரசித்தவாறு அமர்ந்திருந்தார் சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர்.

வேங்கியில் சில நாள்கள் தங்கிவிட்டு, கோதாவரியைக் கடந்து செல்ல அந்தச் சிற்றூரில் தங்கினார்.

அவர் தந்தை இராசராசன் காலத்திலேயே அந்த ஊரில் சிறிய மாளிகை கட்டப்பட்டது. சாளுக்கியர்களுடன் நடைபெறும் போரின்போது அங்கே தங்கி, படைத் தலைவர்கள் திட்டம் வகுப்பார்கள். வேங்கியில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக பல ஆண்டுகளாக அந்த மாளிகை கவனிப்பவரில்லாமல் பொலிவிழந்திருந்தது.

இராசேந்திர சோழர் கங்கையில் நீராடச் செல்லப் போகிறார் என்ற செய்தி வேங்கியை எட்டிய பிறகு, வேங்கியில் அவரை விருந்தினராக வரவேற்று, உபசரிக்க விமலாதித்தன் விரும்பினார். நோய்வாய்ப்பட்டிருந்ததால் முழு நிறைவோடு அவரால் செயலாற்ற முடியவில்லை. மேலும், அண்டை நாட்டு சாளுக்கிய அரசன் ஜெயசிங்கன் தொல்லை தரத் தொடங்கியதை முறியடிப்பதிலேயே அவர் பொழுதெல்லாம் செலவிட்டதால் மனவேதனையும் அதனால் ஏற்பட்ட உடல்நோயும் அவர் ஆற்றலைத் தடுத்தன.

இராசேந்திர சோழர் வேங்கியில் சில நாள்களே தங்கினார். தங்கிய அந்தக் குறுகிய காலத்திலேயே வேங்கியின் நிலைமையை முழுவதும் உணர்ந்தார். தான் எடுத்த பெரும் பணியை நிறைவேற்றுவதிலேயே அவர் கவனமாக இருந்ததால், வேங்கியில் தங்காமல் புறப்பட்டார். கோதாவரியைக் கடந்து கங்கைக் கரையை நோக்கிச் செல்லத் திட்டமிடலானார். அவர் எண்ணியது அவ்வளவு எளிதில் நடைபெறும் என்று தோன்றவில்லை.

அரசி பஞ்சவன்மாதேவி பழையாறையிலிருந்து புறப்பட்டு வரும் செய்தியும், வீரமாதேவி அவ்வப்போது அனுப்பும் செய்திகளும் அவர் முன் பல பிரச்னைகளை உருவாக்கின. தன் எண்ணத்தையும், முடிவுகளையும் பகிர்ந்து கலந்து ஆலோசிக்க அமைச்சர் குழுவினரை அவர் அழைத்து வரவில்லை. கங்கைக் கரைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் செல்கிறார். அவர் பயணத்தின் நோக்கம் புனித யாத்திரை என்றே வெளி உலகிற்குப் புலப்பட்டது. ஆனால் வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் அளவிற்கு வீரர்களும், போர்க் கலன்களும் அவர் பயணத்தில் இருந்தன.

ஆயிரக்கணக்கான வீரர்கள் அவருடன் செல்லக் காரணம் என்ன என்று அறிய சாளுக்கிய ஒற்றர்கள் முயன்றனர். கங்கைக் கரைக்குச் செல்லும்போது சக்கரக்கோட்டம், தண்டபுத்தி, ஒட்டரம், கலிங்க நாடுகளைக் கடந்து செல்லும்போது அந்த நாட்டரசர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் – அதற்காகப் படைகள், இராசராசனுடன் செல்கின்றன என்றே ஒற்றர்கள் அறிந்து சாளுக்கிய நாட்டிற்குச் செய்தி அனுப்பினார்கள்.

கோதாவரிக் கரையில், ஆற்றின் அழகை ரசித்தவாறு நேரம் போவதே தெரியாமல் இருக்கும் அரசன் அருகேயே பஞ்சவன் மாதேவி மௌனமாக ஒருநாள் இருந்தாள். இரு நாள்கள் வீற்றிருந்தாள்.

விக்கிரமன்

ஒரு நாள் மாலை வேளை, கோதாவரியில் கதிரவன் மூழ்கி மறையும் நேரத்தில் அரசர் இருக்குமிடம் வந்தாள். அவளுடன், வீணை மீட்டுவதில் திறமை வாய்ந்த மங்கையும் வந்திருந்தாள். காலில் சதங்கை கட்டிய அழகிய பெண் ஒருத்தியும் வந்தாள்.

கோதாவரி நதியின் மேல் திசையில் கதிரவன் நீராடி மறையும் அழகை ரசித்த வாறு இருந்த இராசேந்திரன், வீணை மீட்டும் ஒலி கேட்டுத் திகைத்துத் திரும்பினார்.

பஞ்சவன் மாதேவி அவர் அருகே வந்தமர்ந்தாள். வீணை மீட்டுபவளையும், நடனப் பெண்ணையும் காட்டி, “இவர்கள் எல்லாம் எதற்காக? ஏன் இங்கே அழைத்து வந்தாய்?” என்று புருவம் உயர்த்திக் கேட்டார் அரசர். பட்டத்தரசி பஞ்சவன் மாதேவி அவர் இருக்குமிடம் வந்து நான்கு நாள்களாகிவிட்டன. ஒருநாள்கூட அவளுடன் அமைதியாக அமர்ந்து அந்த ரங்கமாக உரையாடவில்லை என்பதையும் அவர் அறிவார்.

நின்று கொண்டிருக்கும் பஞ்சவன் மாதேவியின் பாதாதிகேசம் முடிய அவர் விழிகளைப் படரவிட்டார்.

மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் தன்னை வைத்த விழி வாங்காது நோக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட பஞ்சவன் மாதேவி நாணமுற்றாள். மேனியெங்கும் முதுமை கொடி நாட்டிக் கொண்டிருந்தாலும் பழுவேட்டரையர் குலத்துக்குரிய இயற்கையான கம்பீரம் அரசியாரிடமிருந்து மறையவில்லை. விழிகளுக்குக் கீழே தேங்கியிருந்த சுருக்கம், இளமையில் தாம் எப்படியெல்லாம் இராசேந்திரனைக் கவர்ந்திழுக்கும் சக்தி படைத்திருந்தோம் என்று நினைத்துக் கொண்டது. கடைவாய்ப் பற்கள் சில தங்கள் உறவை விட்டுப் பிரிந்து, தாங்கள் வாழ்ந்த இடத்தை நிரூபிக்க அடையாளம் விட்டுச் சென்றதால் ஒரு காலத்தில் செழுமையாயிருந்த கன்னங்கள் சோபை இழந்திருந்தன.

அந்த முதிய பருவத்திலும் அரசர் தன்னைப் பாதம் முதல் முடிவரை நோக்குவதைக் கண்டு நாணமுற்று, மெல்லத் தலை குனிந்தாள், பஞ்சவன்மாதேவி.

இராசேந்திரன் அவளைப் பார்த்து மெல்ல நகைத்து, "தேவி, ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரலாமே. அதோ பார்! மேல் திசையில் சூரியன் செங்கோணமாய், திருமால் கைச் சக்கரம்போல் சுழன்று கொண்டு மறைய விரைவதை" என்றார்.

பஞ்சவன்மாதேவி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "தங்களைத் தேடி நான் வந்திருப்பதும், நினைவில்லாமல் சூரியன் உதயமாவதையும், மறைவதையும் பார்த்து மகிழ்ந்தவாறு இருக்கிறீர்கள். அதற்குக் கோதாவரிக் கரைக்கு வர வேண்டுமா? காவிரிக்கரையிலில்லாத சூர்யோதயமா?"

மெல்ல நகைத்து, தலை குனிந்தவாறிருக்க வேண்டும் என்று எண்ணியவள், தன் உள்ளத்துள் குமுறிக் கொண்டிருப்பதை மேலும் தொடர்ந்து வெளிப்படுத்த முயன்றாள்.

இராசேந்திரன், பஞ்சவன் மாதேவியைத் திரும்பிப் பார்த்தார். மெல்ல நகைத்தவாறு, "நீ வந்திருப்பதை நினைவு படுத்த வீணையும், நாட்டியமும் வேண்டுமா?" என்று கேட்டார், அவர்களை உடனே போகச் சொல்லு என்பதை மறைமுகமாகப் புலப்படுத்த.

பஞ்சவன்மாதேவி புரிந்து கொள்ளவில்லை. "நடனம் என்றால் உங்களுக்குப் பிடிக்குமே என்றுதான் நடனமாதை என்னுடன் அழைத்து வந்தேன். தேவாரப் பாடல்களை நீங்கள் விரும்புவீர்கள் என்பதும் தெரியும். மிக நல்ல வீணையைத் தடவி மீட்டி - அதற்கேற்ப ஆடப்படும் நடனம் தங்கள் மனதைக் கவரும் என்பதும் எனக்குத் தெரியாதா?" என்று கூறிச் சற்று நிறுத்தினாள். விழிகள் அரசரின் முகத்தை ஆராயச் சுழன்றன.

இராசேந்திரன் அவளை ஒருகணம் உற்றுப் பார்த்து, "தேவிக்கு இப்போதாவது இசை நாட்டியத்தின் மீது மதிப்பு ஏற்பட்டதே! தன் பிரியமானவருக்குப் பிடித்ததைத் தானும் பிடித்ததாகக் கொள்ள வேண்டும் என்பதை உணரப் பலகாத தூரம் கடந்து கோதாவரி நதிக் கரைக்கு வரவேண்டியதாயிற்று பார்த்தாயா?" என்றார்.

அவர் பேசியதில் புதைந்திருக்கும் மறை பொருளை உணராத பஞ்சவன்மாதேவி, "எனக்கும் கலைகளில் விருப்பம் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் தங்கள் மனதைக் கவரும் இளம் வயதை நான் விரும்பிப் பெறமுடியுமா?" என்றாள்.

பேச்சின் திசை மாறி, தேவியின் மனதில் மீண்டும் வருத்தத்தை வரவழைக்கக் கூடாது என்பதற்காக, இராசேந்திரன் மகிழ்ச்சி நிறைந்த குரலில், "தேவி! இளமையைப் பற்றி இப்போது ஏன் நினைக்கிறாய்? உனக்கு மட்டும்தானா? எனக்கும் இளமை மீண்டும் வரப்போகிறதா? உன்னை முதன் முதலில் சந்தித்த அதே இனிய நினைவுகள் போதும். போர்க்களங்களில் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தேனே - அதை நினைத்து மகிழ்வதா - வருத்தப்படுவதா? மகிழ்வது எதற்காக என்று கேட்கிறாயா? இளம் பிராயத்தில் பெரும் வெற்றிகளைப் பெற்றதால் எட்டுத்திக்கும் என்னைப் புகழ்கிறது. வீரனாக வாழாமல் இளமை உல்லாசத்தில் மோகக் கடலில் மூழ்கியிருந்திருந்தால் சோழ நாட்டிற்கோ எனக்கோ புகழும் பெருமையும் கிடைத்திருக்குமா? முழுவதுமாக இளமை நம்மிடமிருந்து மறைந்து விட்டது என நினைக்கிறாயா, தேவி?" இராசேந்திரன் கேட்டுவிட்டு, நடனப் பெண்ணையும், வீணைமீட்ட வந்திருப்பவளையும் அங்கிருந்து போய்விடுமாறு சைகை காட்டினார்.

அரசர் அந்தரங்கமாகப் பேச விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்ட, பஞ்சவன்மாதேவியும் அரசர் விருப்பத்தை ஆமோதிப்பவள்போல் அவர்களைப் போகுமாறு கூறித் தலையசைத்தாள்.

மனக் குறையையெல்லாம் பேச நினைத்து முடியாததால் பஞ்சவன் மாதேவிக்குத் துக்கம் நெஞ்சை வந்து முட்டியது. 'இருவருக்கும் முதுமை வந்து விட்டது. நானும் வயதைப் பற்றி எப்போதும் நினைத்துப் பார்ப்பதில்லை. நீங்களும் நினைத்துப் பார்ப்பதில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மற்றவர்கள் தங்களைப் பற்றி அவ்வாறு நினைப்பதில்லை. அதனால்தானே, தங்களை வீரம்மாள் மயக்கிவிட்டாள்?'

மனதில் குமுறிய இந்த எண்ணத்தை வார்த்தைகளாகக் கொட்டிவிட அவள் எண்ணினாள் ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது.

அரசர் தன்னுடன் தனியே பேச விரும்பும் இந்தப் போதில், நாதபேதம் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதனால் அவள் மௌன மானாள். மனக் குமுறல் தடுத்து நிறுத்தப் பட்டதால், அது கரைந்து கண்ணீராகப் பொங்கியது. துக்கத்தை அடக்க முயன் றாள். அது விம்மலாக வெளிவந்தது.

"தேவி! தேவி! ஏன் அழுகிறாய்? என்ன நேர்ந்தது உனக்கு? நல்ல வேளையாக நடனப் பெண்ணையும் வீணை வாசிப் பவளையும் இங்கிருந்து அனுப்பி விட்டேன்! அவர்கள் இங்கு இருந்திருந்தால் என்ன நினைப்பார்கள்? சோழ அரசி அழலாமா? மண்ணில் கண்ணீர் சிந்தலாமா?" என்று கூறி, தேவியின் கரங்களைத் தன் கரங் களுடன் பிணைத்துக் கொண்டார். பிறகு ஆதரவாக அவள் கூந்தலையும், முதுகையும் வருடினார். விழிநீரைத் துடைத்தார்.

பரந்த தோளுடைய திண்தோள் வீரரான சோழ சக்கரவர்த்தியின் கரம் பட்டவுடன், அவள் உடல் சிலிர்த்தது. இவ்வளவு ஆண்டுகளில் உணர்ந்திராத ஓர் சிலிர்ப்பு அவள் மேனியெங்கும் மின்னல் வெட்டைப் போல் பாய்ந்து பரவியது.

அந்தக் கணம் பஞ்சவன்மாதேவி வானில் பறப்பது போன்ற உணர்வை அடைந்தாள். இதுவரையில் அவள் நெஞ்சை அழுத்தியிருந்த சுமை திடீரென இறங்கி விட்டதுபோல் உணர்ந்தாள்.


'இவருக்கா, நம்மிடம் அன்பு குறைந்து விட்டது என்று நினைத்தோம்? இவரா, இளம்பெண்ணின் மாயையில் சிக்கி, நம்மை வெறுத்து, அரசி என்ற நிலையிலிருந்து நம்மை இறக்கி அந்த இடத்தில் நடனப் பெண்ணை அமர்த்திடப் போவதாக எண்ணினோம்? வீரம்மாள் வந்ததால் நம்மை அரசர் மறந்துவிட்டு, நம் மதிப்பு குறையுமாறு செய்துவிடுவார் என்று கற்பனை செய்து கொண்டோம்? அடடா, அதற்காகவா கலைக்கோயில் எழாதவாறு தடுக்க முயன்றோம்?'

அவள் விழிகளில் தேங்கி நின்ற கடைசி சொட்டுக் கண்ணீரையும், அரசரின் மேலாடை துடைத்தது. "தேவி, நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைககிறது. கங்கை நதிக் கரைக்குச் சென்று உன் கரம் பற்றி உன்னுடன் இணைந்து நீராட நினைத்தேன். அந்த எண்ணம் ஈடேறாது போல் தோன்றுகிறது. அடுத்து என்ன செய்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். இரண்டு நாள்களாக அதே சிந்தனை. அப்பப்பா! பழையாறையிலிருந்து வடக்கே பயணம் வருவது எளிதன்று என்பது எனக்குத் தெரியாதா? பயணம் சுகமாக இருந்ததா? கிருஷ்ணை ஆற்றங்கரை வரையில் நம் பிரதிநிதிகள் ஆங்காங்கே வந்து உன்னைக் கண்டு வணங்கியிருப்பார்களே! உனக்கு எந்தவிதக் குறையும் ஏற்படாமல் பார்த்திருப்பார்களே! நான் இப்போது தான் பயணக் களைப்பை உணர்கிறேன். தொடர்ந்து, இலட்சியம் நிறைவேறப் பயணம் செய்து கொண்டிருந்தால் களைப்பும் சோர்வும் ஏற்பட்டிருக்காது" என்று கூறிச் சற்று அமைதியானார்.

"தேவி! முன் யோசனையுடன் படை வீரர்களை அழைத்து வந்தது இப்போது பயன் உடையதாய் இருக்கிறது. நம் வீரர்கள் வடகிழக்கிலும், வடமேற்கிலுமாகப் பிரிந்து



செல்லும் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. சாளுக்கியர்கள் கொட்டம் ஒடுங்கி அவர்கள் அமைதியாகி விட்டார்கள் என்று எண்ணியது எவ்வளவு தவறாகிவிட்டது! என் தந்தையின் கடைசிக் கால சூளுரையை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். சாளுக்கிய நாடென்று ஒரு நாடு இல்லாமல் அப்போதே செய்திருந்தால் இப்போது கவலைப்படுமாறு நேர்ந்திருக்காது. ஹூம்..." என்று கூறிப் பெருமூச்சு விட்டார் இராசேந்திரன்.



பஞ்சவன்மாதேவிக்குச் சோழ நாட்டு அரசியல் ஓரளவிற்குத்தெரியும். சாளுக்கியர்களுடன், தன் மாமனார் சக்கரவர்த்தி இராசராசன் பலமுறை பெரும் போர் நடத்தி வெற்றி வாகை சூடியதை அவள் அறிவாள். அந்தப் போர்களில் பலமுறை தன் கணவர், இராசேந்திர சோழன் பங்கு கொண்டு வெற்றி பெற்றதும் பெரும் புகழ் எய்தியதும் அவள் அறிவாள். சோழர்களுக்கு விரோதி யாருமிலர். எதிர்த்துப்

அட்வைஸ் அம்புஜம்

"என் வயசுக்கு, எத்தனையோ பார்த்தாச்சு. ஒண்ணைப் பார்த்ததுமே, அது நல்லதா இல்லையான்னும், உடனே தெரிஞ்சுடறது. மனசிலே பட்டதை பட்டுன்னு சொல்லிடறதாலே, எனக்கு "அட்வைஸ் அம்புஜம்"னு எங்க ஆத்துக்காரர் அந்த காலத்திலேயே பேர் வைச்சிருந்தார்.

இன்னைக்கும்சரி, என் பேச்சை மீறி யாரும் நடக்கறதே கிடையாது. என்பிள்ளை, இந்த வயசுலேயும் என்னைக் கேட்காம எதுவும் செய்ய மாட்டான். நேத்துகூட, ஆத்துக்குள்ள வந்ததும் நேரே என்னண்ட வந்து உட்கார்ந்துண்டான். "ஏம்மா... அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணலாம்னு இருக்கேன், என்ன சொல்றே"ன்னு கேட்டான்.

அவன் கேட்ட தொனியிலேயே, அனுபவ்லே முதலீடு செய்ய அவனுக்கு ரொம்ப ஆசைன்னு எனக்குப் புரிஞ்சு போயிடுத்து.

என்னைக்குமே, தேக்கு மரங்கிறது, ரொம்ப அத்தியாவசியமான தேவையா இருந்து வந்திருக்கு. வர்ற காலங்களிலே, தேக்கோட மதிப்பு இன்னும் அதிகமாகத்தான் போறது. அரசாங்கத்தோட குறைஞ்சபட்ச மதிப்பீட்டிலே கணக்குப் போட்டாலும், இருபது வருஷங்களிலே, அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே தரப்போற 1440 கன அடி தேக்கோட விலை, 36 இலட்சங்களுக்குக் குறையாம இருக்குமே!

அதுவும், அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணினா, 3600 சதுர அடி நிலம் நமக்கே சொந்தமாயிடறது. நிலத்தைவிட நிலையான சொத்து வேற இருக்கா என்ன?

அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணிட்டு, இருபது வருஷங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆறாவது, பன்னிரண்டாவது வருஷங்களிலே இடைக்கால வருமானமும் தர்றாளாம்.

அதுமட்டுமில்லாம, அனுபவ் குடியிருப்புகள், பழத்தோட்டங்கள், ஓய்வு இல்லங்கள், அனுபவ் பைனான்ஸ் பற்றி எல்லாம் நிறைய கேள்விப்பட்டிருக்கேன். ஒரு நல்ல நிறுவனத்திலேயிருந்து, நிறைய லாபம் தர்ற திட்டம் அறிமுகமாயிருக்கறப்போ,



இன்னும் யோசனை என்ன வேண்டியிருக்கு?

ஏற்கனவே 12000 பேருக்கு மேலே, அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு செய்திருக்காளாம்.

அப்புறம் என்ன? "உடனே அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணுப்பா, அமோகமா வருவே"ன்னு, என் மகனை மனசார ஆசீர்வதிச்சேன்."

அனுபவ் பிளான்டேஷன்ஸ் லிமிடெட்
11, சோமசுந்தரம் தெரு,
தி.நகர்,
சென்னை 600 017.

தொ.பே. 8254155, 8282833, 8283316, 8282629 ஃபேக்ஸ் : 044-8284967

கிளைகள் : மதுரை : 119, மேற்கு பெருமாள் மேஸ்திரி தெரு, 2வது மாடி, மதுரை 625 001. திருச்சி : ஜென்னி பிளாசா, 5, பாரதியார் சாலை, திருச்சி 621 001. சேலம் : சேலம் பிளாசா (சாரதா காலேஜ் எதிரில்), பேர்லான்ட்ஸ், சேலம் 636 016. கோவை : 101–105, D.B. ரோடு, R.S. புரம், கோவை 641 002. வேலூர் : 8, ராமகிருஷ்ணபுரம், கொசப்பேட்டை, வேலூர் 632 001. திருநெல்வேலி : 49C / 11, பாவா பில்டிங், கைலாசபுரம் வடக்கு தெரு, நெல்லை ஜங்க்ஷன் நெல்லை 627 001.

போரிட நினைப்பவர்கள் யாருமில்லை. இனி அமைதி அமைதி அமைதிதான் என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கும்போது, கோதாவரி நதிக்கரையில் அமைதியாக உரையாட வந்தவேளையில் சோழ சக்கர வர்த்தி சாளுக்கியர்களைப் பற்றிக் கவலைப்படுகிறாரே –

"தேவி! சாளுக்கிய அரசன் சத்தியாச் ரயனுடன் போரிட்டு நான் வெற்றியடைந் ததை நீ அறிந்திருக்கலாம். அவன் ஆண் வாரிசின்றி இறந்தான். அப்பொழுதே சோழ-ப் பிரதிநிதியை அங்கே நிலை நிறுத்தி சோழ நாட்டின் ஒரு பகுதியாக அந்த நாட்டை மாற்றியிருக்க வேண்டும்; ஏனோ தந்தை தடுத்தார். 'எதிரிகளை வெல்ல வேண்டும் என்பதே எம் இலட்சியம். நாட்டை ஆக்ரமிப்பது அன்று' என்று அறிவுரை கூறினார்.

"வாரிசு இல்லாத சாளுக்கிய் நாட்டில் அடுத்து அரியணை ஏறப்போவது யார் என்று வாரிசுப் போர் ஏற்பட்டுக் குழப்பம் நிலவும்; அப்போது நாம் தலையிடலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் சத்தியாச் ரயனின் உடன் பிறந்தான் தசவருமனின் மகன் விக்கிரமாதித்தியன் முடிசூடிக் கொண்டான். நாட்டை ஆளும் வலிமை அவனுக்கு இல்லை என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அதற்கு ஏற்றவாறு முடி சூடிக்கொண்ட நான்கு ஆண்டு களிலேயே அவன் இறந்தான். அதுதான் சரியான தருணம். கீழைச் சாளுக்கிய நாட்டுடன், மேலைச் சாளுக்கிய நாட்டையும் ஒன்று சேர்த்து விடவேண்டும் என்று எண்ணினேன்.

நான் கோதாவரி ஆற்றங்கரைக்கு வந்த பிறகுதான் சில செய்திகளை முழுமையாக அறிந்தேன். விக்கிரமாதித்தியனுக்குப் பிறகு அவன் மகன் ஜெயசிங்கன் பட்டமேறி னான். ஆட்சியைத் தொடங்கும்போதே நம்மீது விரோத எண்ணத்துடன் தொடங்கி னான். அவன் நம்மை எதிர்க்கப் பெருந் திட்டமிடுகிறான் என்பதை அறிகிறேன். அவனால் நமக்குப் பெரும் தொல்லை வரப் போகிறது என்று இப்போது உணர்கிறேன். அவன் வேங்கியில் நுழையப் பார்க்கிறான். கீழைச் சாளுக்கிய நாட்டைத் தன் நாட்டுடன் சேர்க்கப் பார்க்கிறான். விமலாதித்தன் சக்தி குறைந்திருக்கும் நிலையில் ஜெய சிங்கன் எண்ணம் எளிதில் நிறைவேறலாம். நாம் கங்கைக் கரைக்குச் செல்லப் போவதை அறிந்து அவன் நேரே நம்மிடம் மோதாமல் நாம் செல்லும் வழியிலுள்ள ஒட்டரர்களையும் கலிங்கரையும் நம்மை எதிர்க்கத் தூண்டுகிறான். எப்பாடுபட் டாவது என்னைச் சிறைப்பிடித்து விட வேண்டும் என்பதும் அவனது இரகசியத் திட்டமாம்!" என்று கூறிப் பெரிதாக நகைத் தார் இராசேந்திரன்.

அரசன் இவ்வாறு நகைத்துப் பல ஆண் டுகள் ஆகிவிட்டன என்பதை பஞ்சவன் மாதேவி அறிவாள். அரசரின் உள்ளத்தில் இதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த சீற்றம் சிரிப்பாகப் பொங்கியிருக்கிறது, என்பதையும் அறிவாள்.

"தேவி! இவை எல்லாம் ஒருபக்கமிருக் கட்டும். நம் படைவீரர்கள் இதற்கெல்லாம் அஞ்சாதவர்கள். அவர்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் தளபதி அரையன் இராசராசன், வீரமும், தீரமும், புத்திக் கூர்மையும் உடையவன். அவன் இருக்கும் வரையில் ஜெயசிங்கன் கனவு கனவுதான். ஆனால், பெரும் ஆபத்து மற்றொன்று காத்திருக்கிறது. வீட்டினுள்ளே கொடிய நாகம் புகுந்ததுபோல் மேற்கே ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

"கங்கை மாநதியைப் போல் மேற்கே சிந்து நதி என்ற நதி – காவிரி, கோதாவரி, மகாநதி, கங்கை, பிரம்மபுத்ரா போன்று மிகப் பெரிய நதி மட்டுமல்ல புண்ணிய நதியும்கூட. எனக்கோர் ஆசை உள்ளத்தின் ஒரு மூலையில் இருக்கிறது. கங்கையில் நீராடுவது போல், சிந்து நதியிலும் நீராடி மகிழ வேண்டும். மேற்குக் கடற்கரை யில் கிருஷ்ணபிரான் வாழ்ந்த நாட்டிற்கும் சென்று அங்குள்ள பழைமையான கோயிலைக் கண்டுவர வேண்டும் என்பதே அந்த எண்ணம். ஆடவல்லான் அருளால் நீண்ட ஆயுள் இருந்தால் அந்த எண்ணம் நடைபெறாமலா போகப் போகிறது! ஆனால், சிந்துநதி பாயும் இடங்களுக்கு அருகிலுள்ள நாடுகளுக்குப் பெரும் ஆபத்து வந்திருக்கிறதாம். கஜினி முகமது என்

மனம் விட்டுப் பேசுவோம்

பாவையர் பக்கத்தில் வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்க சொல்லியுள்ள யோசனைகளைப் படித்தபின் 'புக் பைன்டிங்' ஆர்டர் பிடிக்க இதோ புறப்பட்டு விட்டேன்.

— சுகந்தி நாராயண், மதுரை – 625 011.

அமரர் டி.என். சுகி சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி 'என் தந்தை' தலைப்பில் திருமதி ராஜலட்சுமி சுப்பிரமணியம் எழுதிய கட்டுரை சிறப்பாக இருந்தது.

— சிம்மவாஹினி, வியாசர் நகர்.

மருத்துவச் செய்திகள் சிறப்புப் பகுதி சூப்பர்ப். ஒவ்வொரு துறையிலும் ஒன்றை ஒன்று விஞ்சும்படியான செய்திகளைப் படித்து நமது சென்னையில் இத்தகைய நவீன மருத்துவ வசதிகள் இருக்கிறதா என்று சிந்திக்க வைத்தது.

ஏனைய பகுதிகளுக்கு சிகரம் வைத்தாற்போன்று 'கரண்ட்' (ஆன்மிகம்) அமைந்து இருந்தது.

— இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம்.

கடன் வாங்குவோர் சிந்திக்கும் படியாக அமைந்தது நாணயம் பகுதியில் 'எப்போது கடன் வாங்கலாம்?' என்ற கட்டுரை. மேலும் இதுபோல் சிறந்த கட்டுரைகளை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

— அ. செபாஸ்டின், களியல் – 629 101.

'போதையின் பகைவன்' கட்டுரையின் நாயகரும், அவரது துணைவியாரும் நீடூழி வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

— ஜெ. பாலசந்திரன், பெங்களூர் – 560 078.

றோர் அரசன் இமயமலையைத் தாண்டி இந்த நாட்டிற்குள் நுழைந்திருக்கிறானாம். வேற்றுச் சமயத்தினரான அவனுக்கு நம் நாட்டுப் பொன்னின் மீதும் பொருளின் மீதும் பேராசை. வடக்கே உள்ள நாட்டை எல்லாம் கைப்பற்றும் பேராசையுடனும், பெரும் வெறியுடனும், அவன் ஏராளமானப் போர் வீரர்களுடனும் சிந்துநதியின் கரைகளிலுள்ள நாடுகளின் மீது ஒருமுறை படை எடுத்து, அம்முயற்சி வெற்றியடையாமல் மீண்டும் வரப்போவதாகக் கேள்வி. ஏராளமான படை வீரர்கள் வலிமையும் அவர்களது தோள்வலிமையும், வாள் வலிமையும் கொண்டு பாய்ந்து வரும் அவனைத் தடுத்து நிறுத்தாவிடில் எல்லா அரசர்களுக்கும் ஆபத்து அல்லவா? இதை உணர்ந்து வடமேற்கு நாட்டு அரசர்கள் சிலர் நம் உதவி நாடி வரப்போவதாகச் செய்தி வந்துள்ளது. அவர்கள் தெற்கே தொலை தூரத்திற்கு தஞ்சைபுரிக்கு வர வேண்டுமே என்ற கவலையுடன் இருந்தபோது, கங்கைநீராட நாம் வரப்போகும் செய்தி அறிந்து, மகிழ்வுற்று என்னைச் சந்திக்க வரப்போகிறார்கள்.

"ஒவ்வொரு நாளும் அவர்களை எதிர்பார்த்து நான் காத்திருக்கிறேன். அவர்களுக்கு உதவ படைவீரர்களை அனுப்ப ஆயத்தமாக இருக்கிறேன். தேவைப்பட்டால் நானே போகலாம் என்ற எண்ணம்" என்று கூறி அவர் பேச்சை நிறுத்தியபோது பஞ்சவன்மாதேவி கவலையடைந்தாள். கங்கை நீராடச் செல்லாமல் என்னை இங்கே தங்குமாறு கூறிச் செல்லப் போகிறாரா? அல்லது பழையாறைக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிடப் போகிறாரா? புதிதாகக் கட்டப்படும் கோயிலின் குடமுழுக்கின் நாளைத் தள்ளிப் போட்டால், கருவூரார் கோபமுற்று பொதிகைமலைக்குச் சென்று விடமாட்டாரா, பஞ்சவன்மாதேவிக்கு எதைப் பற்றியும் சிந்திக்கத் தோன்றவில்லை. நாமும், சக்கரவர்த்திகள் செல்லும் இடமெங்கும் செல்வோம்" என்று எண்ணினால் கோயில் குடமுழுக்கைத் தள்ளிப்போடட்டுமே! கருவூரார் பொதிகைக்குச் செல்லட்டுமே! வீரமாதேவியின் எண்ணத்தில் மண் விழட்டுமே! எல்லாம் இறைவன் செயல்" என்று எண்ணி இறைவனைத் துதிக்கக் கண்களை மூடிக் கொண்டாள்.

அந்தப்போதில், பணியாள் ஒருவன் வந்து மரியாதையும் பயமும் சேர வணங்கி செவியருகே ஏதோ கூறினான்.

இராசேந்திர சோழர் நிமிர்ந்து உட்கார்ந்தார். கோதாவரி நதியைக் கூர்ந்து கவனித்தார்.

நான்கு படகுகள் வந்து கொண்டிருந்தன. படகுகளின்மீது அமைதிக் கொடியான வெள்ளைக் கொடி பறந்து கொண்டிருந்தது.

மேற்குத் திசை நாட்டினின்று வருகிறார்கள், உதவி கேட்க என்று எண்ணினார் இராசேந்திர சோழர்.

(தொடரும்)

17-7-1994 முதல் 16-8-1994 வரை உங்கள் ராசி பலன்

	கேது	செவ்	புதன்
சனி-வ	கிரகநிலை		சூரி
			சுக்
		குரு ராகு	

கிரக மாறுதல்

31-7-1994 முதல் கடக-புதன். 1-8-1994 முதல் கன்னி-சுக்கிரன். 7-8-1994 முதல் மிதுன-செவ்வாய். 14-8-1994 முதல் சிம்ம-புதன்.

கிரக பாதசாரம்

சூரியன் - புனர்பூசம் 4. சந்திரன் - சுவாதி 3. செவ்வாய் - ரோகிணி 2. புதன் - திருவாதிரை 2. குரு - சுவாதி 2. சுக்கிரன் - மகம் 4. சனி - சதயம் 4. (வக்) ராகு - விசாகம் 3. கேது - கிருத்திகை - 1.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம் முடிய)

குரு, சுக்கிரன், சனி ஆகியோர் அனுகூலமாக உலவுவதால் உங்கள் மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். நல்லவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பநலம் சீராக இருந்து வரும். வாழ்க்கைத் துணைவரால் அனுகூலம் உண்டாகும். பெண்களுக்கும், சமுதாய நலப்பணியாளர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், கற்பனைத்திறம் கூடப் பெறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். கறுப்பு நிறப்பொருள்கள் ஆதாயம் கொண்டுவரும். அரசு விவகாரங்கள் அளவோடு நலம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள்.

உடன்பிறந்தவர்களால் உங்களுக்கும், உங்களால் அவர்களுக்கும் நலம் கூடும். எதிர்ப்புகள் என்பவை குறையும். பணநடமாட்டம் கூடும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் அளவோடு லாபம் தரும். எண்ணெய் வகையறாக்கள், தோல் பொருள்கள், விளைபொருள்கள் ஆகியவற்றால் ஆதாயத்திற்கு இடம் உண்டு. அலைச்சல் சற்று அதிகமாகவே செய்யும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. 31ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். மாணவர்களது நிலையும் உயரும். ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். மாதர்களது முன்னேற்றத்திற்குத் தடையேற்படும். ஆடவர்கள், மாதர்களால் ஒரிரு தொல்லைகளுக்கு ஆட்பட வேண்டிவரும். 7ஆம் தேதி முதல் ராசியாதிபதி செவ்வாய் வலுப்பெறுவதால் வெற்றி வாய்ப்புகள் அதிகமாகும். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் நல்ல திருப்பம் உண்டாகும். *ஜூலை 17,21,22,24,25,27,28,29 ஆகஸ்ட் 2,3,5,9,10,11, 12,13* தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்கு, மேற்குத்திசைகள் அனுகூலமானவை. சிம்ம, துலா, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். *3,6,8* எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2ஆம் பாதம் முடிய)

ஜன்ம ராசியில் செவ்வாயும், 6இல் குருவும் உலவுவதால் உடல் நலம் சீராக இராது. மனதில் கவலைகள் சூழும். அச்ச உணர்வு ஏற்படும். அங்குமிங்கும் அலைய வேண்டிவரும். பண நடமாட்டம் சீராக இராது. அதிகம் உழைக்க வேண்டிவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. புதன், சுக்கிரன், ராகு ஆகியோர் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் பிரச்னைகள் என்பவை குறைந்து, ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். பேச்சு வன்மையும், செயல் திறமையும் கூடும். மக்களால் ஒரிரு இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும் சில நன்மைகளும் உண்டாகும்.

பிற மொழி, மதக்காரர்கள் உதவுவார்கள். உற்றார், உறவினர் தொடர்பு அளவோடு நலம் தரும். நூதனப் பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்ப நலம் சீராக இருந்துவரும். 3இல் சூரியன் உலவுவதால் அரசு விவகாரங்களில் நல்ல திருப்பத்தைக் காணலாம். நிர்வாகத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். நிலம், மனை, வீடு, வாகனங்கள் மூலம் ஓரளவு ஆதாயம் பெற முடியும். மாணவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், ஆகியோர் செழிப்பான பாதையைக் காண்பார்கள். குரு, செவ்வாய் ஆகியோருக்குப் பிரீதியான காரியங்களில் ஈடுபடுவது நல்லது. பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணிபுரியும் போதும் பாதுகாப்புத் தேவை. *ஜூலை 17,18,19,24,27,*

பாலஜோசியர்

வித்வான் வே. லட்சுமணன்

28.29 ஆகஸ்ட் 2,3,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடக்கு கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. மிதுன, கடக, சிம்ம, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

குருபலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், செயல் திறமையும் பிரகாசிக்கும். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழும். புகழும், மதிப்பும் உயரும். கணிதம், விஞ்ஞானம், வியாபாரம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார்கள். நண்பர்கள், உற்றார், உறவினர்களது தொடர்பு ஆக்கம் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அளவோடு நலம் பெறுவீர்கள். கணவன், மனைவி உறவுநிலை சீராக இருந்துவரும். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் ஈடுபாடு கூடும். தெய்வப்பணிகள் ஈடேறும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலம் உண்டாகும்.

சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மாணவர்களது நிலை உயரும். ஆசிரியர்கள் போற்றப்படுவார்கள். மருத்துவம், இரசாயனம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். பொருளாதார நிலை திருப்தி தரும். 2இல் சூரியன் உலவுவதால் பேச்சில் சூடான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நல்லது. செவ்வாய் பலம் சீராக இல்லாததால் எக்காரியத்திலும் பதற்றம் கூடாது. பொறுமை மிகத் தேவை. இயந்திரப் பணியாளர்களும், இஞ்சினீயர்களும் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. வழக்கு, வியாஜ்ஜியங்களிலும், போட்டிப் பந்தயங்களிலும் வெற்றி காண்பது அரிது. ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் சுக்கிரபலம் குறைவதால் மாதர்களும், கலைஞர்களும் பொறுப்புடன் காரியமாற்றுவது அவசியமாகும். ஜூலை 17,18,19,21,25,27,28,29 ஆகஸ்ட் 2,3,5,9, 10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

செவ்வாய் பலம் கூடியிருப்பதால் சங்கடங்களைக் கடந்து வாழ்வில் வெற்றி நடைபோடுவீர்கள். எதிர்ப்புகள் என்பவை குறைவடையும். மனதில் உற்சாகம் கூடும். குடும்பநலம் கவனிப்பின் பேரில் சீராக இருந்துவரும். பொருளாதார நிலையில் எதிர்பாராத வளர்ச்சி ஏற்படும். மாதர்களால் ஆடவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். நண்பர்கள் தக்க தருணத்தில் முன்வந்து உதவுவார்கள். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். மக்களால் ஒரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். உடன்பிறந்தவர்கள் உதவ முன்வருவார்கள். உங்களாலும் அவர்களுக்கு அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தினால் வளர்ச்சி காணமுடியும்.

பக்தி மார்க்கத்திலும், தெய்வப் பணிகளிலும் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மனதில் தெளிவு பிறக்கும். மனச் சலனங்கள் அகலும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு ஆகஸ்ட் 6ஆம் தேதி வரையிலும் உற்சாகமான போக்கு நிலவிவரும். அதன்பிறகு விழிப்புடன் இருப்பது அவசியமாகும். உடல் ஆரோக்கியம் ஒருநாள் போல் மறுநாள் இராது. உஷ்ணாதிக்கத்தினால் உடல்நலக் குறைபாடு ஏற்படக்கூடும். தந்தையால் சலனம் ஏற்படும். ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் சுக்கிரபலம் குறைவதால் மாதர்களும், கலைஞர்களும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எக்காரியத்திலும் பதற்றம் கூடாது. குரு, சனி, ராகு ஆகியோருக்குப் பிரீதி செய்வது நல்லது. ஜூலை 17,18,19,21,22,27,28,29 ஆகஸ்ட் 2,3,5,9,10,11,12,13 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. தெற்கும், வடமேற்கும் அனுகூலமான திசைகளாகும். மேஷ, ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,7,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் சூரியன் விரயத்தில் இருப்பதாலும், குரு 3இல் உலவுவதாலும், ராசியைச் சனி பார்ப்பதாலும் உங்கள் தேக ஆரோக்கியம் சாதாரணமாகவே காணப்படும். பண நடமாட்டம் குறைந்து, செலவுகள் அதிகமாகும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. பெரியோர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவது நல்லது. அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது. மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக்கால் வைக்க வேண்டாம். நூதன முயற்சிகளில் பிரவேசிக்க வேண்டாம். மக்கள் நலம் கவனிக்கப்பட வேண்டி வரும். அரசாங்கத்தாராலும், தந்தையாலும் செலவுகள் ஏற்படும்.

மனதில் நிம்மதி குறையும். நிலபுலங்களால் அதிக நன்மையை எதிர்பார்க்க இயலாது. அலைச்சலும், உழைப்பும் கூடும். செவ்வாய் பலம் திருப்திகரமாக இருப்பதால் சங்கடங்களைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். பொறியியல் துறை ஆக்கம் தரும். பிற மொழி, மதக்காரர்களால் நலம் ஏற்படும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுவார்கள். கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் ஜூலை மாதம் முடிய உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். அதன்பிறகு நிலைமையில் .சறுக்கல் ஏற்படக் கூடுமாதலால் விழிப்புடன் இருப்பது நல்லது. அலுவலகப் பணியாளர்கள் அகலக்கால் வைக்க வேண்டாம். ஜூலை 17,18,19,21,22,24,25 ஆகஸ்ட் 2,3,5,9.10,

1..12,13 தேதிகள் சிறப்பானவை. தென்மேற்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் வலுப்பெற்று உலவுவதாலும் குரு, சனி ஆகியோரது சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதாலும் உங்கள் அபிலாஷைகள் இனிது நிறைவேறும். உடல் ஆரோக்கியம் சீராக இருந்துவரும். மனதில் மகிழ்ச்சி கூடும். குடும்ப நலம், மக்கள் நலம், வாழ்க்கைத் துணைநலம் யாவும் சீராக இருந்துவரும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காணமுடியும். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள் ஆகியோருக்கெல்லாம் செழிப்புண்டாகும். அரசியல் வாதிகள் தங்கள் நிலைமையில் அபிவிருத்தி காண்பார்கள். பொது நலப் பணியாளர்களுக்குப் பாராட்டுகள் குவியும். கணிதம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் மூலம் வருவாய் வந்து சேரும்.

மற்றையோரால் மதிக்கப்படுவீர்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றைப் பெறுவார்கள். பகைவர்களின் மூலம் விளைந்துவந்த தொல்லைகள் குறையும். நல்லவர்கள் நண்பர்களாவார்கள். தெய்வப்பணிகள், தருமப்பணிகள் ஆகியவற்றில் நாட்டம் கூடும். சுபச் செலவுகள் அதிகமாகும். உடன்பிறந்தவர்களால் ஓரிரு நன்மைகளை எதிர்பார்க்கலாம். நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் செயற்கரிய காரியங்களில் ஈடுபடவும், அவற்றில் வெற்றி காணவும் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். மனதில் துணிச்சல் கூடும். ரியல் எஸ்டேட் இனங்கள் லாபம் தரும். ஜூலை 17,18,19,21,22,24,25,27,28, ஆகஸ்ட் 2,3,5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, மிதுன, கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,5,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)

கோசாரப்படி பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவாததால் உங்கள் மனதில் நிம்மதி குறையும். உடல் நலம் சீராக இராது. இங்குமங்கும் அலைந்து திரியவேண்டி வரும். எண்ணங்களை ஈடேற்றிக் கொள்ள அரும்பாடுபட வேண்டிவரும் என்றாலும் ஓரிரு காரியங்கள் சூரியன், சுக்கிரன் ஆகியோருடைய அனுகூலமான சஞ்சாரத்தினால் சுலபமாக நிறைவேறவும் கூடும். குரு, சனி, செவ்வாய் ஆகியோர் நிலை திருப்திகரமாக இல்லாததால் பணவரவு குறைந்து செலவுகள் கூடும். வீண்விரயங்களும் ஏற்படலாம். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபடலாகாது. எதிலும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து ஈடுபடுவது நல்லது.

பயணத்தின்போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. வீண் சண்டை, சச்சரவுகளில் பிரவேசிக்க வேண்டாம். நூதனமானவர்களிடம் அதிக நெருக்கம் கூடாது. விளையாட்டுத் துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. உடன்பிறந்தவர்களின் நலனில் அக்கறை தேவைப்படும். அவர்களால் ஓரிரு பிரச்னைகளுக்கு ஆட்பட நேரும். ஆகஸ்ட் மாதத் தொடக்கம் கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகத்தைக் கூட்டும். நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் வழக்கமான வளர்ச்சி பாதிக்கப்படாது. உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம், யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் என்பவை குறையும். இறைவழிபாட்டில் முழுமையான கவனம் செலுத்துவது நல்லது. ஜூலை 17,18,19,21,22,24,25,27,28,29 ஆகஸ்ட் 5,9,10,11,12,13 தேதிகள் சிறப்பானவை. கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். மிதுன, கடக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : (விசாகம் 4ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

கோசாரப்படி பெரும்பாலான கிரகங்கள் திருப்திகரமாக உலவாததால் உங்கள் எண்ணங்கள் ஈடேறத் தடைகளும் குறுக்கீடுகளும் உண்டாகும். எதிர்ப்பாளரின் கரம் வலுவடையும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழக வேண்டாம். நண்பர்கள், உற்றார் உறவினர்களால் அனுகூலமிராது. பெற்றோர் நலனில் கவனம் தேவைப்படும். மக்களால் செலவுகள் கூடும். குடும்பத்தில் ஓரிரு பிரச்னைகள் தலைதூக்கும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. நிலபுலங்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது அவசியம். கூட்டுத் தொழிலில் அக்கறை தேவை. மனதில் சிறுசிறு கவலைகள் அவ்வப்போது உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபட வேண்டாம். பெண்களுக்கு உற்சாகம் குறையும்.

பயணத்தின்போதும் இயந்திரங்களில் பணிபுரியும்போதும் பாதுகாப்புத் தேவை. வியாபாரிகள் அளவோடு முன்னேறுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வழக்கமான வளர்ச்சி பாதிக்கப்படாது. கணிதம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்கள் மனஅமைதி பெறுவார்கள். தொழிலா

ளர்கள், உத்தியோகஸ்தர்கள், தொழில் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆன்மிகவாதிகள் ஆகியோருக்கெல்லாம் விசேஷமான வளர்ச்சிக்கு இடமிராது. சாதாரணமான நிலையே இருந்துவரும். ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் ராசிநாதன் 8ஆமிடம் மாறுவதால் உடல்நலனில் கவனம் தேவைப்படும். எதிர்பாராத ஓரிரு சங்கடங்களுக்கு ஆட்படவும் நேரலாம். எதிலும் பொறுமையையும், பக்குவத்தையும் கடைப்பிடிப்பது அவசியமாகும். ஜூலை 17,18,19,21,22,24, 25,27,28,29 ஆகஸ்ட் 2,9,10,11,12,13 தேதிகள் சுமாரானவை. வடமேற்கு, வடக்குத் திசைகள் அனுகூலமானவை. கடக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)

விசேடமான நேரமிது. உங்கள் மதிப்பும் அந்தஸ்தும் உயர்வடையும். உடல் ஆரோக்கியம் சீராக இருந்துவரும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். பணவரவு கூடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். திருமணம் ஆனவர்களுக்கு மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். வாக்குவன்மையும், செயல் திறமையும் பளிச்சென்று பிரகாசிக்கும். போட்டிப் பந்தயங்களிலும், வழக்கு, வியாஜ்ஜியங்களிலும் வெற்றி காணமுடியும். நிலபுலங்களின் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைத்து வரும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். கலைஞர்கள் பிரகாசிப்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழ் கூடும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள், விஞ்ஞானிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான நேரமிது. தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். சமுதாய நலப்பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் மாதர்களுக்கும், கலைஞர்களுக்கும் முன்னேற்றம் தடைப்படும். 7 ஆம் தேதி முதல் வாழ்க்கைத் துணைவரால் ஓரிரு பிரச்னைகள் உருவாகும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. தந்தை நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. ஜூலை 17,18,19,21,22,24,25,27,28,29 ஆகஸ்ட் 2,3,9,10, 11,12,13 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, தெற்கு, வடகிழக்குத் திசைகள் அதிர்ஷ்டம் தரும் திசைகளாகும். கும்ப, ரிஷப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2 ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய)


குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் கோசாரப்படி அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் தேக ஆரோக்கியம், கௌரவம், அந்தஸ்து, புகழ், வாழ்க்கை வசதிகள் யாவும் சாதாரணமாகவே காணப்படும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடு படவேண்டி வரும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் அவ்வப்போது தலைதூக்கும். பக்குவத்துடன் சமாளிப்பது நல்லது. பணநடமாட்டம் ஏற்றம், இறக்கம் கொண்டதாக அமையும். மனதில் சலனம் குடிகொள்ளும். மக்கள் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. ரியல் எஸ்டேட் இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது.

கணவன், மனைவி உறவுநிலை சாதாரணமாகவே இருந்து வரும். அலுவலகப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர்கள், தொழிலாளர்கள், அரசியல்வாதிகள், ஆன்மிகவாதிகள், ஆசிரியர்கள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றம் தடைப்படும். விரும்பத்தகாத இடமாற்றமோ, நிலை மாற்றமோகூட ஏற்படும். ஜூலை முடிய கணிதம், விஞ்ஞானம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வளர்ச்சி இருந்து வரும். அதன்பிறகு சிறுசிறு இடையூறுகள் தென்படும். ஆகஸ்ட் 7 ஆம் தேதி முதல் செவ்வாய் 6 ஆமிடம் மாறுவதால் பிரச்னைகள் என்பவை குறையும். மனதில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும். ஓரிரு எண்ணங்கள் ஈடேறவும் வழிபிறக்கும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்குச் சங்கடங்கள் என்பவை குறைய வாய்ப்புண்டு. ஜூலை 17,18,19,21,22,24,25,27,28,29 ஆகஸ்ட் 2,3,5,11, 12,13 தேதிகள் சிறப்பானவை. வடதிசை நலம் தரும். மிதுன, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4,5,6 எண்கள் அனுகூலமானவை.

கும்பம் : (அவிட்டம் 3 ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

குருபலம் காரணமாக உங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். எடுத்த காரியங்கள் நிறைவேறும். மனதில் மகிழ்ச்சி கூடும். பணவரவு திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்கள் லாபம் தரும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலம் உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணமாகும். திருமணம் ஆனவர்கள் மகப்பேறு பாக்கியம் பெறுவார்கள். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் சந்தர்ப்பம் உண்டு. தெய்வப் பணிகள் நிறைவேறும். புனிதப் பயணம் கூடிவரும். அயல்நாட்டுத் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், மதபோதகர்களுக்கும் எண்ணம் நிறைவேறும்.

அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், நிர்வாகத்துறைகளைச்சேர்ந்தவர்கள், மருத்துவர்கள் ஆகியோர் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். மாணவர்களது இலட்சியம் கைகூடும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு,



விதை உலகம்

உலகத்தை
விதையாக்கி,
அதைச்
சிறைப் பிடிக்கும் வித்தை
யாருக்கு வரும்?
விதையை
விடுதலை செய்து,
அதையே
தன் உலகமாக்கிக் கொள்ளும்
யுக்தி யாருக்கு வரும்?–
தனக்கு
உணவே இல்லையென்னும்
தன் உலகத்திற்குத்
தன் உதிரத்தையே
உணவாக்கும் தந்திரம்
யாருக்கு வரும்?–
தாய்க்கு வரும்...!

– விஜயவாசு

ஆணே அழகு.....!

அழகினிலே மிகுந்தவர்கள்
ஆண்தான்! இந்த
அகிலத்தை ஆராய்ந்தால்
உண்மை தோன்றும்.
இளமைமிகு சிங்கத்தின்
பிடரி யைப்பார்!
எழில்மிகுந்த ஆண்மயிலின்
தோகையைப்பார்!
பலமிகுந்த களிறுக்குத் தந்தம்
உண்டு;
பறவையிலே இதுபோன்ற
சிறப்பை பெற்ற
சீரிளம்பெண் செகத்தினிலே
உண்டோ? சொல்வீர்!

துடிக்கின்ற மீசையுண்டு;
எதையும் தாங்கும்
தோள்வலிமை மிக உண்டு;
ஓடும் பாம்பைப்
பிடிக்கின்ற துணிவுண்டு;
வானம் தன்னை
ஒடிக்கின்ற கரம்உண்டு;
உரமும் உண்டு.
உருவத்தில் கம்பீரத்
தோற்றம் உண்டு
வடிக்கின்ற கவிஞரெலாம்
பெண்ணை மட்டும்
வகைவகையாய் வருணித்தல்
ஏனோ, சொல்வீர்!

வண்ணமிகு உடையணிந்து,
காதில் மூக்கில்
வகைவகையாய் ஆபரணத்தை
ஒற்றிக் கட்டி,
சின்னதொரு கூந்தலிலே
மலரைச் சூட்டி
சிறப்பான அலங்காரம்
செய்யா விட்டால்–
பெண்ணழகு பார்ப்பதற்கும்
தகுதி ஆமோ?
பெருமையுற கவிஞர்களே !
உங்கள் பார்வை
திண்ணமுள ஆணழகின்
பக்கம் சென்று
தீட்டீரோ இலக்கியங்கள்
இன்றே; நன்றே!

— அருப்புக்கோட்டை
செந்தமிழ்க்கிழார்

இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவார்கள். பொன்நிறப் பொருள்கள் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி காணலாம். பேச்சுத்திறமை கூடும். விருந்து உபசாரங்களில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் கூடிவரும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களில் ஈடுபட்டு வருவாய் பெறமுடியும். அலைச்சலும், உழைப்பும் கூடினாலும் அதற்கான பயன் கிடைத்துவரும். ஜூலை 17,18,19,21,22,24,25,27,28,29 ஆகஸ்ட் 2,3,5,9,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, மிதுன, கடக, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,5,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

ராசிநாதன் குரு 8இல் ராகுவுடன் கூடியிருப்பதாலும் சனி விரயம் புகுந்ததாலும் கேது 2இல் உலவுவதாலும் விசேடமான நன்மைகளை நீங்கள் இந்த நேரத்தில் எதிர்பார்க்க இயலாது. பணவரவு குறைந்து செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் தலைதூக்கும். செய்துவரும் தொழிலில் சீரான முன்னேற்றத்தைக் காண இயலாது. நூதனமான முயற்சிகளில் ஈடுபடலாகாது. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பை எண்ணிக் கைப்பொருளை வீணாக்க வேண்டாம். பேச்சில் நிதானத்தையும், உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டையும் கடைப்பிடிப்பது நல்லது. மக்கள் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும், கணவன், மனைவி உறவுநிலை ஒருநாள் போல் மறுநாள் இராது.

பிற மொழி, மதக்காரர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் பிரவேசிக்கலாகாது. தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் பொறுப்புடன் காரிய மாற்றுவது' அவசியமாகும். சினிமா, சங்கீதம் போன்ற 'கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அகலக் கால் வைக்க வேண்டாம். ஜூலை முடிய வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணிதத் துறையாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கெல்லாம் உற்சாகமான சூழ்நிலை நிலவிவரும். அதன் பிறகு ஓரிரு பிரச்னைகள் சூழும். ஆகஸ்ட் 6ஆம் தேதி வரையிலும் செவ்வாய் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் சங்கடங்களைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். பொறியியல் துறை நலம் தரும். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியம். ஜூலை 19,21,22,24,25,27,28,29 ஆகஸ்ட் 2,3,5,9,10,11 தேதிகள் சுமாரானவை. தெற்கு, வடக்குத் திசைகள் அனுகூலமானவை. ரிஷப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தோற்றம்

புதுவை ரா.ரஜனி

நான் மூன்று முறை சப்தமிட்டுக் கத்தினேன். அந்தக் குரலில்தான் எனது ஆத்திரம் தீரும்போல் இருந்தது. எனது குரலுக்குப் பதிலாக இரண்டாவது தெருவிலிருந்து, மூன்று முறை ஒருவன் கத்திவிட்டு ஓய்ந்தான். நான் மெல்ல உறுமியபடி குடிசையில் மணல் மேட்டுப் பகுதியில் உடலை வளைத்துக் கொண்டேன்.

எனது உடம்பு சீராக ஆடிக் கொண்டிருக்க, நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டேன். 'மறுபடியும் குரைக்கலாமா' என்று தேன்றியது. எனது முதல் சப்தத்திற்கே குடிசையில் வத்சலாவின் குழந்தை "ம்மா...ஆ.." என்று சிணுங்கியது.

ஒரு முறை மெல்லத் தலையைத் தூக்கி, எச்சிலை விழுங்கினேன். "ஆவ்..." என்ற ஒலி என்னை மீறி வெளிவந்தது. கால்களின் மீது தலையை வைத்துக்கொண்டு கண்களை மூடினேன். உறக்கம் வரவில்லை. பின்னங்காலின் காயம் மிகுந்த எரிச்சலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. நெருப்புத்துண்டு போல ரத்தம் கட்டிக்கொண்டு, நீர் வடிந்து கொண்டிருந்தது. படிப்படியாக முன்னேற்றம் வரும். நீங்கும்; சீழ் கட்டும். பாவிப்பயல் யாராவது துரத்தினால் கூட ஓட முடியாதபடி செய்துவிட்டான். என்ன ஜென்மமோ என்னுடையது. சிலருக்கு நல்லபடியா வாழ்க்கை அமைஞ்சிடுது. நானோ, இந்தத் தெருவையே தான் சுற்றிச் சுற்றி வந்துகிட்டிருக்கேன்.

பிறந்து இரண்டு நாள்தான் அம்மாவோட ஸ்பரிசம் எனக்கு கிடைச்சிருக்கும்போல. பாலோட சுவை மாறாதப்பவே எந்தப் பாவியோ என்னைத் தூக்கிட்டுப் போய் இப்படி நடுரோட்ல நிறுத்திட்டான். இன்றைய வரைக்கும் ஒரு முன்னேற்றம் கிடையாது. பிறத்தியாரை நம்பித்தான் பிழைப்பு கிடக்கு. நினைச்சா உருண்டை ரசம் சாதம் வைக்கிறதையே பெரிதாக நினைச்சுக்கிறாங்க. அடுத்த தெரு 'காண்ட்டிராக்டர்' வீட்டில் என்னைப் போல் ஒருத்தன் இருக்கான். என்ன சொகுசு வாழ்க்கை தெரியுமா? 'ஜம்'னு கூடைச்சேரில் உட்கார்ந்திருப்பான். வீரமில்லாமல் ஒரு குரைப்பு எப்பொழுதாவது வரும். அதுக்கு என்ன கொஞ்சல் என்கிறீங்க...? பெயர்கூட ப்ளப்பியோ... க்ளப்பியோ என்னவோ, இங்கிலீஷ் பேர்...!

காலையில், சூடா பாலும் பிஸ்கெட்டும். எங்களுக்காக, தனியா பிஸ்கெட்டே இருக்காமே! அப்புறம் ஒன்பது மணிக்கு வேலைக்காரன் வருவான். அன்பா, சோப்பு போட்டுக் குளிப்பாட்டுவான். நான் எப்பவாவது மழையிலதான் நனைவேன், மேலும் வருஷம் பூரா காயம், கட்டியோட இருக்க வைச்சுடறாங்க.


இந்த அழகிலே எங்க தண்ணியில் நனையுறது? அப்புறம், 'பால் கனியிலே' பார்த்தா 'பளிச்சுனு' தெம்பா நின்னுகிட்டிருப்பான். ஒரு பிஸ்கெட் கடைவாயில் தொத்திகிட்டு இருக்கும். கழுத்தில் அழகா ஒரு கரும்பழுப்பு பெல்ட் இருக்கும். அரசாங்கத்திலே பணம் கட்டி வாங்கணுமாமே அதைக் கழுத்தில கட்டிகிட்டா ராஜா மாதிரி வீதியில எங்க வேணா சுத்தலாமாம், பிடிச்சுக்கிட்டுப் போகமாட்டாங்களாம்.

நான் ஒரு தடவை மாட்டிகிட்டேன். மனிதர்களை நம்ப முடியவில்லை. தினமும் திகில் வாழ்க்கை தான். அன்றைக்கு ஆகாரம் தேடி, ஒன்றும் கிடைக்காமல் சோகமா வந்துகிட்டிருந்தேன். ஒரு கம்பி வலைபோட்ட தள்ளுவண்டி வந்தது. உள்ளே என்னைப்போல் நிறையப்பேர் இருந்தாங்க. குரைச்சுகிட்டும் ஊளையிட்டுக் கிட்டும்... எனக்குப் புரிஞ்சு போச்சு. மாட்டினா உள்ளே போட்டுடுவானுங்க. பிறகு எங்க கொண்டு போய் என்ன செய்வானுங்கன்னு தெரியலை. இதேபோலதான் பாரதி தியேட்டர் 'கறுப்பு' போனது, வரவேயில்லை!

நான் வண்டிகிட்டேயிருந்து தப்பிச்சு பிள்ளையார் கோயில்கிட்ட ஓரமா நின்றுகொண்டேன். அங்கேயிருந்து ஒற்றைக் கண்ணால் கவனிச்சுக்கிட்டும் இருந்தேன். என்னோட 'தோஸ்த்து ஒருத்தன், பாக்குமுடையான்பட்டு பகுதியைச் சேர்ந்த ஒருத்தி, ஏட்டுவீட்டுக்காரன் – ஜிம்மி, ஜிம்மிம்பாங்க – எல்லாரையும் சுருக்கு மாட்டி வண்டியில ஏத்தினான் ஒருத்தன். அவன் காக்கி அரைக்கால் சட்டை போட்டிருந்தான் நான் படபடப்போட இருந்தேன்.

திடீர்னு பக்கத்தில் யாரோ வர்றாப்போல இருந்தது, திகிலாகி, திரும்பிப் பார்த்ததுதான் மிச்சம். 'சடக்னு' என்னோட கழுத்தில் சுருக்கு விழுந்தது. பாவி, கயிற்றை முதுகுக்குப் பின்னால் வச்சுகிட்டு வந்துருக்கான். திமிறிப் பார்த்தேன், முடிச்சுதான் இறுகிப்போச்சு என்னைக் கூண்டுகிட்டே இழுத்துக் கிட்டுப்போனான். அந்தக் கிழ மனிதன், கூண்டின் கம்பிக் கதவை உருவி, என்னை வரவேற்கத் தயாராக, என்னை உள்ளே தூக்கிப் போடறபோது எனக்குள் பயங்கர ஆவேசம். தப்பிக்கும் ஆவேசம்; திமிறினேன். என்னைப் பிடித்தவனோட பிடி நழுவிவிட, கயிற்றோடு வண்டிமேல் விழுந்து, பின் மண் தரையில் விழுந்தேன்...

அந்தக் கயிறு நல்லா அழுத்தமாயிருந்தது. கழுத்தில் இறுகிப் போய் நரக வேதனை. எனக்கு அதன்கிட்டேயிருந்து மீள நான்கு நாள் ஆச்சு. இன்னும் கூட அந்தக் கயிறு, வத்சலா வீட்டுக் குடிசை மண்ணில் புதைஞ்சு கிடக்கு. நான் தான் மறைத்தது. அதிலேர்ந்து கூண்டு போட்ட வண்டியைப் பார்த்தாலே போதும், 'ஸ்பாட்டை' விட்டு ஓடிவிடுவேன்.



உலகத்துல நிறைய வேறுபாடு இருக்கிறதாலதான் வாழ்க்கை நல்லபடியா அமையமாட்டேங்கிறது. எங்களுக்குள்ளேயும் நிறைய வேறுபாடு; தகராறு. பேட்டை, தெரு, குப்பை மேடு, பிளாட்பாரம், காம்பவுண்டுன்னு...ஒரே பிளவு மயம். இந்த வேறுபாடு எப்படி வருகிறதென்று புரியமாட்டேங்குது. ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டா, துரத்திக் கடிச்சுக்கிறோம்.

எனக்கு இன்னும் காலோட வலி அதிகமாயிட்டே இருந்தது. நாக்கால் மெல்ல ஈரப்படுத்தினேன். கொஞ்சம் இதமாக இருந்தாலும் எரிச்சல் எடுத்தது. என்னைக் காயப்படுத்தியது தாசில்தாருடைய காரோட்டி. நடந்த விஷயம் இதுதான்:

தாசில்தார் வீட்டிலே புதுசா, அடர்த்தியா மயிரை வச்சுகிட்டு, பொசுபொசுன்னு கண்ணை உருட்டிகிட்டு ஒருத்தன் நின்னுகிட்டிருந்தான். அவன் என்னைப் பார்த்துச் சிரிக்க... நான் பேசத் துடிச்சேன். அவன் உயர்ந்த ஜாதியென்றாலும் அவனோட கண்கள்லே அன்பு தெரிந்தது.


நான் குரல் கொடுத்தேன். அவனும் பதிலுக்கு மெல்லக் குரல் கொடுத்தான். இனிமையான ஒலி, நான் 'காம்பவுண்ட்டை'த் தாண்டி உள்ள புகுந்தேன். அப்போதான் தாசில்தார் வந்தான். என்னைப் பார்த்தான். படபடப்பாகி, "ஏய், டியர்! உள்ளே போ, போ...!" என்று என் புதிய நண்பனை உள்ளே அனுப்பிவிட்டு, "டிரைவர்!" என்று கத்தினான். என்னை அனல் கக்கியபடி பார்த்து, "சூ...!" என்றான். நான் டிரைவர் வருவதற்குள் வெளியே ஓடிவிட்டேன்.

என் மற்ற இனத்தவர் போல அந்தப் புதிய ஜீவன் கோபமாய், அந்நியமாய் என்னை உணரவில்லை. மாறாக, என்னிடம் ஏதோ, எனக்கு அவனிடம் ஏதோ பிடித்துப் போனதால் முதல் பார்வையிலேயே ஆழமான நட்பு உருவாகி விட்டது.

அன்று சாயங்காலம் மறுபடியும் வாசலருகில் போய், குரல் கொடுத்தேன். அவனும் ஆர்வமாய்க் குரல் கொடுத்து எட்டிப் பார்த்தான். அவனுக்கு என்னருகில் வருவதற்கு ஒரே துடிப்பு. அந்நேரத்தில்தானா தாசில்தாரும் டிரைவரும் வர வேண்டும்? ஓடிவந்தவனை அசுர வேகத்தில் சங்கிலியைப் பிடித்து தன் பக்கமாக தாசில்தார் இழுத்துக் கொள்ள, டிரைவர் என்னைக் கோபமாய்ப் பார்த்து, பக்கத்திலேயே கிடந்த சதுரவடிவான மரக் கட்டையை எடுத்து, வேகமா என் மேலே வீசினான். நான் குதிச்சுத் தப்பிச்சு ஓடியபோதும், என்னோட பின்னங்காலில் கட்டை பட்டு எகிறி விழுந்தது. வேகமாக அந்த இடத்தை விட்டு ஓடினேன்.

"இன்னொரு தடவை வந்தே, வாலை ஒட்ட நறுக்கிடுவேன்...!" டிரைவர் உறுமியது கேட்டது.

வத்சலாவின் குழந்தை தூங்கி விட்டது போலிருந்தது. என்பின்னங்



வரலாற்றில் மறக்க முடியா நிகழ்ச்சி

இந்தியக் குடியரசுத் தலைவர் எஸ். இராதாகிருஷ்ணன் புதுவை வருகையின்போது வை. வெங்கடசுப்பா ரெட்டியார் அன்புடன் வரவேற்கிறார். எதுவார் குபேர் உடனிருக்கிறார்.

காலின் ரணம் வலியினால் உச்சத்தில் போய்க்கொண்டிருக்க, எனக்கு அந்த டிரைவரின் செயல் கோபத்தை ஏற்படுத்தியது. தாசில்தாரின் இரக்கமற்ற தன்மை நிழலாடியது. ஒரு நட்புக்குக் குறுக்கீடா? சே. என்ன மனிதர்கள்?

நாளைக்குச் சென்று அந்தப் புதிய நண்பனிடம் ஒரு வார்த்தையாவது பேசிவிடவேண்டும். எங்களுக்கு மத்தியில் யாராவது குறுக்கிட்டால், பாய்ந்து குதறிவிட வேண்டியதுதான். மனது சற்று அமைதியானது.

எனது தலையைத் திருப்பி, என்னைப் பார்த்துக் கொண்டேன். தெருவிளக்கின் பெரும்பகுதி என்மேல் விழுந்தது. உடலெல்லாம் மணல் அப்பிப்போய், ஆங்காங்கு வடுக்களும் உதிர்ந்து போன ரோமம் தவிர்த்த உடம்பின் உட்தோல்களும் தெரிய எனக்கே நான் விகாரமாய்த்தான் தெரிந்தேன். எனது வாழ்க்கை நிலையற்றது. அதனால்தான், இப்படி தடம் புரண்டு காணப்படுகிறேன். என்னிடம் அம் மனிதர்கள் பயப்படவும் நியாயம் இருக்கிறது. ஏதாவது நோய், நொடி தொற்றிவிட்டால்...? என்னை நானே நொந்து கொண்டு, கணகளை மூடி, முன்னங்கால்களுக்கிடையில் தலையை வைத்துக் கொண்டேன்.

வத்சலாவின் குழந்தையிடமிருந்து மறுபடியும் சிணுக்கம் வந்தது. அது மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டே போக, வத்சலா, குழந்தையிடம் எச்சரித்தாள்:

"சத்தம் போட்டுட்டேயிருந்தா, தோத்தோவைக் கூப்பிடுவேன்..!"

சிணுக்கம் குறைந்தது போலிருந்தது. நான் மணலில் நன்கு அழுத்திக் கொண்டேன்.

விருந்தினன்

பேருந்து நிலையத்தில் இறங்கியதும் அருகிலிருந்து பெட்டிக்கடையில் "நளன் குளத்துக்கு எப்படிப் போகணும்?" என்று விசாரித்தான் ரகுபதி.

"எண்ணெய் சீயக்காய் வாங்கிட்டுப் போகணும்" என்றான் கடைக்காரன்.

'அவன் இடக்காகச் சொன்னானா, அல்லது தற்செயலாகவா' என்று யோசிக்கும் மனநிலையில் ரகுபதி இல்லை.

'காரைக்கால் பொதுமருத்துவமனையில் அம்மாவுக்கு ஆபரேஷன் உடனே புறப்பட்டு வா!' என்று தங்கை தந்தி கொடுத்திருந்ததால் அவசரமாகப் புறப்பட்டு வந்தான். ஆறுமணிநேரப் பயணம். காரைக்காலுக்கு வந்து சேரும்போது காலை எட்டுமணி.

உள்சிகிச்சை நோயாளிகளை மாலை நான்கரை மணிக்கு மேல்தான் பார்க்க முடியும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்.

மாலைவரை இங்கே என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது 'திருநள்ளாறு' என்று பெயர்ப் பலகையோடு பேருந்துகள் வந்து கொண்டிருந்தன.

அம்மாவுக்கு நோய் குணமாக வேண்டும் என்று திருநள்ளாறு சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனை செய்து விபூதிப்பிரசாதம் வாங்கிக் கொண்டுபோய் அம்மாவுக்குக் கொடுத்தால் மகிழ்ச்சியடைவாள் என்றெண்ணி ஒரு பேருந்தில் ஏறி உட்கார்ந்தான். சரியாக ஐந்தாவது நிமிடத்தில் திருநள்ளாற்றில்...

"நளின் குளத்துக்கு வழி கேட்டேங்க" என்று திருத்திக் கேட்டான் கடைக்காரனிடம்.

"நேரா மேற்கே கொஞ்சதூரம் போங்க. அங்கே ஓர் 'ஆர்ச்' இருக்கும். அதுவழியாப் போனா பக்கத்திலேயே குளம்."

✵

மணி 8.35

எட்டேமுக்கால் மணிக்கு அலுவலகம் ஆரம்பமாகும். அந்த நேரத்துக்குள் பணியாளர்கள் தன் இருக்கையில் இல்லையென்றால் மனிதனை மனிதனாக மதிக்கமாட்டார் ஆஃபீஸ் சூப்பரின்டென்டெண்ட். அவருக்கு 'கிரேடு-ஒன்' பதவி உயர்வு வந்ததிலிருந்து இந்தக் குதிகுதிக்கிறார்.

ஆறுமுகசாமி எப்போதும் 8.20க்கெல்லாம் வீட்டிலிருந்து புறப்பட்டு விடுவான். திருநள்ளாற்றிலிருந்து காரைக்கால் ஆறு கிலோமீட்டர்தான். ஸ்கூட்டரில்தான் போகிறான். என்றாலும் போக்குவரத்து நெரிசலை உத்தேசித்துப் பத்து நிமிடம் முன்னதாகவே புறப்பட்டு விடுவான்.

சோதனையாக இன்று இரண்டு விஷயங்கள் அவனைத் தாமதப்படுத்தி விட்டன. ஆறுமுகசாமியின் ஏழு வயது மகன் எட்டு மணியடிக்கிற நேரத்தில் கீழே விழுந்து முட்டியைச் சிராய்த்துக் கொண்டான். அவனை ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனால் ஒரே கூட்டம். தெரு நண்பர் ஒருவரிடம் பையனை டாக்டரிடம் காண்பித்துக் 'கட்டு' போட்டு வீட்டிற்கு அழைத்து வரும்படி சொல்லிவிட்டு அவசர அவசரமாக வீட்டுக்கு வந்தால்...?

ஆறுமுகசாமி குளிக்கப் போகிற நேரத்தில் அவன் மனைவி போய்ப் பாத்ரூமுக்குள் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள்.

9 மணிக்கு, புயலில் விழுந்த மரங்களை ஏலம் விடவேண்டும். அவன் கட்டாயமாக அங்கே இருந்தாக வேண்டும் இல்லையென்றால் அவனை 'ஆறுமுகம் வேறு, சாமி வேறு' என்று ஆக்கிவிடுவார் 'கிரேடு-ஒன்,'

"ஜானகீ! லேட்டாகுது. என் அவசரம் தெரியாமே சாவகாசமா தேய்ச்சுக் குளிக்கிறியா? சீக்கிரம் வா!"

தண்ணீர்ச் சத்தத்தில் அவன் சொல்வது காதில் விழாமல், 'வழக்கம் போல் எதையோ மறந்து விட்டுத் தேடுகிறார்.' என்ற எண்ணத்தில், "நீங்க வெச்ச இடத்திலேயேதான் இருக்கும். நல்லாத் தேடிப்பாருங்க!" என்று ஜானகி சொல்ல... சிரிப்பதா, கோபிப்பதா என்ற குழப்பத்தில் தலையில் கைவைத்து உட்கார்ந்துவிட்டான்.

ஐந்து நிமிடம் கழித்துக் குளியலறையிலிருந்து ஜானகி வந்தாள்.

வாய்க்குள் யாரையோ திட்டிக் கொண்டே குளிக்க ஓடினான். அவன் குளியறைக்குப் போனதுதான் தெரியும். 'குளித்தானா, சோப் போட்டானா, தலை துவட்டினானா,' என்பது தெரியாமல், அடுத்த இரண்டு நிமிடத்திற்குள் வெளியே வந்து, 'எண்ணெய் எங்கே, சீப்பு எங்கே, ஜட்டி எங்கே, பனியன் எங்கே, பேண்ட் எங்கே, சட்டை எங்கே.' என்று ஜானகியின் முன் 'நாட்டியம்' ஆடத்தொடங்கினான்.

ஜானகியும் சளைக்கவில்லை. 'இந்தாங்க, இந்தாங்க' என்று ஒவ்வொன்றாக எடுத்துக்கொடுத்து, பதிலுக்கு ஆடிக்கொண்டிருந்தாள்.

"இவ்வளவு நேரம் நின்னுகிட்டிருந்தியே? பேண்ட் லூப்பிலே பெல்ட்டைச் செருகிவைக்கக் கூடாதா?"- ஒரு பாட்டும் பாடினான்.

"சும்மாவா நின்னுகிட்டிருந்தேன்? நானும் இப்போ தானே குளிச்சுட்டுவந்தேன்?" அவளும் பதில்பாட்டுப் பாடினாள்.

ஒரு வழியாகக் கிளம்பிவிட்டான் 8.40க்கு.

வீட்டை விட்டு வெளியே வந்து ஸ்கூட்டரை உதைத்ததும் உயிர் பெற்றது. 'அறுபது கி.மீ.வேகத்தில் போனால்தான் 'கிரேடு-ஒன்' முன்னால் 8.50க்காவது நிற்கலாம்.'

ஆறுமுகசாமி ஸ்கூட்டரில் புறப்பட்டான்- வேகமாக.

✵

குறுக்கே வந்த நாய் ஒன்றுக்காக ப்ரேக்கை மிதித்து ஸ்கூட்டரை நிறுத்

பகவானந்ததாசன்

"மின்மினிகள்"

காற்றில் பட படத்தது
காதல் கடிதம்
பிணமாய் நான்

வறண்டு போனது ஊர்
அம்மாவின் முகத்தில்
தெப்பக் குளங்கள்

ஏழையின் வீட்டுக்குள்
கசியும் நிலவு
தடை செய்யும் மேகம்

ஆட்டோக்காரரின் பார்வையில்
மீட்டர் சார்ஜ் குறைந்தது
நன்றி அக்காவிற்கு

காற்றை உள் வாங்கி
இசையை வெளியேற்றியது
ஓட்டைப் புல்லாங்குழல்

அமைதியாய்க் குளம்
கோலமிட்டுச் சென்றது
மீன் கொத்தி

யாருமில்லையென்று நினைத்தேன்...
எனக்கு முன்
நிறையச் சுவடுகள்

வீசிய காற்றில்
வேகமாய்ப் பேசியது அலை
யாருக்கும் புரியவில்லை

வயலில் கால் வைத்தேன்
அழகாய்ப் பறந்தது சிட்டு
மிரட்சியில் குழந்தை!

-புதுவை இளவேனில்.

தியபோது ரகுபதியைப் பார்த்து விட்டான் ஆறுமுகசாமி.

'இங்கே எப்படி இவர்?' என்று ஆச்சரியப்பட்டான்.

ரகுபதி நாயைப் பார்த்தானே தவிர ஸ்கூட்டர்காரனைக் கவனிக்க வில்லை.

"ஸார்! என்னைத் தெரியுதா?"

ரகுபதிக்கு உடனே ஞாபகம் வந்துவிட்டது.

"நீங்க... ஆறுமுகசாமி தானே? பாண்டிச்சேரியிலே..."

"ஆமாம். நலமா இருக்கீங்களா? ரவிச்சந்திரன் தானே உங்க பெயர்?"

"ரகுபதி"

"மன்னிச்சுக்குங்க. எனக்குப் பெயர் மறதி அதிகம். மறுபடி நாம சந்திக்கலே இல்லையா? திருநள்ளாற்றுக்கு என்ன விஷயமா வந்தீங்க?"

"சுவாமி தரிசனத்துக்கு வந்தேனன் அம்மாவைக் காரைக்கால் 'ஜி.ஹெச்' சிலே சேர்த்திருக்காங்க. சாயந்த ரமாப் போய்ப் பார்க்கணும்"

"சரி. ஸ்கூட்டரிலே உட்காருங்க. வீட்டுக்குப் போவோம்."

"பரவாயில்லே ஸர்! நீங்க ஏதோ அவசரவேலையா போய்க்கிட்டிருக் கீங்க. மீண்டும் சந்திச்சதிலே ரொம்பச் சந்தோஷம். கோயிலுக்குப் போயிட்டுக் காரைக்கால் போயிடு வேன் நான்."

"நோ நோ, எங்க ஊருக்கு வந்துட்டு வீட்டுக்கு வராமே போறதா? உட்காருங்க பின்னாலே"

ரகுபதியால் மறுக்க முடிய வில்லை.

வீட்டுக்குப் போனதும், "ரகுபதி ஸார்! நான் ஒன்பதுக்குள்ளே ஆபீஸிலே இருந்தாகணும். நான் புறப்படறேன். உங்க சொந்த வீடா நினைச்சுக்கணும். குளத்துக்கும் கோயிலுக்கும் போயிட்டு வந்து மத்தியானம் வீட்டிலே சாப்பிட்டுட்டு காரைக்கால் பெருமாள் கோயி லுக்குப் பக்கத்திலே ஒரு பெட்டிக் கடை இருக்கும். 'சூசைப் பிள்ளை கடை'ன்னு பேர். நாலே காலுக் கெல்லாம் அங்கே வந்துடுங்க. நான் வந்து உங்களை 'ஜி.ஹெச்'சுக்கு அழைச்சுட்டுப் போறேன்".

"என்னாலே எதுக்கு ஸார் உங்களுக்கு வீண் சிரமம்?"

"சிரமமா? கௌரவம்." என்ற ஆறுமுகசாமி உட்பக்கம் திரும்பி "ஜானகி," என்று குரல் கொடுத்த வுடன் கையில் காபி டம்ளருடன் அவள் வந்தாள். ஹாலில் பேச்சுக் குரல் கேட்டாலே பாலைக் காய்ச்சி விடுவாள் அவள்.

"ஸார் பேர் ரகுபதி. எனக்கு வேண்டியவர். மத்தியானம் அவ ருக்கு நம்ம வீட்டிலே சாப்பாடு. சாப்பிட்டதும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கச் சொல்லு! நாலு மணிக்கு அவர் காரைக்கால் புறப் படணும். நல்லா கவனிச்சுக்க! நான் வரட்டுமா? வரேன் ஸார்!"- பதிலைக் கூட எதிர்பார்க்காமல் மறுபடியும் ஸ்கூட்டருக்கு ஓடினான்.

கணவரின் உருவம் கண்ணுக்கு மறைகிற வரையில் பார்த்துக் கொண்டு நின்ற ஜானகி வீட்டுக்குள் செல்லத் திரும்பும்போதுதான் ரகுபதியை நன்றாகப் பார்த்தாள்.

அவனை அவள் எங்கேயோ ஏற்கெனவே பார்த்திருப்பதுபோல் தோன்றியது. ரகுபதியும் ஜானகி யைப் பார்த்தான். அவனும் அவ் வாறே உணர்ந்தான். எங்கே, எப்படிச் சந்தித்தோம் என்பது இருவருக்கும் ஒரே நேரத்தில் ஞாபகம் வந்துவிட, ஜானகி திடுக்கிட்டாள். ரகுபதி திகைப்படைந் தான். வீட்டில் வேறு யாருமில் லையே என்பதால் அவள் அவனை ஒரு திகிலுடன் பார்த்தாள்.

ஆஸ்பத்திரியில் முழங்காலுக்குக் கட்டுப் போட்டுக்கொண்டு அப்போது தான் வீடு திரும்பிய அவளது மகன், அம்மாவும் வேறு ஒருவரும் ஏன் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரியாமல் பயந்து "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான்.

✸

இரவு மணி பத்து.

"என்னங்க! இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு அவர் நம்ம வீட்டிலே தங்கியிருப்பாரா?"


"ஆமாம் ஜானகி! உனக்குச் சமைச்சுப் போடறதிலே ஏதாவது அலுப்பா இருக்கா?"

"நான் என்னைக்காவது வர்ற விருந்தினர்களைக் கவனிக்காமே விட்டிருக்கேனா?"

"நாளைக்கு அவங்க அம்மாவுக்கு வயிற்றிலே ஆபரேஷன். ரகுபதி யோட தங்கச்சிதான் அவங்களுக் குத் துணையா இருக்காங்க. இந்த நிலைமையிலே அவர் உடனே ஊருக்குத் திரும்பிட முடியாது. நம்ம காரைக்கால் வட்டாரத்திலே அவருக்குத் தெரிஞ்சவங்க வேற யாருமில்லே. லாட்ஜ், ஹோட்டல் சாப்பாடுன்னு செலவு செய்ய அவர் கிட்டே அவ்வளவு பணம் இருக் குதோ இல்லையோ? ரெண்டுமூணு நாள் நம்ம வீட்டிலே தங்கிட்டுப் போகட்டுமே!"

"ஏங்க! அவர் உங்களுக்கு நெருங்கிய நண்பரா? என்கிட்டே சொன்னதே இல்லையே நீங்க?"

"நெருங்கிய நண்பர் இல்லை. ஒரு தடவை அவரும் நானும் பாண்டிச்சேரி லாட்ஜிலே பக்கத்துப்



பக்கத்து ரூமிலே ரெண்டு நாள் தங்கியிருந்தோம்.சாதாரணபேச்சுப் பழக்கம் தான். யாராயிருந்தா என்ன? உறவினரா இல்லாத மற்றவங்களை வீட்டுக்கு அழைச்சு உபசரிக்கிறதிலே ஒரு தனி ஆனந்தம். அதுசரி, திடீர்னு ஏன் ரகுபதியைப் பத்திப் பேச்செடுத்தே ஜானகி?"

"அவரைப் பத்தி உங்ககிட்டே ஒரு சேதி சொல்லணும்"

"என்ன?"

"அவரை நான் முந்தியே பார்த்திருக்கேன்"

"எங்கே?"

"திருவாரூர்லே"

"எப்படி?"

"எங்க பெரியம்மா மகள் கல்யாணத்துக்குப் போயிருந்தோம். அந்தக் கல்யாணத்திலே அவர்தான் மாப்பிள்ளைத் தோழன். ரெண்டு மூணு நாள் மாப்பிள்ளை வீட்டுக்கும் பெண் வீட்டுக்கும் போய் வந்து கிட்டிருந்தப்போ அவரும் கூடவே வந்தார்."

"அப்படியா? ரொம்ப நல்லதாப் போச்சு, அவர் உனக்கும் வேண்டிய வராப் போயிட்டார்"

"ம்க்கூம். அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. கல்யாண வீட்டிலே அவராலே எனக்கு ரொம்பத் தொந் தரவாப் போயிட்டுது. மூணு நாளும் நான் அப்படி இப்படி நகர முடியலே. என் பின்னாலேயே சுத்த ஆரம்பிச்சுட்டார். ஊருக்குப் போற துக்கு முந்தி மாடிப்படியிலே என்ன வழிமறிச்சு 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா'ன்னு நேருக்கு நேராகவே கேட்டார்"

"அடடே! இப்படியெல்லாம் நடந்துகிட்டாரா! நீ என்ன சொன்னே?"

"ச்சீ. இப்போ வழியை விடப் பாறியா. சத்தம் போடட்டுமான்னு கட்டுட்டேன். வழியை விட்டார். டியாந்துட்டேன். அவர் ஊருக்குப் பாறவரைக்கும் கண்ணிலேயே டலே".

"இது எனக்குத் தெரியாமப் பாச்சே! காலையிலேயிருந்து ரகுபதிகிட்டே பயந்துகிட்டே இருந்தியா ஜானகி?"

"நானும் பயந்துகிட்டே தான் இருந்தேன். நம்ம சதீஷை எங்கேயும் விடலே. அவரும் பயந்துகிட்டுத் தான் இருக்கார்- இதை உங்ககிட்டே நான் சொல்லிடுவேனோன்னு. என்னை நிமிர்ந்தே பார்க்கலே அவர்."

"எத்தனை வருஷத்துக்கு முந்தி நடந்தது இது?"

"நமக்குக் கல்யாணமாகிறதுக்கு நாலஞ்சு வருஷத்துக்கு முந்தி"

"ரொம்பப் பழங்காலத்துச் சமாச்சாரம்...ஜானகி! இன்னைக்கு உன்னை அவர் நிமிர்ந்து பார்க்காததுக்குக் காரணம் தெரிஞ்சுட்டுது. அப்போ நீ ரொம்ப அழகா இருந்திருப்பே. உன் பின்னாலேயே சுத்தினார். இன்னைக்கு உன் நிலைமை தெரிஞ்சிருக்கும். அதான் நிமிர்ந்தே பார்க்கலே,"

"ச்சீ! போங்கத்தான்."

"வாலிபத்திலே இதெல்லாம் சகஜம் தான் ஜானகி! ஒரு தடவை பாரேன். நாகப்பட்டினத்திலே என் காதலி வீட்டுத் தெருவிலே நடந்து போய்க்கிட்டிருந்தேன். அவளோட அப்பா என்கிட்டே வந்தார். 'தம்பி! இருபத்தேழாவது தடவையா இந்தத் தெருவிலே நடக்கிறே. காலை வலிக்கும். ஒழுங்கா விடுபோய்ச் சேரு!'ன்னார். அப்புறம் அவ கல்யாணத்துக்குப் போனேன். அவரே என்னைக் கையைப் பிடிச்சுப் பந்திக்கு அழைச்சுகிட்டுப்போய் ராஜ உபசாரம் பண்ணினார்." என்று சொல்லிச் சிரித்தான் ஆறுமுகசாமி கொட்டாவி விட்டுக்கொண்டே.

"ஏங்க, தூக்கம் வருதா?"

"ஆமாம். காலையிலே சீக்கிரம் எழுந்திருக்கணும். நீ முதல்லே குளிச்சுட்டு வந்து ரகுபதிக்கு வெந்நீர் போட்டு வெச்சுட்டு, டிஃபன் தயார் பண்ணிட்டா, நான் போகும்போது அவரை ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் விட்டுடுவேன். பழைய சமாச்சாரத்தை மனசிலே போட்டுக் குழப்பிக்காதே! அவர்கிட்டேயும் காண்பிச்சுக்காதே! நல்லவிதமா அவருக்குச் சமைச்சுப் பரிமாறு!" என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான் ஆறுமுகசாமி.

அம்மா ஆஸ்பத்திரியிலிருக்கிறாளே என்ற கவலையிலிருந்த ரகுபதிக்கு அநேகமாக மூன்று நாளுமே விருந்துதான்.

தன்னை யாரென்று கண்டு கொண்ட பிறகும் சிறிதும் வேற்றுமை பாராட்டாது விருந்தினனாக ஏற்று உபசாரம் செய்யும் பேருள்ளம் படைத்த அன்புத் தம்பதியை நெஞ்சுக்குள் வாழ்த்தினான் ரகுபதி. ஃ



வரலாற்றில் மறக்க முடியா நிகழ்ச்சி

1.11.1954 பிரெஞ்சிந்திய விடுதலைக்குப்பின் நெட்டப்பாக்கத்தில் பா. முத்துக்குமரப்ப ரெட்டியார் (பிரெஞ்சிந்திய விடுதலை அரசின் தலைவர்) இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார்



தரையைத் தொடாத மழை

சேத்தூர் அன்பழகன்

வீடுமுழுக்க கூடத்தில் கூடியிருந்தது. எல்லாரும் சாப்பிட்டு முடித்திருந்தார்கள். அப்பா வெற்றிலையின் பின்புறம் வாசனைச் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டிருந்தார்.

"கேஸ்ஸை நல்ல மூடி வச்சியா சுதா?" என்று அம்மா மருமகளிடம் விசாரித்துக்கொண்டிருந்தாள்.

கோபி கையில் வார இதழுடன் அப்பாவுக்கு எதிரே சற்றுத்தள்ளி ஸ்டூலில் உட்கார்ந்தான். ராஜலட்சுமியும் தம்பிக்கருகில் வந்து நாற்காலியில் உட்கார்ந்தாள். சாப்பிட்ட பிறகு முக்கிய விஷயம் ஒன்று பேச இருப்பதாகச் சொல்லியிருந்தாள். அதனால்தான் எல்லாரும் கூடியிருந்தார்கள்.

'என்னவிஷயம்?' என்று கேட்பது போல் அப்பா தலையை அசைத்தார். அவள் என்ன பதில் சொல்லப் போகிறாள் என்ற ஆர்வத்துடன் ஒரக்கண்ணால் அவளைப் பார்த்தான் கோபி.

"அம்மாவும் வரட்டுமே" என்றாள் ராஜி.

"இன்னும் அங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கே?" என்று மனைவியைச் சத்தமாய் அழைத்தார். "இதோ வந்துட்டேன்" என்று ஈரக்கையை முன்றானையில் துடைத்தபடி அவள் வந்தாள். "உட்காரும்மா" என்றாள் ராஜி. ஒரு சின்னத் தடுக்கை எடுத்துப் போட்டுக் கொண்டு முற்றத்துக் குறட்டில் உட்கார்ந்தாள் அம்மா. "நீ மட்டும் ஏம்மா சுதா நின்னுகிட்டிருக்கே?" என்றார் மருமகளிடம். அவளும் மாமியாருக்கருகில் உட்கார்ந்து கொண்டாள். "இப்ப சொல்லும்மா."

ராஜி ஒரு முறை எல்லாரது முகத்தையும் பார்த்து விட்டு, பிறகு தலைகுனிந்தபடி, "நான் ஒருத்தரோட வாழறதா முடிவு பண்ணியிருக்கேம்பா" என்றாள்.

"அதாவது கல்யாணம் பண்ணிக்கப்போறேன்னு சொல்றே, அதானேம்மா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்ப்பா"

"யாருடி அது?" அம்மா அவசரமாய்க் கேட்டாள்.

தனக்கு வரப்போகும் மருமகன் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவல் அவளுக்கும் இருக்காதா? எத்தனையோ தடவை, தான் வற்புறுத்திய போதெல்லாம் மாட்டேன் என்று சொல்லியவள் இப்போது இந்த நாற்பது வயதில் மனதை மாற்றிக் கொண்டாள் என்றால்... அப்படிப்பட்டவ[ன்] யாராக இருக்கும்?

ரங்கநாதனுக்கு ஐந்து பெண்கள் ஒரேபையன். மூத்தவள் தான் ராஜலட்சுமி. சாதாரண முனிசிப[ல்] ஊழியரான அவரால் குடும்ப[ச்] சுமையைத் தாங்கமுடியவில்லை. ஆனால், ராஜலட்சுமியை மட்டு[ம்] நன்றாகப் படிக்கவைத்தார். பி.யு.சி.யை முடித்தபோதே அவ[ளு]க்கு அரசாங்கத்தில் கிளார்[க்] உத்தியோகம் கிடைத்தது. பெண்ணுக்கு உத்தியோகம் கிடைத்தவுடனேயே பொறுப்புகளை அவ[ள்] தலையில் கட்டிவிட்டார். அன்[று] உழைக்கத் தொடங்கியவள் தான் நான்கு சகோதரிகளுக்கும் திரு[ம]ணம் முடித்து வைத்து விட்டாள்.

ஏன் கோபிக்கும் கூட கல்யாண[ம்] ஆகி ஆறு மாதமாகிறது. அவனு[ம்] பாலிடெக்னிக் முடித்து ஒ[ரு] கம்பெனியில் டிராப்ட்ஸ்மேனா[க] இருக்கிறான்.

அந்தக்குடும்பத்திற்கு ஏணியா[க] இருந்து எல்லாரது வாழ்க்கையு[ம்] ஒளி பெற உதவியதனாலே[யே] வீட்டில் அவளுக்குத்தான் முத[ல்] மரியாதை.

இந்த நாற்பது வயதில் அவளு[க்கு] பிரமோஷனாகி ட்ரஷரியில் அக்கவுண்[ட]

உன்னையே நம்பு!

இளைஞனே, இளைஞனே
எதிர்காலத் தலைவனே!
இன்றுள்ள நிலையதனை
எண்ணுவ துமுண்டோ?

நன்றாக உண்ணுகிறாய்
நவீனமாக உடுத்துகிறாய்!
என்றாலும் உன்னிடத்தில்
இலட்சிய மில்லையே ஏன்?

தெருப்பற்று ஊர்ப்பற்று
இனப்பற்று என்றேதான்
மெனக்கெட்டுப் பொறுப்பற்று
வெறுப்பை வளர்ப்பதேனோ?

'வாழ்க' 'ஒழிக' கோஷங்கள்
வழங்கிய நன்மை என்ன?



வளம் பல இருந்தும் நாடு
வளராத விந்தை என்ன?

ஓ... இளைஞனே!
நீ – நிமிர்ந்தால்
விண்ணைத் தொடலாம்.
விதைக்குள் இருக்குது விருட்சம்!
உன்
விழிக்குள் இருக்குது வெளிச்சம்!

ஓ... இளைஞனே!
உன்னையே நம்பு!
நம்பிக்கை என்ற கோலால்
இந்த உலகையே நெம்பு!

விழுதியூர். ராஜேந்திரன்.

டண்டாக இருக்கிறாள். இவ்வளவு நாள் திருமண ஆசையே இல்லாமல் இருந்தவளுக்கு இப்போது எப்படி திடீரென்று ஆசை வந்தது?

"என் கூட வேலைபார்க்கிற கணேசன், அவரும் அக்கவுண்டண்ட் தான்."

கோபிக்கு அவரைத் தெரியும். ஆபீசுக்கு அவளைத் தேடி வரும் போது... சிலர் வீட்டுத் திருமண விசேடங்களில்... பார்த்திருக்கிறான். அப்பாவும் பார்த்திருப்பார். நினைவுக்கு வராமல் போயிருக்கலாம்.

ஓரிரு நிமிடங்கள் எல்லாரும் மௌனம் சாதித்தார்கள். அப்பா என்ன சொல்லப்போகிறார் என்று அவர் முகத்தையே பார்த்தார்கள்.

"அவர் குடும்பத்தைப் பத்தி ஒண்ணும் சொல்லலையேம்மா" அப்பா மெதுவான குரலில் கேட்டார்.

"அவருக்குத் திருமணமாகி பதினைஞ்சு வருஷமாச்சு. குழந்தை இல்லை. மனைவி இருக்காங்க. பட் ஷி இஸ் அன்ஃபிட் ஃபார் தி மேரிட்டல் லைஃப்"

"ஏன்?"

"யூட்ரஸ் ட்ரபிள்"

"ஓ" அப்பா நிமிர்ந்து விட்டத்தைப் பார்த்தார். மகள் பேசுவதை ஆச்சரியத்துடனும் கவலைதோய்ந்த முகத்துடனும் கேட்டுக் கொண்டிருந்தாள் அம்மா.

"அவர்மனைவி இதுக்கு சம்மதிச்சுட்டாங்களா?"

"சம்மதிச்சுட்டதா அவர் சொன்னார். ரொம்ப நாளாவே வேற கல்யாணம் செய்துக்கச் சொல்லி அவரை அவங்கதான் வற்புறுத்தறாங்களாம்."

"இதனால் பின்னாடி ஒண்ணும் சிக்கல் வராதா?" அப்பா கவலையுடன் கேட்டார்.

"வராதுன்னு நம்பறேன்."

"எப்ப கல்யாணம் வச்சுக்கறாப்பல?"

"கல்யாணம்னெல்லாம் பெரிசா ஒண்ணும் செய்றாப்பல ஐடியா இல்லை."

"கல்யாணம் பண்ணிக்கறது இல்லேன்னா ஆசைநாயகியா இருக்கப்போறியா?" அதுவரை பேசாமல் இருந்த அம்மா திடீரென்று கோபமாய்க் கேட்டாள்.

ராஜலட்சுமி, அம்மாவை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு "ஒரு நாளைக்கு நெருக்கமா உள்ளவங்களையெல்லாம் கூப்பிட்டு வச்சு மோதிரம் மாத்திக்கலாம்னு எண்ணம். முதல்ல உங்க சம்மதம் வேணும். பிறகு நீங்கள்லாம் அவரைப் பார்க்கணும்" என்றாள். அம்மா அழத்தொடங்கிவிட்டாள்.

"ஏன் இப்ப நீ அழறே?... சரி நீ போய்ப் படு ராஜி! நாளைக்கு முடிவுசெய்யலாம்" என்றார் அப்பா யோசனையுடன். அவள் பதில் ஏதும் சொல்லாமல் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டாள். சுதாவும், "நானும் போய்ப் படுக்கறேன்" என்று எழுந்து போனாள்.

நிலாவெளிச்சம் முற்றத்தின் வழியே உள்ளே நுழைந்து தரையில் பாய் விரித்திருந்தது. சில மின்மினிகள் ஓட்டுவாரியில் உட்கார்ந்து சரம்சரமாய் மின்னின.

"நீ என்ன நினைக்கிறே?" என்று மனைவியிடம் கேட்டார் ரங்கநாதன்.

"எனக்குப் பிடிக்கலைங்க... எனக்குப் பிடிக்கலை" என்றாள் அவள் அழுகுரலில்.

"ஏன் பிடிக்கலை?"

"யாருக்கோ போயி இப்படி... கல்யாணம்னு கூட ஒண்ணு செய்துக்காமே..." அவள், மூக்கை முன்றானையால் துடைத்துக் கொண்டாள்.

ரங்கநாதன் வெகுநேரம் வரை எதுவும் பேசவில்லை. எங்கோ

வெறித்தபார்வையுடன் உட்கார்ந்தி ருந்தார். பிறகு மகனிடம் கேட்டார்: "நீ என்னடா கோபி நினைக்கிறே?"

"எனக்கென்னமோ அவ இஷ்டப்படி விட்டுடறதுதான் சரின்னு படுது" என்றான் கோபி.

"பாவி, என்னடா சொல்றே?" எனக் கேட்டாள் அம்மா.

" நான் மட்டுமா பாவி? நாம எல்லாருமே பாவிதான். வயசுவந்த பெண்ணுக்கு இவ்வளவு காலம் கல்யாணம் செய்து வைக்காத நாமதான் பாவிகள் . அவ ஆசைப்பட்டு செஞ்சிக்கறேன்னு சொல்லும் போது தடுக்கற பாவிகளும் நாமதான்."

"அவ கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னாத் தேவ லையே! எவன் கூடவோ ஒண்ணா வாழப்போறேன்னுல்ல சொல்றா?"

"இருக்கட்டுமே! இத்தனை வயசுக்குப்பிறகாவது இது அவளுக் குத்தோணிருக்கே. அவளும் பெண் தானே? அவளுக்கும் ஆசைகள் இருக்காதா?"

"அதுக்காக இப்படிப் போய் இருக்கணுமா?"

"அம்மா! அவசெய்யறது சரியா தப்பாங்கற விஷயம் அப்புறம் இருக்கட்டும். இதை அவ உன்கிட்ட சொல்லாமலே செஞ்சிருந்தா அப்போ என்ன செய்வே அம்மா? அவ என்ன உலகம் தெரியாத சின்னப் பெண்ணா? அவளுக்கு வயசு நாற்பது ஆகுதும்மா. இவ்வ ளவு காலம் இந்தக் குடும்பத்துக்காக ஓடா உழைச்சிருக்கா. இப்ப அவ ஏதோ ஆசைப்படறான்னா அதை நாம ஏன் தடுக்கணும்?"

"நாற்பது வயசு பொண்ணுமேல் ஒருத்தன் ஆசைப்படறான்னா எதுக்கு ஆசைப்படுவான்? அவ கைநிறைய சம்பாதிக்கறா. ஜாலியா செலவு பண்ணலாமே, வேறே எதுக்கு?" என்றாள் அவள் மிகக் கோபமாய்.

"பணத்துக்காகத்தான் நாற்பது வயசு பொண்ணுமேல ஒருத்தன் ஆசைப்படறான்னா, நாற்பது வய சாகியும் அவ ஆசைப்படற மாதிரி



அவளை வாழவிடாமத் தடுக்கிறது மட்டும் வேறெதுக்காம்?"

"பாவி பணத்துக்காகவாடா நாங்க வேண்டாங்கறோம்? அவ நல்லா இருக்கணும், ஏமாந்துடக் கூடாதுங்கற அக்கறையினாலே தானே சொல்றோம்"

"அம்மா! அக்கா . ஏமாறவும் மாட்டா; ஏமாத்தவும் மாட்டா. இத்தனை வருஷத்துல இதை நான் நல்லாத் தெரிஞ்சுகிட்டேன். எனக்கு ஆசை இல்லை, உணர்ச்சிகள் இல்லைன்னு அவ ஏமாத்தல... பொய் வேஷம் போடலை... அவ விரும்பினா நமக்குத் தெரியாம எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். ஆனா, அப்படி இல்லையே! அது போதாதா?"

பெற்றோர் மௌனம் சாதித்தனர். "ஊர் உலகம் ஏதாச்சும் பேசுமேன்னு கவலைப்படாதீங்க. அவரை வரச்சொல்லி குடும்ப விஷயமெல்லாம் பேசித் தெரிஞ்சுக் குங்க. ஆசீர்வாதம் செய்து அனுப் புங்க. எளிமையா ஒரு கோயில்ல கல்யாணம் வச்சு ஒரு டிபன் கொடுத்திடலாம்"

"நாலு பொண்ணுங்களை நல்ல விதமா கட்டிக்கொடுத்திருக்கோமே

அவங்கள்ளாம் நம்மளைக் காறித் துப்புவாங்களேடா"

"துப்பட்டுமே! அந்த நாலு பேருக்கும் வாழ்க்கை அமைச்சுத் தந்ததே அவதானே? அவங்க உன்னைக் கௌரவமா நினைக்கணும் சுறதுக்காக அவளைக் கன்னியா ஸ்திரீயா ஆகணும்கறியா? போம்மா.. அஞ்சு பொண்ணு பெத்திருக்கே ஒரு பொண்ணோட மனசும் உணர்ச்சியும் உனக்குப் புரியலை" என்று எழுந்து கொண்டான் கோபி.

உள்ளே இவர்கள் பேசுவதைக் கேட்டபடி படுத்திருந்த ராஜி தம்பியின் வார்த்தைகளால் மனம் நெகிழ்ந்து பெருமிதத்துடன் கண்ணீர் சிந்தினாள்.

"என் மனசைப் புரிஞ்சவன் நீ ஒருத்தனாவது இந்த வீட்ல இருக்கியே"

ஆனால், தன் கல்யாண ஆசை குடும்பத்தில் இவ்வளவு குழப்பத்தை உண்டுபண்ணும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

"இவ்வளவு பிரச்னைகளோடும், மனவருத்தத்தோடும் எனக்கு ஒரு வாழ்க்கை தேவையா? தேவையில்லை."

நாளை அவரைச்சந்திக்கும் போது "கடைசிவரை வெறும் நட்புடனேயே இருந்துவிடுவோம்" என்று கூறிவிட வேண்டும் என்று மனதில் தீர்மானித்துக்கொண்டாள். ஆனால், அழுகை மட்டும் நிற்கவில்லை.

நிலாவும் அவள் ஆசைகளைப் போலவே மேலை வானில் சரிந்துகொண்டிருந்தது.



வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்ச்சி

கடற்கரை நேரு சிலை



புதுச்சேரி ஆளுநர் மாளிகை

பாரதியின் குயில் தோப்பு

க.ப. அறவாணன்

சுதந்தரப் போராட்டக் காலத்தில் புகழ் பெற்ற கவிஞராகப் பாரதி விளங்கினார். 'இந்தியா' என்ற ஏட்டைச் சென்னையில் நடத்தி வந்தார். நாடு முழுவதும் தீவிரவாதிகள் மீது ஆங்கில அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. அப்போது பாரதி மீதும் அரசின் கவனம் திரும்பியது. 'இந்தியா' ஏட்டின் மீது நடவடிக்கை எடுக்கும் முகமாகப் பாரதியின் மீது நடவடிக்கை எடுப்பதும் உறுதியாகி விட்டது. இந்நிலையில் நண்பர்களின் வற்புறுத்தலுக்கிணங்கச் சென்னையை விட்டு வெளியேறுதலும், புதுவையைத் தஞ்சம் புகுதலும் பாரதிக்குக் கட்டாயமாயின.

1908 முதல் 1912 நவம்பர் 20 வரை பாரதி புதுவையில் வாழ்ந்தார். சென்னை சைதாப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டார். 'இந்தியா' ஏட்டின் உரிமையாளர் மண்டயம் சீனிவாசாச்சாரியார் கொடுத்த மடலால் சிட்டி குப்புசாமி வீட்டில் தங்கினார். இதனால் குப்புசாமி அய்யங்காருக்குக் காவலர் தொல்லைகள் மிகுதியாயின. இச்செய்தியைப் பாரதியிடம் சொல்லும் துணிவு அய்யங்காருக்கு இல்லை. இதனைக் குறிப்பால் அறிந்து கொண்ட பாரதி புது வீடு தேடினார். குவளைக்கண்ணன் உதவினார். அவர் வழி சுந்தரேச அய்யர் 'இந்தியா' ஏட்டின் சந்தாதாரர் ஆனார். பாரதிக்கு நண்பரும் ஆனார். அய்யர் உதவியால் பாரதிக்குத் தனிவீடு வாடகைக்கு ஈசுவரன் கோயில் தெருவில் கிடைத்தது. 1908 செப்டம்பர் 5இல் நின்று போன 'இந்தியா', அக்டோபர் 8இல் இருந்து வெளிவரத் தொடங்கியது.

சென்னையில் நின்று போயிருந்த 'விஜயா' எனும் நாளேடு புதுவையில் இருந்து புதுமுகம் காட்டத் தொடங்கியது. 'சூரியோதயம்' எனும் கிழமை ஏட்டிற்கும் பாரதி ஆசிரியர் பொறுப்பேற்றார். அக்காலத்தில் அரவிந்தர், 'கர்மயோகி' எனும் ஏட்டை ஆங்கிலத்தில் நடத்தி வந்தார். அதனைப் பாரதியும் அவர்தம் நண்பர்களும் தமிழில் 1910 ஜனவரி முதல் வெளிக் கொணர்ந்தனர்.'பாலபாரதி' எனும் ஆங்கிலக் கிழமை ஏட்டையும் பாரதி நடத்தினார். பாரதியின் பலவேறு ஏடுகள் பிரிட்டிஷ் அரசின் மீது அறிவுப்போர் தொடுத்தன. இந்திய எல்லைக்குள் 'இந்தியா' முதலான பாரதியின் ஏடுகள் நுழைய முடியாமல் தடை விதிக்கப் பெற்றன. பணவிடைகள் இந்திய எல்லையினின்று பாரதிக்கு வருவது தடை செய்யப் பெற்றன. இவ்விக்கட்டில், 'இந்தியா' ஏடு 1910 மார்ச்சு 12 உடன் தன் கடைசி மூச்சை நிறுத்திக் கொண்டது. தொடர்ந்து ஏனைய இலட்சிய ஏடுகளும் நிறுத்தப் பெற்றன.

1911க்குப் பிறகு நிலைமை மேலும் மோசம் அடைந்தது. பிரிட்டிஷார் சூழ்ச்சியால், அந்நியர் புதுவையில் இருத்தலாகாது எனும் சட்டத்தைப் பிரஞ்சு அரசு கொணர்ந்தது. அரசியல் தலையீடுகள் ஒரு பக்கம்; கடும் வறுமை மறுபக்கம். அத்துன்பக் காலத்தில் பாரதி பராசக்தியை முன்னிறுத்தி எழுதிய குறிப்பு அவர்தம் வறுமை வாட்டத்தைப் படம் பிடிப்பதாகும்.

"தாயே! என்னைக் கடன்காரர்கள் ஓயாமல் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் உன்னை எப்படிப் பாடுவேன்"?

"கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம்; குழப்பம்; எத்தனை நாட்கள்? எத்தனை மாதங்கள்? எத்தனை வருசங்கள்?
(யதுகிரி அம்மாள் – பாரதி நினைவுகள், பக்கம்: 17–18).

இத்தகு துன்பச் சூழலில்தான் பாரதியின் முப்பெரும் பாடல்களான கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியன புதுவையில் எழுதப்பெற்றன. ஏடுகளை நடத்தும் பொறுப்பும், அவற்றில் தொடர்ந்து எழுதும் வாய்ப்பும் நின்ற நிலை, ஏனைய அரிய படைப்புகள் வெளிவரக் காரணமாயிற்று.

பாரதி, புதுவை மாந்தோப்பை மையமாக வைத்துக் குயில்பாட்டை எழுதிய ஆண்டு 1912 ஆகும். அப்போது பாரதியின் வயது முப்பதுதான்!

பாரதி காலப் புதுச்சேரி மிகக் குறைந்த மக்கள் தொகையையே கொண்டிருந்தது. முப்பதாயிரம் அளவிலேயே மக்கள் இருந்தனர். மக்கள் குடியிருப்புகள் மிகக் குறைவு. ஊரைச் சுற்றியும் இயற்கை வளங்கள்தாம். புல்வார்டு என்று அழைக்கப் பெறும் பகுதி மட்டுமே மக்கள் பேரளவு வாழும் இடமாக இருந்தது. பாரதி தங்கியிருந்த ஈசுவரன் கோயில் தெருவிலிருந்து மேற்கே சுமார் நான்கு கி.மீ. தொலைவில் மாந்தோப்பு இருந்தது. அன்று மாந்தோப்பிற்கு மேற்கே குடியிருப்புகள் எதுவும் இல்லை. தோட்டங்களும் துரவுகளுமே.

இலாசுப்பேட்டை எனும் குடியிருப்பு 1940 வாக்கில் உருவானது. இன்றும் இப்பகுதியில் உள்ள பிள்ளைத்தோட்டம், வாழைத்



பாவேந்தரே? ஏன் சிரித்தீர்,

'கலைமாமணி' மன்னர்மன்னன்

பகற்போதில் சிறிதுறங்க எண்ணங்கொண்டே,
பாய்விரித்தேன்; மின்விசிறி சுழல விட்டேன்;
மிகையாக உண்டதனால் மேல்மூச்சு வாங்கிற்று.
முனவயிறு தடவிவிட்டேன். ஏதோ ஓர் இடிபோன்ற
நகைப்பொலிதான் கேட்டதெங்கோ! திடுக்குற்றேன்.
நாற்புறத்தும் பார்த்தேன். எவருமில்லை; மெல்ல மெல்லத்
திகைப்புடனே எழுந்து சென்று காலதரைத் திறந்தேன்.
நகைத்தவர் யார், எங்கிருந்து? புரியாமல் வியர்த்தேன்;
"மிகவுண்டு தூங்குகிறாய், என் தமிழா! இங்கே
மேற்புறத்தில் என்னைப் பார்!" என்றதந்தக் குரல்.
முகமிசை, மூக்குக் கண்ணாடி, மின்னும் விழிகள்
பகை எங்கே என்பவர்போல் பாவேந்தர் தோன்றப்
பதறிவிட்டேன்! "பகல் இரவு பாராமல் உறக்கம்
மிகவாகக் கொண்டீர்கள் தமிழர்களே! சிறிதும்
முன்னேறும் நோக்கந்தான் உமக்கில்லையோ?"
எஞ்ஞான்றும் நினைத்ததுண்டோ? எவ்வளவு மானமுண்டா?
வால்குழைத்துக் கைகட்டி வாயடைத்து நின்றும்
மடிவதுதான் வாழ்க்கை என்பீர்! அந்தோ
ஞாலமெல்லாம் ஒளிபாய்ச்சி விழிப்பூட்டும் அந்த
ஞாயிறுதான் தவறாமல் கடமை செய்யும்!
சீலமதை எண்ணிரோ? உழைத்தல்விட்டுச்
சிறுமதியார் கூட்டத்தின் உறுப்பானீரோ?
கடும் உழைப்பில் கவனமில்லை. கனித்தமிழின்
கோலத்தைக் குலைத்திங்கே குழந்தைக்கெல்லாம்
குஷ், புஷ் என்றே பெயரிடுவீர்! மானம்
குலைந்திடினும் தூங்கிடுவீர்! என் பெயரை வண்ணத்தில்
குழைத்தெடுத்துப் பூசிப் பெருமை கொள்வீர்! இதை
விடுத்துச் செயல்களிலே மெய்ம்மை காட்டிடுவீர்! இன்றேல்
வேலெடுத்து வந்திடுவேன்" என்றார் பாவேந்தர்.
விழித்தேன். மீண்டும் வந்திடுமே! ஓடிச்சென்று
நாலுதோசை விழுங்கிட நான் எழுந்த போதில்
நாலடிக்குச் சட்டமிட்ட கண்ணாடிக்குள் சுவரில்
நகைப்புமுகப் பாவேந்தர் படம் கண்டேனே!

தோட்டம் எனும் பெயர்கள் இதனை உறுதி செய்கின்றன. மாந்தோப்பிற்குக் கிழக்கே முத்தியால் பேட்டை, சின்னையாபுரம், அஜந்தா திரையரங்கம் வரை முற்றிலும் தோட்டங்கள் தாம். பாரதியே மாந்தோப்பின் இருப்பிடத்தை அழகுற வருணிக்கிறார்:

காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை என்னுந் திருநகரின்
மேற்கே சிறுதொலைவில் மேவுமொரு மாஞ்சோலை

(குயில்பாட்டு: 1-7)

இப்பாடல் அடிகள் அன்றைய புதுவையின் அழகைப் படம் பிடிக்கின்றன. உதயசூரியனின் நெருப்புச் சிவப்பும், கடலின் நீல வண்ணமும் சேரும் அழகில், கடலலைகள் வேதங்களின் பொருளைப் பாடிக் கொண்டே புதுவையைத் தழுவுகின்றன. திரிபு வழக்கான கொடுந் தமிழ்ப் பகுதியாக இல்லாமல் உயர் வழக்கான செந்தமிழ்ப் பகுதியாகப் புதுவை விளங்குகிறது. அழகின் தலைவி இலட்சுமி தங்கும் நகராக இலங்குகிறது. நகருக்கு மேற்கே மாஞ்சோலை உள்ளது. அது பாரதியின் இல்லத்திலிருந்து சிறுதொலைவிலேயே அமைந்திருந்தது.

மாந்தோப்பை ஒட்டியுள்ள சித்தாந்தசாமி மடத்திற்குப் பாரதி அடிக்கடி வருவதும் அங்கே சித்தர்களுடனும் சாமியார்களுடனும் பழகுவதும் வழக்கம். பாரதி, சித்தாந்தச் சாமி கோயிலைப் பாடிய பாடல் வருமாறு:-

சித்தாந்தச் சாமி கோயில்

சித்தாந்தச் சாமி திருக்கோயில் வாயிலில்
தீபவொளி யுண்டாம்;-பெண்ணே!
முத்தாந்த வீதி முழுதையுங் காட்டிட
மூண்டதிருச் சுடராம்;-பெண்ணே!

உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்டவருஞ் சுடராம்;-பெண்ணே!

ஈனத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ் சுடராம்;-பெண்ணே!

தோன்று முயிர்கள் அனைத்துநன் றென்பது
தோற்ற முறுஞ் சுடராம்;-பெண்ணே!
மூன்று வகைப்படும் காலநன் றென்பதை
முன்ன ரிடுஞ் சுடராம்;-பெண்ணே!

பட்டினந் தன்னிலும் பாக்கநன் றென்பதைப்
பார்க்க வொளிர் சுடராம்-பெண்ணே!
கட்டு மனையிலுங் கோயில்நன் றென்பதைக்
காண வொளிர் சுடராம்;-பெண்ணே!

சுமார் அறுநூறு ஏக்கர் பரப்பில் முத்தியால்பேட்டை இலாசுப் பேட்டைச் சாலை வடப்புறத்தில் அடர்ந்திருந்த பாரதி கால மாஞ்சோலை இன்று சுமார் ஐம்பது ஏக்கர் பரப்பில் சுருங்கி மேலும் தேய்பிறையாகிக் கொண்டிருக்கிறது. பாரதியார் அடிக்கடி வந்து தங்கிய சித்தாந்தச் சாமி கோயிலும், அதன் பக்கத்தே உள்ள சுடுகாடும் நவீன நகர நாகரிகக் கொடும் பிடியினின்று தப்பி இன்னும் பயன்பாட்டில் உள்ளன. இரண்டும் தொடர்ந்து மக்கள் பயன்பாட்டில் இருந்து வந்தமையும் வருகின்றமையும் முதன்மைக் காரணங்கள். அரசும் பொது மக்களும் இவ்விரண்டையும் காலந்தோறும் தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர்; வந்தமையால்தான் அவை காப்பாற்றப்பட்டன.

இயற்கை அழிக்கப்பட்ட இடத்தில் மக்கள் நலனுக்கு உதவாத செயற்கையின் ஆதிக்கமே கொடுங்கோன்மை செலுத்துகிறது. பாரதி கால மாஞ்சோலைப் பகுதியிலும் அதன் எதிர்ப்புறத்தும் வந்திருப்பனயாவை? மாஞ்சோலைப் பகுதியில் சாராயக் கடை ஒன்றும் கள்ளுக்கடை ஒன்றும் இயங்குகின்றன. எதிர்ப்புறத்தில் திரையரங்கம் ஒன்று இயங்குகிறது: பாரதியை நாம் நினைவுகூரும் 'அழகு' அவ்வாறு உள்ளது. இன்று வேட்டையாடுதலும் இல்லை; வேட்டையாடும் அளவிற்குப் பறவைகளும் அங்கு வருவதில்லை. அங்கு மட்டுமன்று; சுற்று வட்டாரத்திலேயே குரங்குகள் இல்லை. சுடுகாடு முன்பு சுற்றுச்சுவரைப் பெற்றிருக்கவில்லை. தற்போது நெடுஞ்சுவர் எழும்பியுள்ளது. நாடக மேதை சங்கரதாஸ் சுவாமிகளுடைய சமாதி அங்கே சிறுமண்டபமாக உள்ளது.

சாராயக் கடைக்கும், திரையரங்கத்திற்கும் பக்கத்தில் சாவை நினைவுபடுத்தும் சுடுகாடு பரந்து கிடப்பது மிகுந்த அர்த்த அழுத்தம் உடையதாகும். அங்கே இயற்கையை மிக நேசித்த பாரதி இன்றும் மரணத்திற்குப் பின்பும் நினைக்கப் பெறுவதும், சாராய மோகத்திலும், சினிமா மோகத்திலும் மேலுலகம் போனவர்கள் கீழுலகில் மண்ணுக் கிரையானதும், நெருப்புக்கிரையானதும் நினைக்கப் பெறாததும் நினைக்கப் பெற வேண்டியவை; நிலைக்கப் பெற வேண்டியவை. ஃ

புதுமை மிகு புதுச்சேரி

இன்று சுற்றுலாத்துறை உலகிலேயே இரண்டாவது இடத்தைப் பெறும் மிகப் பெரிய தொழிலாக உள்ளது. ஒவ்வொரு 16 நபர்களிலும் ஒரு நபர் சுற்றுலா சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா அந்நிய செலாவணியைப் பெரும் அளவு ஈட்டித் தரும் தொழிலாகக் கருதப்படுகிறது. இன்று உலக மக்கள் அனைவரிடமும் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்திய அரசு சுற்றுலாவை மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு ஏராளமான இயற்கைக் காட்சிகள், கடற்கரைகள், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட கோயில்கள், கலைகள் மற்றும் பல்வேறு அம்சங்கள் உள்ளன. இவற்றை முறையாகப் பயன்படுத்துவதற்கு இந்திய அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. புதுவை சுற்றுலாத் துறையும் சுற்றுலாவை மேம்படுத்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக புதுவைக்கு வரும் உள்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 33% அதிகரித்துள்ளது. இனி, புதுவையில் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கான அம்சம் என்ன என்று பார்ப்போம்.

புதுச்சேரியில் எல்லாமே அழகு, எல்லாமே அமைதி, ஒழுங்கான வீதிகள், நீண்ட கடற்கரை, கடற்கரைச் சாலையை ஒட்டிய அழகிய பூங்கா ஆகிய அனைத்தும் நகரத்திற்குள்ளேயே காணப்படுகின்றன. கடற்கரைச் சாலையில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் ஒய்வாக மகிழ்ச்சியுடன் நடந்து செல்லலாம். ஒழுங்கான வீதி அமைப்பு பிரெஞ்சுக்காரர் காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதுவைப் பூங்காவின் நடுவே காணப்படும் ஆயி மண்டபம் பிரெஞ்சுக் கலையின் ஓர் அம்சமாக விளங்குகிறது. புதுவைப் பூங்காவின் அருகில் காணப்படும் கவர்னர் மாளிகை பிரெஞ்சுக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பூங்காவின் தென்புறமாக ஓர் அருங்காட்சியகம் அமைந்துள்ளது. அந்த அருங்காட்சியகம் பிரெஞ்சுக் கலைப்படைப்புகள் மற்றும் பிரெஞ்சுக் கலாசாரத்தையும் பிரதிபலிக்கிறது. அரிக்கமேடு பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சில பொருள்கள் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் கடற்கரைச் சாலையில் நேரு மைதானம், காந்தி சிலை, போர் நினைவுச் சின்னம், பழைய கலங்கரை விளக்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் டூப்ளேஸ் சிலை ஆகியவையும் உள்ளன.

பாண்டிச்சேரியில் அமைந்துள்ள ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் உலகிலுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. ஸ்ரீ அரவிந்தர் மற்றும் அன்னையை அறியாதவர் எவரும் இல்லை. ஸ்ரீ அரவிந்தர் மற்றும் அன்னையின் சமாதியும் இங்கு அமைந்துள்ளன. இவ்விடத்தை வழிபட உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்த வண்ணம் உள்ளனர். புதுவையிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் அன்னையின் கனவில் உருவான ஆரோவில் நகரம் உள்ளது. இந்த நகரத்தைக் காண உலகத்தின் பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் வருகின்றனர். இதைப்போல காரைக்கால் பகுதியில் அமைந்துள்ள திருநள்ளாறு தலம் பிரசித்தி பெற்றது. இந்தத் தலத்தில் சனிபகவான் ஆலயம் உள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் காரைக்காலுக்கு வருகை புரிகின்றனர். இங்கு இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை சனிப்பெயர்ச்சி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. காரைக்காலில் மானிடராகப் பிறந்து கடவுளாக உயர்ந்த காரைக்கால் அம்மையாருக்கு ஓர் ஆலயம் உள்ளது. இங்கு ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் மாங்கனி உற்சவம் தனிச்சிறப்பு பெற்றது.

பலநூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட திருவாண்டார் கோயில், திருபுவனை, மதகடிப்பட்டு மற்றும் பாகூர் ஆலயங்கள் இந்தியாவின் தொன்மைக் கலாசாரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பாகூரில் ஒரு சம்ஸ்கிருதப் பல்கலைக் கழகம் இருந்ததாகக் கூறப்படுகிறது. வில்லியனூரில் உள்ள திருகாமேஸ்வரர் ஆலயம் தொன்மைச் சிறப்பு வாய்ந்தது. இங்குள்ள தேர், தென்னிந்தியாவில் இரண்டாவது உயரமான தேர் ஆகும். இங்கு ஆண்டுதோறும் பிரம்மோற்சவமும் தேரோட்டமும் நடைபெறும். இதைத் தவிர வீராம்பட்டினம் மற்றும் புதுவையில் காணப்படும் பல்வேறு ஆலயங்களும் புதுவையின் தொன்மைக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. இங்கே கட்டப்பட்டுள்ள கிறித்தவ வழிபாட்டுத் தலங்கள் சிறப்பு மிக்கவை. புகைவண்டி நிலையத்தின் அருகிலுள்ள மாதா கோயில் 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதன் அமைப்புகள் பார்த்து ரசிக்கக் கூடியவையாகும். வில்லியனூர் மாதா கோயில் அருகில் ஒரு தெப்பக்குளம் உள்ளது. மாஹேயில் அமைந்துள்ள செயின் தெரசா ஆலயம் தொன்மைச் சிறப்பு மிக்கது. மேலே கூறப்பட்டுள்ள அனைத்தும் பல்வேறு ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர்களால் ஏற்படுத்திய சிறப்புச் செல்வமாகும்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் நான்கு பகுதிகளைக் கொண்டது. அவை பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் என்பனவாகும். புதுச்சேரியில் பிரெஞ்சு கலாசாரம் இன்று மிகக் குறைந்த அளவிற்கே காணப்படுகிறது. புதுச்சேரியில் காணப்படும் தெருக்களின் பெயர்கள் மற்றும் போலீஸ்காரர் அணியும் தொப்பி பிரெஞ்சு மாடல் ஆகும். இன்றும் பலர் புதுவையிலிருந்து பிரான்சுக்குச் சென்று பணியாற்றுகிறார்கள்.

இன்றைய காலக்கட்டத்தில் சுற்றுலாத்துறை புதுவையிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு

புதுவை அரசு

முன்னணியில் புதுவை







மூன்று ஆண்டுகளில் சீரிய செயலாக்கம்
மற்றும் ஆக்கப் பூர்வமான பணிகளைக்
கொண்டு வாக்குறுதிகளை
முழுமையாக நிறைவேற்றிய சாதனை.

- வளர்ச்சி மற்றும் வளமான சகாப்தத்தை நோக்கிப் பீடு நடை!
- ஏழை எளிய மக்களை முன்னேற்றும் பணியில் முழுமையான ஈடுபாடு!!
- சமூக நீதியை அடையப் புதுப்பாதை வகுக்கும் பணி!!!

☆ எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 400.00 கோடி ஒதுக்கீடு.

☆ இந்தியாவிலேயே மனிதக் கழிவுகளை அகற்றும் துப்புரவுத் தொழிலாளர் இல்லாத முதல் மாநிலம்.

☆ மக்கள் குறைகளை நேரிடையாகக் கேட்டு தீர்வு காணல்.

☆ அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலம் விவசாயத்தில் குறியீடுகளை விஞ்சிய வளர்ச்சி.

☆ "கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத், திட்ட". செயலாக்கம்.

☆ கல்வி கலாசாலையில் மேலும் ஒரு 'கால்நடை மருத்துவக் கல்லூரி.

☆ முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்கும் ஏழை மாணவ மாணவியருக்கு இலவசக் காலணிகள்.

☆ பெண்கள் மேம்பாட்டு கழகத்தின் மூலம் ஏழை பெண்களின் பொருளாதாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் பயிற்சி மற்றும் விற்பனை அளித்தல்.

☆ சுற்றுப்புற சுகாதாரத்தைக் காப்பதற்காக 'மக்கள் பங்கேற்கும் துப்புரவு இயக்கம்' துவக்கம்.

☆ செயற்கை கோள் தகவல் தொடர்பு முறைகளுடன் கூடிய 'மின்னணுதொழிற்சாலை வளாகம்.' புதுவையில் விரைவில் தொடக்கம்.

☆ சுதந்திரப் போராட்ட வீரர்களின் ஈடு இணையற்ற தியாகத்தை நினைவு கூரும் வண்ணம் புதுவையில் அவர்களுக்கென 'நினைவுச் சின்னம்.'

☆ முன்னேற்ற வளர்ச்சிக்கு உதவும் வகையில் சுற்றுலாவிற்குத் தொழில் அந்தஸ்து.

- புதுவை நகரை திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட அழகு நகராக மாற்றுதல்!
- தூய்மையான நேர்மையான எளிமையான விரைவான நிர்வாகத்தை அளித்தல்!!

ஏழை எளிய மக்களின் ஏற்றமிகு வாழ்வுக்கு புதுவை அரசு மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகள் இவை மட்டுமல்ல!

இன்னும் தொடரும்...

வெளியீடு : செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுவை அரசு.

படகுத் துறையும், உல்லாசப் பொழுதுபோக்குத் தலமும் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் படகுத் துறை மேலும் மேம்படுத்தப்படவுள்ளது. இன்று புதுச்சேரி ஒரு சிறந்த பிக்னிக் இடமாக மாற்றப்படுகிறது. இதைப்போலவே கடலில் பயணித்து டால்பின் ரக மீன்களைப் பார்க்க சுற்றுலாப் பயணிகளுக்கு ஓர் உல்லாசப் படகு விடப்பட்டுள்ளது. கடற்கரை அருகே ஓர் உணவு விடுதி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படுகிறது. புதுவையிலிருந்து அதன் சுற்றுப்புறங்களைச் சுற்றிப் பார்க்க தினசரி 2 முறை பேருந்துகள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் இயக்கப்படுகின்றன. இந்தப் பேருந்துகள் காலை 8 மணிக்கும் மதியம் 2 மணிக்கும் கடற்கரைச் சாலையிலுள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகத்திலிருந்து இயக்கப்படுகின்றன. இதைப்போலவே காரைக்கால் கடற்கரை பகுதி அழகு படுத்தப்படுகிறது. அரசலாறு கரையில் உள்ள 2 கிலோ மீட்டர் சாலை அழகுப்படுத்தப்பட்டுள்ளது. காரைக் கடற்கரையில் பூங்காவுடன் கூடிய ஓர் அழகிய உணவு விடுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசலாற்றிலுள்ள படகுத் துறை மேம்படுத்தப்படவுள்ளது. இதைப்போல மாஹேயில் ஒரு படகுத்துறை உள்ளது.

வெளிநாட்டுப் பயணிகளைக் கவர பாண்டியில் அகில உலக யோகா விழா இரண்டு முறை நடத்தப்பட்டன. யோகா கலை வல்லுநர்கள் மற்றும் பல்வேறு மகான்கள் இதில் பங்கேற்றுள்ளனர். 3வது அகில உலக யோகா விழா வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. இந்த விழாவினைக் கண்டுகளிக்க பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுவை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதுச்சேரியில் விடுமுறையைக் கழிப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது. இதில் உணவு, பயண வசதியுடன் தங்கும் இடம் ஆகியவை அடங்கும். புதுவையில் இரண்டு இரவுகள் தங்கிப் புதுவையைச் சுற்றிப் பார்க்கவும், படகுச் சவாரி செய்யவும் இந்தத் திட்டம் வழி வகுக்கிறது. இந்தத் திட்டம் குழுவாக சுற்றுலா வருபவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். இதற்குண்டான விவரத்தை, சுற்றுலாத் தகவல் நிலையத்திலிருந்து பெறலாம்.

மத்திய அரசு புதுவை, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 115 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

புதுச்சேரி சுற்றுலாத்துறை புதுச்சேரியில் இரண்டு தங்கும் விடுதிகளையும், காரைக்கால், மாஹே, ஏனாம் பகுதிகளில் ஒரு தங்கும் விடுதியையும் நடத்தி வருகிறது. இதில் குறைவான கட்டணத்தில் தங்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சாலை விபத்துகளை தவிர்ப்பதற்கு சில குறிப்புகள்

செய்க :

1. *சாலையில் இடது பக்கம் செல்லவும். எதிர் வரும் வாகனங்களுக்கு வலது பக்கம் வழிவிட வேண்டும்.*
2. *முன் ஜாக்கிரதை நடவடிக்கை விபத்தைத் தவிர்க்கும்.*
3. *எதிர்வரும் நண்பருக்கு உதவும் வகையில் உங்கள் வாகனத்தின் வெளிச்சத்தைக் குறைக்க வேண்டும்.*
4. *வாகனத்தை ஓட்டும்பொழுது விழிப்புணர்வு எப்போதும் தேவை.*
5. *சாலை விதிகளையும் அறிவிப்புகளையும் மதித்து நடக்க வேண்டும்.*

செய்யாதே :

1. *அதிவேகமாக வாகனத்தை ஓட்டக்கூடாது. மற்றொரு வாகனத்தை மிக நெருக்கமான நிலையில் பின்தொடர்ந்து செல்லலாகாது.*
2. *குடிபோதையுடன் வாகனத்தை ஓட்டக் கூடாது.*
3. *முன்பக்கமுள்ள நீண்ட வாகனங்களின் வரிசையை முந்திக்கொண்டு செல்லத் துடிக்கும் "புத்திசாலியாக" இருக்க வேண்டாம்.*
4. *அதிவேகமாக வாகனத்தை செலுத்துவதால் எரிபொருள் பெருமளவில் உபயோகப்படுவதுடன் டயர் தேய்மானத்தையும் துரிதப்படுத்தும்.*
5. *காலமாகிவிட்ட ஓட்டுநர் என்று கூறுவதைவிட 'காலந் தாழ்த்தி ஓட்டுபவர்' எனப்படுவது உசிதம்.*

"காற்றோடு உலவும் புகழ்"

–ஒரு வரலாறு.

–நடாதூர். திருமகள்.

புதுச்சேரி என்றாலேயே, அதற்குப் புகழ் சேர்த்தவர்கள், சேர்த்துக் கொண்டிருப்பவர்கள் எண்ணற்றோர். சித்தர்களால், புதுவைக்குப் புகழ்; சிந்தனையாளர்களால் புதுச்சேரிக்குப் புகழ். இதைப் போல கவிஞர்களால், கலைஞர்களால், எழுத்தாளர்களால், ஆன்மிகவாதிகளால், அந்நியர் ஆட்சியை எதிர்த்துப் போராடிய விடுதலைப் போராட்ட வீரர்களால், ஆலயங்களால், தொண்டு நிறுவனங்களால்.... இப்படி புதுவையின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் தொடர்புகள் எத்தனை எத்தனையோ...!

இவை எல்லாவற்றைப் பற்றியும், முழுதுமாக அறிந்த ஒரே ஒருவர் மட்டுமாவது கிடைப்பாரா என்று நான் ஒரு காலத்தில் எண்ணிப் பார்த்ததுண்டு. அறிந்து கொள்ள முயன்றதும் கூட உண்டு.

அம்மாதிரியான ஒரு கால கட்டத்தில் தான் புதுவை அரவிந்த ஆசிரமத்தோடு ஈடுபாடு கொண்டிருந்தவரான நந்தினி சத்பதி என்ற பெயருடைய ஒரிசா மாநிலத்தைச் சார்ந்த அம்மையாருக்கு, புதுவை வானொலி குறித்த எண்ணம் தோன்றியது.

சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு, அவர்தான் செய்தி ஒலி பரப்புத் துறையின் துணை அமைச்சராக இருந்தார். எனவே, அவர் சிந்தையில் முகிழ்த்த எண்ணம் செயல் வடிவில் உருப் பெறத் தொடங்கியது.

அலைபாயும் கடலோரம் வானொலி நிலைய அமைப்புப் பணி தொடங்கிய பொழுது, "புதுவைக்கும், ஒரு வானொலியா? இதற்கு அவசியம் என்ன?" என்று வினாவெழுப்பினர் சிலர். அதற்கு முகத்திலறைந்தாற் போல், அப்போதைய புதுவை முதல்வர் எம்.ஒ.எச். பாரூக் அவர்கள், "சென்னை, திருச்சி நிலை யங்களுக்கும், புதுவை நிலையத்துக்கும், பல வேறுபாடுகள் உண்டு. இந்த மாநிலத்தின் மொழிகள், தமிழ், தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சு ஆகியன. மேலும், பெங்காலி, குஜராத்தி, ஒரியா, இந்தி பேசுவோரின் எண்ணிக்கையும், கணிசமாகவே உள்ளது. இந்த மண்ணுக்கென்று ஒரு தனித்த கலாசாரப் பெருமை உண்டு. ஆக, இவை அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும் என்பதற்காகத்தான், இங்கே ஒரு வானொலி நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் பெற்றோம்" என்று அழகாக மறுமொழி உரைத்தார்.

1967ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ஆம் நாள் சனிக்கிழமை மாலை 5 மணி 30 நிமிடத்துக்கு புதுவையின் புகழ் மணத்தை வானிலே ஒலி வழி பரப்ப நிலையம் தொடங்கும் என்று அறிவிப்பு வந்தது.

அப்போது நிலையத் தலைவராகப் பொறுப்பேற்றவர் தர்ம ஞானி என்பவர். தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், இந்தி, தமிழ் ஆகிய ஐந்து மொழிகளில் சமாளிக்கத் தெரிந்தவர்.

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து புலவர் கு.வி. என்ற விசுவநாதன் அவர்களும், (திருச்சி தமிழ்ச் சங்க நிறுவனர்களில் ஒருவர்) கவிஞர் நடாதூர் நம்பியும் (புதுவைக்காரர்) மாற்றல் பெற்று வந்தனர். இருவரில் முன்னவர் அமரராகி விட்டார். நம்பி ஓய்வு பெற்றுவிட்டார்.

அடுத்து, சென்னையிலிருந்து, சாரி என்பவர் வந்து சேர்ந்தார். (ஐதராபாத் தொலைக்காட்சி நிலையத்தின் தற்போதைய இயக்குநர்) இதைப் போலவே நாகபுரியிலிருந்து அய்யரும், கேரளத்திலிருந்து ஆபிரகாமும் வந்தனர். (இருவருமே இப்போது ஓய்வு பெற்றவர்கள்) இவர்கள்தாம் தொடக்க காலத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பிலிருந்து, ஆல் இன் ஆலாக, விளங்கியவர்கள். பிறகு அந்தமானிலிருந்து கே. கணேசன் என்பாரும் கிருஷ்ணமூர்த்தி என்பாரும் சேர, புதுவை வானொலி அமர்க்களமாக, அழகழகான நிகழ்ச்சிகளை அள்ளி வழங்கியது.

23-9-67 மாலை 5.30 மணிக்கு புதுவை வானொலி நிலையத்தின் சார்பிலே, விண்ணிலே மிதந்த முதல் குரல் நடாதூர் நம்பி அவர்களுடையது. புதுவை நகர மன்ற மேரி அரங்கிலே ஒலிபரப்புத் துறை துணை அமைச்சர் நந்தினி சத்பதி குத்து விளக்கை ஏற்றி வைத்து, வானொலியைத் தொடங்கி வைத்தார்.

அப்போதைய புதுவை மாநில கவர்னர் சாயாஜி லக்ஷ்மண் சீலம் விழாத் தலைமையை ஏற்றார். அப்போதைய முதலமைச்சர் எம்.ஒ.எச். பாரூக் மரைக்காயரும் சமூக நலத்துறை அமைச்சர் ஜி. நாகராஜனும் வாழ்த்தி வரவேற்று, பாராட்டிப் பேசினார்கள்.

தொடக்க விழாவை ஒட்டி கலைஞர்கள் முன்னிலையில் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் இசை அரங்கு கோலா

கலமாக நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு மட்டும் சென்னை நிலைய நாகராஜன் அறிவிப்பை வழங்கினார். சென்னை நிலைய உதவி இயக்குநரும், நாடக ஆசிரியருமான டி.என். விசுவநாதன் நிகழ்ச்சி ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டார்.

புதுவை வானொலியின் முதல் உதவி இயக்குநர் தர்மஞானி காலத்தில், தவறாமல் மாதா மாதம் கலைஞர்கள் முன்னிலையில் இசை அரங்கு நடக்கும்.

அடுத்து வந்த என்.ஆர். டண்டன் காலத்தில் மெல்லிசை நிகழ்ச்சி மிகப் பிரபலமாகியது. அவருக்குப் பிறகு வந்த கிருஷ்ண மூர்த்தியின் காலத்தில் (இவர் இசை மேதை மைசூர் வாசுதேவாச்சாரின் பேரர்) கர்நாடக இசை நிகழ்ச்சியும், ஆங்கில நிகழ்ச்சியும் தழைத்தன.

அதன் பின்னர், பொறுப்பேற்றவர் செல்வி சத்யபாமா. (இவர் முன்னாள் குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணனின் மாணவி. ஆங்கிலம், சம்ஸ்கிருதம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை பெற்றவர்) இந்த அம்மையார் காலத்தில், நாடக நிகழ்ச்சிகள், நடாதூர் நம்பி, புலவர் குவி. ஆகியோரின் பொறுப்பில் விடப்பட்டு, நிலையத்துக்குப் பல பாராட்டுகளையும், பரிசுகளையும், புகழையும் ஈர்த்துக் கொடுத்தன.

இவருக்குப் பிறகு புதுவை நிலையப் பொறுப்பாளரின் நிலை, இயக்குநர் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. புதுச்சேரி வானொலியின் முதல் இயக்குநராகப் பணிப் பொறுப்பேற்றவர், கவிஞர் செந்தாமரை எனும் கே.பி.எஸ். ஹமீது ஆவார். இவர் சதாவதானம் செய்குத் தம்பிப் பாவலரின் மகனாவார். இலக்கியம், சட்டம் படித்தவர். இவர் காலத்தில் தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளும், நாட்டுப்புற இசை நிகழ்ச்சிகளும் ஆக்கம் பெற்றன.

இந்தப் புதுவை நிலையத்திலேயே நிகழ்ச்சி அமலாளராக இருந்து, உதவி இயக்குநராக புது டில்லி சென்ற திண்ணியம் கண்ணியன் என்ற 'ஜி.எஸ்.' சுப்ரமணியன் இங்கே, இயக்குநராக வந்தாரா். இவர், ஒரு மணி நேர நாடகம். தொடர் நாடகம், சினிமா விமர்சனம் போன்ற பல நிகழ்ச்சிகள் பிரபலமாகக் காரணமாக இருந்தார்.

பிறகு வந்தவர் அகிலா சிவராமன். அவருக்குப் பின் பொறுப்பேற்றவர் சந்திரமௌலி. முதியோர் கல்வி நிகழ்ச்சி, முறைசாராக் கல்வி நிகழ்ச்சி, நாட்டுப் பாடல் நிகழ்ச்சி இவர் காலத்தில் மிகப் பிரபலம். இவருக்கு அடுத்த இயக்குநர் ஜி.டி. அய்யங்கார். இவர்தான் பாண்டிச்சேரி வானொலி என்ற மாற்றத்துக்கு வித்திட்டுச் செயலாக்கியவர். இதறகாகவே புதுவையிலுள்ள தனித்தமிழ் இயக்கங்கள் இவரைப் பாராட்டின. இவருக்குப் பிறகு பொறுப்பேற்று இன்று இயக்குநராக இருப்பவர் எஸ். வேணுகோபால் ரெட்டி அவர்கள். வானொலி நிகழ்ச்சிகளுக்குப் புது ரத்தம் செலுத்தி எல்லாத் தரப்பினரும் கேட்க விரும்பும் படியாக, அதிரடி மாற்றங்களை அவ்வப்போது அநாயாசமாகச் செய்து, தொலைக்காட்சியின் ஆக்ரமிப்புப் போட்டிக்குச் சவால் விடும், அளவுக்கு, புதுமையும் பொலிவும் நிறைந்த வண்ணம் எண்ணற்ற நிகழ்ச்சிகளை ஏராளமாகத் தந்து வருகிறார்.

உதாரணத்துக்கு, இன்று சர்வதேச மகளிர் தினம் என்று இருந்தால், காலை தொடங்கி, இரவு ஜெய்ஹிந்த் சொல்லி ஒலி பரப்பு முடியும் வரை, அறிவிப்புகளைப் பெண்களே சொல்வார்கள். தவிர, சான்றோர் வாக்கு, உரை, இசை, கலந்துரையாடல், நேர்முகம், குழந்தைகள் நிகழ்ச்சி, தொழிலாளர் நிகழ்ச்சி, என எல்லாமே பெண்கள் மட்டுமே கலந்து கொண்டு அளிப்பவையாக இருக்கும்.

அறிவிப்பில் கூட புதுமை வேண்டும் என்று வலியுறுத்தி வரும் ரெட்டி அவர்களுக்கு இன்று உறுதுணையாக இருக்கும் அதிகாரிகள், டாக்டர் சுந்தர ஆவுடையப்பன், சோமாஸ் கந்த மூர்த்தி, முனைவர் அதியமான், வி.குமார், சங்காமணி, சிதம்பரம், சாமிநாதன், ஃப்ளோராராணி, ஜகந்நாதன் ஆகியோர்.

இப்போது இதைப் போலவே புதுவை நிலையத்தின் செய்திப் பிரிவு புகழோடு விளங்குவதற்கு அடித்தளமாக விளங்கிக் கொண்டிருப்பவர்கள், பூவராகன், சங்கரன், பாலு, உதயசங்கர் ஆகியோர்.

இந்த வரிசையில் திரைக்குப் பின் அழகாக, அழுத்தமாக, அமைதியாக இங்கு பணியாற்றிப் புகழ சேர்த்துச் சென்றவர்கள் டி.எஸ்.எஸ். ராவ், ஏ. சீனிவாசன், பி.ஆர். குமார், சாமிநாதன், விஜய லட்சுமி சுந்தர்ராஜன், முல்லை வளவன் எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இதைப்போலவே புதுச்சேரி வானொலி வழங்கிய நிகழ்ச்சிகளில் மறக்க முடியாத சிறப்பைப் பெற்றவை வீட்டுக்கு வீடு, (நகைச்சுவை நாடகத்தொடர்; ஓராண்டுக்கும் மேல் தொடர்ந்த நாடகம்) கிள்ளைகளே கேளுங்கள். வலிவும் பொலிவும், ரேடியோசெஸ், Phone in Programme சுடச்சுட கேள்விபதில் (மருத்துவ ஆலோசனை) மக்கள் மன்றம் எனப் பல, புதுவை வானொலியின் பெருமை; புகலவும் அருமை.

புதுச்சேரி வானொலி தொடங்கிய பிறகு, புதுவையின் வரலாறு எல்லாக் கோணங்களிலும், எல்லார்க்கும் தெரிகின்ற அளவுக்கு சித்திரம், உரை, உரையாடல், நாடகம் ஏன்ற பெயர்களில் தெளிவாக ஒலிபரப்பப் பெற்றது. புதுவை மட்டுமல்லாமல் தென்னார்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை போன்ற பகுதிகள் பலவற்றின் வரலாற்று ஆய்வுகளையும் அறிந்து கொள்ளவும், புதுவை வானொலி உதவியது.

புதுவை வளர்ச்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறை

புதுவை, பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபொழுது கால்நடைப் பராமரிப்புத்துறை நலவழித் துறையின் ஒரு பகுதியாகவே விளங்கியது. விடுதலைக்குப் பிறகு கால்நடைகளைப் பராமரிப்பதற்கென தனியாக இத்துறை ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின் முன்னேற்றத்திற்காக ஜவஹர்லால் நேரு ஐந்தாண்டுத் திட்டங்களை அறிவித்தபின் - அத்திட்டங்களின் அமலாக்கத்திற்குப் பிறகு இத்துறை வளர்ச்சியடைந்தது. புதுவை மற்றும் காரைக்கால் பகுதியில் முன்பு இரண்டு கால்நடை மருத்துவ மனைகளே இருந்தன. ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கால்நடை மருத்துவ மனைகள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் புதுவை, காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய பகுதிகளில் 105 ஆக உயர்ந்தன.

இப்பொழுது நடப்பிலிருக்கும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கால்நடை, கோழிகள் மற்றும் சிறு விலங்குகளின் பராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்காகப் புதுவை அரசு பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. உயர் இனக் கலப்பின மாட்டினங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் கால்நடை வளர்ப்புத் தொழிலை இலாபகரமாக மாற்றுவதின் மூலம் பால் தொழில், கோழிப் பண்ணை மற்றும் கால்நடை வளர்ப்பதில் அதிக அளவில் மக்களை ஈடுபடச் செய்தல் ஆகியவை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இத்துறையினால் நடைமுறைப்படுத்தப்படும் சில குறிப்பிடத்தக்க திட்டங்கள் வருமாறு :-

1. கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்பு.

2. கால்நடை இன அபிவிருத்தி.

3. பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு.

4. தீவிர கோழி வளர்ப்பு.

5. சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டம்

6. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்

7. கால்நடை நோய் கண்காணிப்பு.

8. நோய் ஆய்வு.

எந்த இடங்களில் கால்நடை மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை என்பது அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. எனவே, இத்திட்டக் காலத்தில் கால்நடை பராமரிப்புத்துறை அத்தகைய இடங்களுக்குக் கால்நடை மருத்துவ வசதிகள் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது. புதுவையிலும் காரைக்காலிலும் உள்ள சில கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவ மனையாகவும், மருத்துவமனைகளை, பல வசதிகள் கொண்ட பாலி கிளினிக்காக மாற்றவும், புதிய கால்நடை மருந்தகங்களை அமைக்கவும், கூடுதலாக இயங்கும் கால்நடை மருந்தகங்களை இயக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிக உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைகளை நோய்களில் இருந்து பாதுகாக்க, தேவையான மருந்துகள் வாங்குவதற்கான முதலீடு அதிகப்படுத்தப்பட்டுள்ளது. கால்நடைகளில் மலட்டுத் தன்மை ஏற்படுவதைக் குறைப்பதற்கு, மலட்டுத் தன்மை நீக்கும் பல முகாம்களை அமைக்கும் திட்டங்கள் இத்திட்டக் காலத்தில் செயல்படுத்தப்படவுள்ளன.

தீவனம் மற்றும் பசுந்தீவனங்களும், புதுவை மாநிலத்தில் இலாபகரமான பால் பண்ணை அமைக்கும் நடவடிக்கைகளுக்கு ஒரு முக்கிய தேவையாக உள்ளது. எனவே, பசுந்தீவன வளர்ப்பில் விவசாயிகளுக்கு 'ஊக்கம் அளிக்கும் வகையில் மான்ய விலையில் விதைகளும் உரங்களும் அளிக்கப்படவுள்ளன. மேலும், தற்போது அதிகரிக்கும் தென்னைத் தோட்டத்தில் ஊடுபயிராக பசுந்தீவனத்தை வளர்க்கச் செய்வதற்கான வழிகளை மக்கள் அறியும்படி செய்யப்படவுள்ளது. பசுந்தீவன உற்பத்திக்காக விதைப்பண்ணை ஒன்று புதுவைப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது. இத்தகைய அனைத்து முயற்சிகளும் பசுந்தீவன அளவை அதிகரிப்பதற்காக மட்டுமல்ல; இவை கறவை மாடுகளுக்குத் தேவைப்படுகிறது. அதிக அளவில் கறவைகளுக்கு உணவாக அளிக்கும் வைக்கோலை யூரியாவினால் சத்துள்ளதாக மாற்றும் திட்டத்தைக் கடைபிடிக்கப்படவுள்ளது. இத்திட்ட காலத்தில் 400 விவசாயிகளுக்கு வைக்கோலை சத்துள்ளதாக மாற்ற யூரியா மற்றும் பாலிதீன் விரிப்புகளை இலவசமாக அளித்தும் வைக்கோல் பதப்படுத்தும் குழிகளை அமைக்கும் செலவுகளை விவசாயிகளுக்கும் கொடுத்து திட்டம் நடைமுறைப்படுத்தவுள்ளது. விவசாயிகளுக்கும், குறுவிவசாயிகளுக்கும் தேவையான அளவு உலர் தீவனத்தை தங்களின் கறவை மாடுகளுக்கு அளிப்பதில்லை. எனவே, இத்திட்டத்தில் வைக்கோல், யூரியா, வெல்லப்பாகு கலவையில் தவிடு மற்றும் தாது உப்புகளைச் சேர்த்து முழுமையான தீவனக் கட்டிகளைத் தயார் செய்து அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது.

கடலோர ஆமைகளின் இன விருத்தியின் முக்கியத்துவத்தை புதுவைவாழ் மீனவர்களின் கவனத்திற்குக் கொண்டு, ஆமைகளின் உற்பத்தியைப் பெருக்கும் வண்ணம் 500 ஆமைக்குஞ்சுகள் கடலில் விடப்பட்டன.

வெளிநாட்டிலிருந்து ஊசுட்டேரிக்கு வரும் பறவைகளைப் பாதுகாப்பதற்காக தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டனர். இப்பொழுது பறவைகளை வேட்டையாடுதல் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டமான கால்நடை மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. புதுவை மாநிலத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டதன் மூலம், கால்நடை பராமரிப்பு மேலும் வளர்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை.

காரையம்பதியும் தமிழ்ப் பண்பாடும்

புதுவை நாராயணசாமி

உலகில் பழம்பெரும் இனம் தமிழர் இனம். இத் தமிழர் வாழும் நாடு தமிழ் நாடு. இத் தமிழ்நாட்டின் ஒரு பகுதி தஞ்சை மாநகர். இத் தஞ்சை மாநகரின் கிழக்குப் பகுதி நாகப்பட்டினத்திலிருந்து தெற்கே பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள ஊர் தான் காரைக்கால் ஆகும். இதைக் காரையம்பதி என்று தமிழறிஞர் பலரும் ஆன்மிகவாதிகளும் கூறுவர். காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டும் இடம்தான் காரையம்பதியாகும். இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கும் அருள்பெற்ற இறைஞானப் பெண்மணியும் காரைக்காலம்மையார்தான்.

பழங்காலத் தமிழர்கள், தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுவதைப்போன்று,

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருள்"

என்று கூறப்படும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களும் மனிதனுக்கு ஆக்கம் தருபவை என்று கொண்டனர். இந்த மூன்று உறுதிப் பொருள்களுடன் 'வீடு' என்ற ஒன்றையும் சேர்த்து உறுதிப் பொருள்களை நான்கு என்பதை, தாமே வாழ்ந்துகாட்டி உலகுக்கு உணர்த்தும் பேறு பெற்றவர்களில் ஒருவர் காரைக்காலம்மையார் என்பது பெருமைக்குரியதாகும்.

ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம், அப்பொழுது காரைக்கால் பெரிய துறைமுக நகரம். சோழ மன்னர்கள் 'காடு கெடுத்து நாடாக்கி குளந்தொட்டு வளம் பெருக்கிய' காலம். அவர்களது ஆட்சியில் வணிகர்கள் 'திரைகடலோடியும் திரவியம் தேடி' நாட்டைச் செழிப்பித்த காலம் அது. 'உழவும், வாணிகமும் வளம் கொழித்து மக்களை மகிழ்வித்த காலமும் அதுவே. மக்கள் அனைவரும் அற வழியைக் கடைப்பிடித்த காலமும் அதுவே! அவ்வழியில் வாணிகப் பெருங்குடி ஒன்றில் தனதத்தர் எனும் பெருமகனார் காரைக் காலில் வாழ்ந்து வந்தார். அவரது இல்லறம் நல்லறமாக மலர்ந்ததில், அவருடைய மனைவியார் வயிற்றில் திருமகளே தோன்றியது போல் புனிதவதி என்ற அழகிய பெண் பிறந்தார். சிற்றாடை கட்டும் சின்னஞ்சிறு பருவ முதற் கொண்டே சிவபெருமானின் திரு நாமமே புனிதவதியின் திருவாயில் பயின்றது. மற்ற பிள்ளைகள் சிற்றில் கட்டிச் சிறு சோறு சமைத்து விளையாடியபோது, சிறுமி புனிதவதி மணலில் கோயில் கட்டி மனதில் பூசை செய்து விளையாடுவாள். அப்பொழுது விளையாட்டில் பாடும் பாட்டெல்லாம் விடையேறு செல்வனைப் பற்றியதாகவே அமையும்.

புனிதவதி பூப்படைந்து பருவப் பெண்ணானார், அப்பொழுது நாகப்பட்டினத்தில் வாழ்ந்த நீதிபதி என்னும் வாணிகர் தன் மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியை மணம் பேசி முடித்தார். ஒரே குழந்தையைப் பெற்றமையால், தனதத்தனார் மருமகனையும் காரைக்காலிலேயே வாணிகம் செய்ய வைத்துத் தனி மாளிகையில் குடியமர்த்திப் புனிதவதியோடு இல்லறம் நடத்த வைத்தார். பரமதத்தனாரும், தன் மாமனாரைப் போலவே தமது வணிகத்தையும் மிகச்சிறப்பாக நடத்திப் பொருளீட்டினார். புனிதவதியார் சிவபூசையோடு இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். எவரேனும் வீட்டிற்கு வந்தால், பரிவோடு அறுசுவை அமுது படைத்து விருந்தோம்புவார். இல்லறத்தில் யாவரும் வியக்கும் வண்ணம் வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத்துணை நலத்திற்கு எடுத்துக்காட்டாகப் புனிதவதியார் விளங்கினார்.

ஒருநாள் மதியம் பரமதத்தரைப் பார்க்க வந்த இரு வணிகர்கள் இரு மாம்பழங்களை அவரிடம் கையுறையாக அளித்தனர். பரமதத்தர் அவற்றை வீட்டுக்குக் கொடுத்தனுப்பினார். வாணிகத்தில் ஈடுபடுவதால், நண்பகலில் உணவருந்த இல்லம் செல்வது அவரது வழக்கம்.

அன்று, பசியால் வாடிய சிவனடியார் ஒருவர் புனிதவதியார் இல்லத்திற்கு வந்தார். அவரை வரவேற்ற புனிதவதியார், அவரது பசித்த நிலையை அறிந்து இலையிட்டு உணவு பரிமாறினார். கணவர் அனுப்பியிருந்த இரு மாங்கனிகளில் ஒன்றையும் சிவனடியாருக்குப் படைத்தார். அவரும் பசியாறிவிட்டு, புனிதவதியாரை வாழ்த்தி, விடைபெற்றுச் சென்றார்.

பரமதத்தர் வீடு திரும்பினார். நீராடி இறைவனை வணங்கி உணவருந்தினார். எஞ்சியிருந்த மாங்கனியைத் தன் கணவர் இலையிலிட்டார். அதனைச் சுவைத்த பரமதத்தர் 'இது மிகவும் இனிப்பாக உள்ளது; இன்னொரு பழம் இருக்குமே! அதனையும் இலையில் இடு' என்று தன் மனையாளை நோக்கிப் பணித்தார்.

கணவன் இடுகின்ற கட்டளைக்குப் பணிந்து, அதை நிறைவேற்றும் அம்மணி அல்லவா புனிதவதியார்! உள்ளம் பதைபதைத்தார், வைத்திருந்த கனியை எடுப்பதுபோல் உள்ளே சென்றார். கணவருக்குத் தெரியாமல் கனியை அடியாருக்குப் படைத்தது குற்றமோ என எண்ணி மனம் துடித்தார். இறைவனை இறைஞ்சி நின்றார். என்ன வியப்பு!

அவரது அழகிய திருக்கரத்தில் அதிமதுரமான கனியொன்று வந்து தங்கியது. இறைவனின் அருளை வியந்து, விரைந்து வெளியில் வந்து கணவருக்கு அதைப் பரிமாறினார்! அக்கனி மற்ற

கனியைவிட சுவையில் விஞ்சி யிருந்தமையால், தனதத்தர் 'இக்கனி நான் அனுப்பிவைத்த தன்று; மூன்று உலகத்திலும் தேடி னாலும் பெறமுடியாத சுவை யுள்ள இதனை எவ்விடத்தில் பெற் றாய்?' என மனைவியை வினவ, புனிதவதியாரும் உண்மையை உரைக்க, "சிவபெருமான் மாம் பழம் தருவதாவது - நீ சொல்வது உண்மையானால், என் கண் முன்னே ஒரு மாங்கனியை வர வழைத்துக் காட்டு" எனக் கூறவும், அம்மையாரும் சிவனை நினைந் தார்; நெஞ்சால் வேண்டினார்.

விரித்து ஏந்திய கையில் மற்றுமொரு கனி தோன்றியது. உடன் பரமதத்தனார் வியப்பின் விளிம்பில் தத்தளித்தார்! கனியைக் கையில் வாங்கினார். கனி மறைந்துவிட்டது. வியப்பு அச்சமாயிற்று. மனைவி மனிதப் பிறவியே அல்லள் - தெய்வமகள் என்பதை உள்ளுணர்வு கூறியது. அவருடன் இல்லற வாழ்க்கை நடத்தியது தவறோ என்று எண்ணத் தொடங்கினார்.

நாள்கள் நகரவும், வாணிகத் தைப் பெருக்க எண்ணி, கப்பலில் பயணமாகி, மேலும் பொருளீட்டி, காரைக்கால் திரும்ப விரும்பாமல், பாண்டிமா நகரான மதுரையில் வாணிகம் தொடங்கினார். அவ்வூர் வாணிகர் ஒருவரின் மகளை மறு மணம் புரிந்து, மகவு ஒன்றையும் பெற்றெடுத்தார். இவ்வாறு பாண்டி நாட்டில் பரமதத்தர் வாழும் செய்தியை அறிந்த தன தத்தர், காரைக்காலிலிருந்து புனித வதியைப் பல்லக்கில் அனுப்பி வைத்தார். புனிதவதியார் வந்து சேர்ந்த செய்தியறிந்து, பரம தத்தனார், இளைய மனைவி, மற்றும் இளந்தளிர் புதல்வியையும் அழைத்துக் கொண்டு அவர் தங்கியிருந்த இடத்திற்கு வந்தார். புனிதவதியார் 'மாங்கனி அற்பு தத்தால் தோன்றிய பயம் நீங்கித் தம்மை ஏற்றுப் பழைய இன்ப வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல இதோ வருகிறார் தன் கணவர்' என்று எதிர்நோக்க, புனித வதியாரின் பாதங்களில் வீழ்ந்தார் பரமதத்தர்! தன் மனைவி, மகளையும் பாதத்தில் வீழ்ந்து வணங்கச் செய்து, 'அடியேன் உம் அருளால் நலமாக வாழ்கின்றேன். இக் குழந்தைக்கு உம் பெயரையே சூட்டியுள்ளேன்' என்று கூறினார். சுற்றத்தார் மருண்டு வியந்தனர். மனைவியின் பாதத்தில் வீழ்ந்த அவரை நோக்கவும், பரமதத்தர் அவர்களை நோக்கி "இவர் மானுடப் பிறவியே அல்லர். தெய்வமாவார்! நீங்களும் வணங்கி வாழுங்கள்!" என்றார்.

கணவர் வணங்கிய உடனேயே, புனிதவதியாருக்கு இறைவனின் திருவுள்ளம் புலப்படுவதாயிற்று. கண்களை மூடினார்; இறைவனை நாடினார். 'தசைப் பொதி யாக் கையை இனித் தாங்க இயலாது இறைவா! உன் திருவடிகளை வணங்கி உன் திருப்பாதத்தின் அருகே வாழ எனக்கு அருள்செய்' என்று வேண்டி நின்றார்!

அம்மையாரின் அழகிய வடி வம் மறைந்தது. எலும்பு வடிவக் கூடு அங்கே நின்றது. பின் அது மேலே ஆகாயத்தில் பறந்தது. பார்த்தவர்கள் அஞ்சி ஒடினர். அம்மையார் புன்னகை புரிந்தார். 'என்னை யாளுடைய இறைவன் என்னை அறிவானானால் இவர்கள் அறிந்தென்ன' என்று சொல்லிக் கொண்டார். அம்மை யார் திருக்கயிலாய மலையை நோக்கிச் சென்றார். இறைவன் அமர்ந்த இடமாகையால் கால் வைக்க அஞ்சி, தலையால் நடந் தேறினார். ஈசனை அணுகினார். தாயும், தந்தையும் இல்லாத தனிப் பரம்பொருளாகிய சிவபெருமான் 'அம்மையே' என்றழைக்க புனித வதியார் 'காரைக்காலம்மையார்' ஆனார்!

'நம்மிடம் நீ வேண்டுவது யாது?' என ஈசன் வினவ, 'இறவாத அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; பிறப்பு இன்னும் உள தானால் உன்னை என்றும் மற வாமை வேண்டும். அதன்பின் உன் ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் பாடிக்கொண்டே உன் பாதத்தின் கீழ் இருக்க வேண்டும்' என்று வேண்டினார்.

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்"

(பெரிய புராணம்)

அம்மையாரின் வேண்டு கோளை நிறைவேற்ற எண்ணி, "அம்மையே! உன் திருவுள்ளத்தை நிறைவேற்ற திருவாலங்காட்டுக்கு வருக" என்று பணித்தான் இறை வன்! அவ்வாறே திருவாலங்காட் டில் அம்மையார் இறைவன் எடுத்த பொற்பாத நிலையடைந் தார். இன்றும் அங்கே வாழ்கின் றார்!

இறைவனுக்குத் திருவமுது படைத்தவர்கள் சிறுத்தொண்டர், கண்ணப்பர், காரைக்காலம்மை யார் முதலியோர். மூவரும் மூன்று வகையாக இறைவனுக்கு அமுது படைத்தனர். கண்ணப்பர் திருக் காளத்தி நாதர் வடிவுக்கு உணவு படைத்தார். அவர் வேடராகை யினால் அவர் கொள்ளும் உண வாகிய இறைச்சி முதலியவற்றைப் படைத்து வணங்கினார். ஆனால் பரஞ்சோதியார் என்னும் சிறுத் தொண்டரும் புனிதவதியாராகிய காரைக்காலம்மையாரும் இறை வனே சிவனடியார் வடிவு தாங்கி வர அவ்வடியாருக்குத் திருவமுது படைத்தனர். பிள்ளைக்கறி சமைத் துப் படைத்தார் பரஞ்சோதியார். கண்ணப்பரின் இறைச்சியையும், சிறுத்தொண்டரின் பிள்ளைக்கறி யையும் இறைவன் உண்டதாகச் செய்தி இல்லை. ஆனால் விருந் தோம்பிய காரைக்காலம்மையார் படைத்த மாங்கனியை இறைவன் விரும்பி உண்டு மகிழ்ந்தார். இறை வன் உண்ணத்தக்க அமுது படைத்து அழியாப் புகழ்பெற்றவர் காரைக்காலம்மையார் என்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கையை நினைவூட்டவும், தமிழ்ப் பெண்களின் பண்பைப் போற்றவும், காரைக்கால் மக்கள் ஆண்டுதோறும் ஆனித்திங்களில் பௌர்ணமி நாளில் "மாங்கனித் திருநாள்" என்ற விழாவைத் தவ றாமல் நடத்தி வருகின்றனர். அரசும் அன்று விடுமுறை நாளாக அறிவிக்கின்றது.

இவ்வாறு புகழ்பெற்ற காரையம்பதியின் மேற்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவில் பேரளம் வழியில் உள்ள மற்றொரு புகழ்பெற்ற தலம் திருநள்ளாறு ஆகும். இது அகத்திய முனிவர், அருச்சுனன், யோசன் முதலானோர் பூசித்துப் பேறு பெற்ற தலமாகும். நளச் சக்கரவர்த்தி கலி (சனி) யினால் ஏழரையாண்டுக்காலம் அவதியுற்றுத் திருநள்ளாறு வந்தடைந்து, அங்கு வீற்றிருக்கும் தர்ப்பாரணியர் எனப்படும் ஈசனை முறையே வணங்கிக் குறை தீரப் பெற்றார் என்று வரலாறு கூறுகிறது. கலியகற்றும் தலமாக இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை இங்குச் சனீசுவர விழா நடைபெறுகிறது. அச்சமயம், நாடெங்குமிருந்து இலட்சக்கணக்கான மக்கள் இங்குக் கூடி நளன் குளத்தில் நீராடிச் செல்வதும் வழக்கமாக உள்ளது. தர்ப்பைக் காட்டில் முன்பு வீற்றிருந்தமையால் இங்குள்ள ஈசனை 'தர்ப்பாரண்யீசுவரர்' என்று அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர். அம்மையாரின் சந்நிதியை ஒட்டிச் சனீசுவரர் கோபுரவாயிலில் கிழக்கு நோக்கி நின்றுள்ளார். சனிப்பெயர்ச்சி நாள்களில் மட்டுமின்றி, ஒவ்வொரு சனிக்கிழமையிலும் ஆயிரக்கணக்கான மக்கள், வந்து இன்றும் வணங்கிச் செல்கின்றனர்.

ஆன்மிக வரலாற்றிலிருந்து பிரெஞ்சு ஆட்சியின்கீழ் காரைக்கால் திகழ்ந்த வரலாற்றினைச் சிறிது நோக்குவோம். 161 கிலோமீட்டர் பரப்புடைய காரைக்கால், புதுவை அரசின் ஒரு பகுதி என்பதைப் பலரும் அறிவர். புதுவை நகரிலிருந்து 130 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்த இந்தக் காரைக்கால் வைர வடிவத்தில் அமைந்துள்ளதாகப் பலர் கூறுவர்! 'காரைக்கால்' என்ற சொல்லுக்கு 'கால்வாயினால்' கட்டப்பெற்ற நகர் (Canal in Masonry) என்றும் கூறுவர். இன்று காரைக்கால் நகரில் வஞ்சியாறு என்ற ஆற்றுடன், நூலாறு என்ற ஆறும் கலந்து தெற்கே நோக்கிப் பின் அரசலாறு என்ற ஆற்றில் கலந்து கிழக்கு நோக்கிக் கடலில் கலக்கும் நகரமாக விளங்குவதுதான் காரைக்கால் நகராகும். இவை தவிர, திருமலைராயன் ஆறு, நண்டலாறு என்னும் வேறு ஆறுகளும் காரைக்காலைச் சுற்றி ஓடுகின்றன.

சோழ, சேர, பல்லவர் ஆண்ட காலங்களில் தஞ்சை மாநகரின் - சோற்றுக்கு ஒரு சோழ நாட்டின் - ஒரு பகுதியாகக் காரைக்கால் விளங்கினாலும், இரகுநாத நாயக்கர் தஞ்சையை ஆண்ட 1610 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் காரைக்காலைச் சேர்ந்த திருமலைராயன் பட்டினத்தை மூன்று ஆண்டு குத்தகைக்கு எடுத்துக் கொண்டதாக வரலாறு கூறுகிறது.

இலங்கையின் கண்டி என்ற துறைமுகத்திலிருந்தும், போர்ச்சுகல் நாட்டிலிருந்தும் கப்பல்கள் திருமலைராயன் துறைமுகத்திற்கு வந்து சரக்குகளை இறக்கிச் சோழ நாட்டில் வாணிகத்தைப் பெருக்க வழி செய்தன. இதை அடுத்து 1620இல் இரகுநாத நாயக்கர் ஆங்கிலேயர்களுக்கு ஒரு தொழிற்சாலையைக் காரைக்காலில்

அமைக்க இசைவு தந்தார். அதன் பின் 1688 ஆம் ஆண்டு பிரான்சுவா மார்டின் (Francoise Martin) என்ற பிரெஞ்சுக்காரர் காரைக் காலில் துறைமுகத்தை அமைத்து வாணிகத் தொடர்பை ஏற்படுத்தி னார்.

முகலாய ஆட்சி இந்தியாவில் பரவிய பொழுது சந்தாசாகிப் என்ற முகலாய அரசன், நாயக்கர் இனத்தில் தோன்றி, மதுரை, திருச்சி நகரை ஆண்ட மீனாட்சி என்ற அரசியைச் சிறையிலடைத்து 1736 இல் ஆட்சிக்கு வந்தார். இக் காலக் கட்டத்தில்தான் காரைப் பகுதியிலும் இந்துக்களில் பெரும் பாலோர் இஸ்லாம் மதத்தைத் தழுவினர்.

1738 இல் தூமாஸ் (Dumas) என்பவர் புதுச்சேரியில் பிரெஞ்சு கவர்னராக இருந்துவந்த போது சய்யாஜி என்பவர் அவரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு, உதவி பெற்று தஞ்சை மாநி லத்தை மீண்டும் விடுவித்து, அதன் நன்றிக்கடனாக காரைக் கால் நகரைப் பிரெஞ்சு ஆதிக்கத் திற்கு உட்படுத்தியதாக வரலாற்று அறிஞர் கூறுகின்றனர். 1738 லிருந்து 1741 வரை சிறிது சிறிதாக காரைக்கால் நகரம் பிரெஞ்சு ஆதிக்கத்தில் சிறந்த வாணிக நகரமாக வளர்ந்தது. இக் கால கட்டத்தில் கிறித்தவ சமயமும் மெல்ல இப்பகுதியில் கால் கொண்டது. இதன் பயனாக கிறித் தவப் பாதிரிமார் இருவர் 1739 ஜூன் மாதம் 4 ஆம் நாள் காரைப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். காரைப்பகுதியில் தமிழ் மக்கள் குறிப்பாக, இந்துக்கள் அக்கால கட்டம் வரை வாழ்ந்து வந்தாலும், பிற சமயங்களை அவர்கள் ஒதுக்கித் தள்ளவில்லை. பிற சம யத்தைத் தழுவி, தாங்களாகவே ஏற்றுக் கொண்டவர்களும் உண்டு. இன்றுவரை காரைக்கால் பகுதி யில் முகமதியர்களை 'இசுலாமான வர்கள்' என்று மதிப்போடும் மரி யாதையோடும் அழைப்பதையும், சகோதர வாஞ்சையுடன் 'மக்கள் இனமே உலகில் ஒன்று' என்று மற்ற சமயத்தினரும் எண்ணுமாறு வாழ்ந்து வருவதையும் மக்கள் கண்கூடாகக் காணலாம்!

சோழ நாட்டுக்குக் காலங்கால மாகப் பெருமை சேர்ப்பது அங்கு நிலவிவரும் கலைப்பண்பாடு ஆகும். காரைக்கால், நாகூர், வேளாங்கண்ணி என்னும் சோழ நாட்டு நகர்கள் அந்தந்த ஊர் களுக்குரிய தனிச் சிறப்பும் பெருமையும் கொண்டிருப்பினும், இந்து, இசுலாம், கிறித்தவம் என்னும் மூன்று சமயங்களுக்கும் அணிகலன்களாகத் திகழ்ந்து வரு கின்றன. வழிவழியாக வாழ்ந்து வரும் இந்துக்களுக்கும், இசுலாமி யர்களாகவும், கிறித்தவர்களாக வும் மாறியவர்களுக்கும் இடையே சமய வேறுபாடோ, சமயப் பூசலோ காரையம்பதியில் காண இயலாது. சமயக் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்தியாவின் பற்பல வடபுலப் பகுதிகளில் சுட்டெரிக்கப் படுகின்ற இக்காலக்கட்டத்தில், காரையம்பதியினர் இன்றளவும் நின்று நிலைபெறும் சமய ஒருமைப்பாட்டுத் தென்றலின் இனிமையைச் சுவாசித்து மகிழ் கின்றனர் என்பது உலக மக்க ளினத்திற்கே பெருமிதம் தரும் ஒரு செய்தியாகும்.

காரைக்காலில் இந்து - இசுலா மியர் - கிறித்தவர் என்ற பாகு பாடின்றி அனைவரும் ஒருதாய் மக்கள் போன்ற உடன்பிறப் புணர்ச்சியுடன் வாழ்ந்து வரு வதைக் கண்கூடாகக் காண முடியும். சமய வழிபாட்டினை மேற்கொள்ளும் இந்து ஒருவர், காரைக்காலில் காரைக்காலம்மை யாரையும், திருநள்ளாற்றுச் சனீஸ் வரையும் வழிபட்டதுடன் அமை யாமல், இசுலாமியரின் புனிதத் தலமாகிய நாகூர் தர்காவுக்கும் சென்று தங்கள் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு, அதற்கப் பால் கிறித்தவரின் வழிபாட்டுத் தலமாகிய வேளாங்கண்ணிக்குச் சென்று தங்கள் நேர்த்திக் கடனை நிறை வேற்றுவதும், அதே போன்று இசுலாமியர்களும் கிறித் தவர்களும் தங்கள் திருக்கோயில் வழிபாட்டுடன் நின்றுவிடாமல் காரைக்காலம்மையார் கோயிலுக் கும் திருநள்ளாற்றுச் சனீசுவரர் ஆலயத்திற்கும் சென்று வழிபாடு செய்வதும் இன்றைக்கும் நடை முறை வழக்கமாகும்.

காரையம்பதியில், பெரும் பாலும் இந்து - இசுலாமியர் - கிறித்தவர் இல்லச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் மங்கலங்களிலும் எல்லாச் சமயத்தினரையும் காண லாம். சமயங்களுக்கெல்லாம் அப் பாற்பட்டு, ஒருதாய் வயிற்று மக்கள் போல - ஒரே குடும்ப உறுப்பினர்களைப் போல, கலந்து பழகும் பாங்கும், உறவு கொள்ளும் தோழமையும், போற்றிக் காக்கும் சமய ஒருமைப்பாடும் நாகரிக மிக்க மனிதகுலம் அனைத்தும் பின்பற்றத்தக்க பண்பாடாகும்.

புதுவையில் ஆளுநர் அமைந்த வீதி முன்னர் தூப்ளே வீதி என்றழைக்கப்பெற்று இப்போது நேரு வீதி என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது. ஆனால் காரைக் காலில் ஆளுநர் மாளிகை அமைந்த வீதி அன்று போலவே இன் றைக்கும் தூப்ளே வீதியாகவே இருக்கின்றது.

நான் அரசு அதிகாரியாக இருப்பதால் புதுவையை இப் போது வாழுமிடமாகக் கொண் டிருந்தாலும், எனது பிறந்த ஊர் காரையம்பதியாகும். அங்கு என் தந்தையார் அறநெறி போற்றும் சிறந்த வாணிகராக இருந்தார்கள். பிரெஞ்சுக் கப்பல்களும் ஜப்பான் கப்பல்களும் காரைக்காலில் பொருள்களை இறக்குவதையும், என் தந்தையார் அவற்றிலிருந்து வெளிநாட்டு இயந்திரங்கள், மிதி வண்டிகள் போன்ற பல பொருட் களை இறக்குமதி செய்வதையும் நான் சிறுவனாக இருந்தபோது 1954 வரை பார்த்திருக்கின்றேன்.

1933 ஆம் ஆண்டில்தான் காரை யம்பதியில் முதன் முதலாகப் பிரெஞ்சுக்காரர்களால் மின்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், அதன் பயனாக 'மூன்று கிணறு பிளாஸ் (இடம்)' என்ற இடத்தில் 'சத்தியவான் சாவித்திரி' என்ற திரைப்படம் முதன் முதலாகத் திரையிடப்பட்டது என்றும் என் தந்தையார் சொல்லக் கேட்டிருக் கிறேன். நான் பலமுறை உலகை வலம் வந்திருக்கிறேன். அந்தந்த நாட்டு மக்களின் பண்பாடுகளை ஊன்றிக் கவனித்திருக்கிறேன். அதன் விளைவு, "இந்திய நாட்டுப் புழுதியும் புனிதமானது' (Even the dust seems to be Holy) என்ற விவேகானந்தரின் கூற்றின் மெய்ப் பொருளை முழுதும் உணர்ந்து கொண்டவன் நான்.

"வேகத் திரைகளினால் வேதப் பொருள் பாடிக்" கரையை முத்த மிட்டுத் தழுவும் அலைகள் பிறக் கும் வங்கக்கடலின் தங்கக் கடற் கரை நகரம் அழகு கொழிக்கும் காரையம்பதி. அங்கே உப்பங் கழிகளில் முகில் உலாவும் சோலைகள், வானுற வளர்ந்த தென்னை, ஓடு மீன் ஓட, உறு மீன் வருமளவும் காலம் பார்த்துக் காத்து நிற்கும் நாரைகள்! மா, பலா, வாழைகள் செழித்த தோப்புகள்! சேலும், கெண்டை யும், விராலும் துள்ளிக் குதிக்கும் செந்நெல் வயல்கள்! பார்க்கும் இடமெல்லாம் கண்ணில் பட்டுத் தெறிக்கும் அழகுக் கலைவண் ணங்கள்! வளத்தையும் நலத்தை யும் அறிவிக்கும் ஆலயமணியின் ஒலிகள்! இப்படி எத்துணை எத் துணையோ உண்டு! இத்தகைய சூழலில் துள்ளித்திரிந்த எனது பிள்ளைப் பருவம் கழிந்தது காரை யம்பதியில். நான் பிறந்த சூழலும் வளர்ந்த சூழலும் இயற்கை யாகவே என் நெஞ்சத்தில் அறம் என்னும் விதையை மிக இளமைக் காலத்திலேயே ஆழமாக ஊன்றி என் வாழ்நாளில் பொதுநலம் பேணும் ஏதேனும் ஒரு நிலைத்த செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தை வேரூன்றச் செய்தன.

அதன் எதிரொலியே, என் னுடைய பெற்றோர் பெயரில் ஓர் அறக்கட்டளையை நிறுவி, அதன் சார்பில் ஏழை மணமக்களுக்கு இலவசத் திருமணங்களை நடத்தி வைப்பதற்காகக் காரையம்பதி யில் 'அமரர் வயித்திலிங்கம் பிள்ளை – தையநாயகி அம்மாள் திருமண மண்டபம்' என்ற ஒன் றைத் தோற்றுவித்து, மண்டபத் திறப்பு விழாவையும், முதற்படி யாக முதலாண்டு இலவசத் திருமணங்களையும் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமி களைக் கொண்டு செய்வித்த தாகும்.

அந்தத் திருமண மண்டபத்தி னுள்ளேயே அருள்மிகு கயிலாச நாதர் திருக்கோயில் சிறு அளவில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் அக்கோயில் மண்டப மேடை யில்தான் இந்து – இசுலாமிய – கிறித்தவ சமயம் சார்ந்த ஏழை மணமக்களுக்கு அவரவர் சமயச் சடங்கு முறைகளுடன் இந்துப் புரோகிதர்களும், இசுலாமிய காஜிமார்களும், கிறித்தவப்பாதிரி யார்களும் இலவசத் திருமணங் களை நடத்தி வைக்கிறார்கள். அமரர் வயித்திலிங்கம் பிள்ளை – தையநாயகி அம்மாள் அறக் கட்டளை மணமக்களுக்கு, தாலி, புத்தாடைகள் முதலியனவற்றை வழங்குகின்றன. திருமணத் திற்குப் பின்னர் வந்திருக்கும் அனைவருக்கும் விருந்து படைக் கின்றது. சாதி சமய வேறு பாடின்றி ஏழை மணமக்களுக்கு இலவசத் திருமணத்தை நடத்தி வைத்து, அவர்களது வாழ்வில் இல்லற தீபத்தை ஏற்றி வைக் கின்றது. இத்தகைய அறக் கட்டளைப் பணியிலே என்னை ஈடுபடுத்தியதுடன், உந்துசக்தியாக – உள்ளுணர்வாக இருந்து என்னைச் செயற்படும்படியாகச் செய்தது காரையம்பதியில் வாழை யடிவாழையாகக் கால் கொண்டு நிலை பெற்றுள்ள 'நாடு, மொழி, இனம், சமயம்' போன்ற எல்லை களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, உலக ஒருமைப்பாட்டைப் பேணும் ஓர் உயரிய தமிழ்ப் பண்பாடே ஆகும் என்பது முற்றிலும் உண்மை என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை! ❀

பிரியங்கா

புதுச்சேரிச் சிறப்பிதழில் – இயக்குநர் நீலகண்டா இயக்கிய பிரியங்கா திரைப்படத்தை, புதுச்சேரியில் வசிக்கிறவர்களே பார்த்து தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கச் சொன்னோம்.

'தாமினி' என்ற ஹிந்திப் படத்தின் மறுபதிப்பான பிரியங்காவைப் புதுச்சேரி 'ராஜா' திரையரங்கத்தில் பார்த்து ரசித்ததை இங்கே தொகுத்துள்ளோம். 'ராஜா' திரையரங்க உரிமையாளர் திரு. கே. சோமசுந்தரம் மிகுந்த ஆர்வத்துடன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துதவினார்.

திருமதி சூரியகுமாரி & கவிஞர் துரை மாலிறையன்

உண்மைக்கும் பொய்ம்மைக்குமிடையே நடக்கும் போராட்டம்தான் படத்தின் கதை. சமுதாயத்தின் பல கோணல்களைப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளது 'பிரியங்கா' படம்.

வரதட்சணைக் கொடுமை – வறட்டுக் குடும்ப கௌரவம் – இவற்றைப் பாதுகாக்க, பலப்பல பொய்கள் தலைவிரித்தாடுகின்றன, படத்தில்.

சமுதாயத்தில் எத்தனை 'கங்கா'க்கள்? அந்தந்தக் 'கங்கா'க்களுக்கும் எத்தனை 'பிரியங்கா'க்கள் இருக்கிறார்கள்? இருக்க வேண்டும் என்பதுதான் சமுதாயத்தின் – பிரியங்கா படத்தின் – இயக்குநரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.



சில்க் ஸ்மிதா 'அடக்கத்தோடு' ஆடிச் சென்றது பெரும் வியப்பு.

எல்லா நடிகர்களும் அவரவர் திறமைகளை நன்கு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ரேவதி நடிப்பு அற்புதம். இரண்டு கோர்ட் சீன்களும் பொது மக்களின் கைத்தட்டலைப் பெற்று விட்டன. படத்தில் மட்டும் இல்லை. திரையரங்குகளிலும்தான்.

நகைச்சுவை அளவோடு ஓரிரு இடங்களில் நியாயமானதாகவும் இருந்து சிரிக்க வைக்கிறது. மொத்தத்தில் ஒரு நல்ல நோக்கத்திற்காக எடுக்கப்பட்டதைப் படம் புரிய வைக்கிறது. வாழ்க காந்தியம்!

திரு. கோபால்

(கலைக் கல்லூரி மாணவர்)




'பிரியங்கா' என்ற பெண்ணின் பெயரைச் சுற்றிய கதைக்கு அந்தப் பெயரையே படத்தின் தலைப்பாகக் கொடுத்தது மிகப் பொருத்தம்.

இந்த மனித உறவில் எத்தனையோ நல்ல விஷயங்கள் நடக்கையில் ஏன் மீண்டும் மீண்டும் கொலை, கற்பழிப்பு, லஞ்சம் போன்ற நிகழ்ச்சிகளைப் படத்தில் கொண்டு வர வேண்டும்?

மிக ஆழமாக மக்கள் மனதில் பதிந்து போவது இன்பத்தை விட துன்பமான நிகழ்ச்சிகள்தான். ஒரு பெண்ணைக் (கங்காவை) கற்பழிப்பது, அதை மறைப்பது, சாட்சியைக் கொலை செய்ய முயலுவது போன்றவை மிகக் கீழ்த்தரமான நிகழ்ச்சிகளாக்கி மீண்டும் மீண்டும் சினிமாவில் காட்டப்படுகின்றன.

இந்தப் படத்தை நான் இடைவேளை வரை அதாவது பிரியங்கா கோர்ட் ஏறும் வரை ரசித்தேன். அதன் பின் என்னால் ரசிக்க முடியவில்லை.



திரு. பாஞ். இராமலிங்கம் (அமைப்பாளர், புதுவை மாநில அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்)

இன்றைய சினிமா உலகில் வியாபாரம் முதன்மைப் படுத்தப் பட்டிருந்தாலும், உண்மை - நேர்மை போன்ற மனித நேயப் பண்புகளை முன்னிறுத்தி வெளி வந்திருக்கும் 'பிரியங்கா' சற்றே மனதை நெகிழ வைத்தது.

ரேவதியின் கலகலப்பான நடிப்பு. உணர்ச்சியின் உச்சபட்ச வெளிப்பாடு. தந்தை (சிவாஜி)யின் சிம்மக்குரலுக்கேற்ப பிரபுவின் வக்கீல் வாதம் மிக அருமை. பல தரப்பினரும் விரும்பிப் பார்க்கும் வகையில் கருத்தாழத்தை மிக நளினமாகக் கையாண்டிருக்கும் இயக்குநர் நீலகண்டா பாராட்டுக்குரியவர்.



படம் பார்க்கும்போது பரவசப் படுத்துகிறது. சமூகக் கருத்துக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது.

சிற்பி ஜயராமன் (முதல்வர், பாரதியார் பல்கலைக் கூடம்)

இரண்டு 'கரு'க்கள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்று - உண்மை; மற்றொன்று கற்பு. ஆனால் கற்பு என்பதில் பாதிக்கப்பட்ட பெண்ணைப் பற்றி படத்தின் கதாபாத்திரங்களே, கவலைப்படாத நிலை. ஆனால் 'உண்மை' என்ற கரு வலியுறுத்தப்பட்ட விதத்தில் கதைக்கு வெற்றி.

படத்தின் இறுதியில் காந்தியின் 'வாய்மையே வெல்லும்' என்பதை எழுத்து மூலமாக திரையில்




காட்டியதைவிட, அரிச்சந்திர புராணத்தை ஞாபகப்படுத்தியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

மக்களை (அதாவது திரைப் படத்தைப் பார்க்கிற அனைவரையும்) திருப்திப்படுத்த முயன்று வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். சண்டை, கவர்ச்சி நடனம் போன்ற அனைத்து சினிமா (மசாலா) இலட்சணங்களுக்கும் மரியாதை செய்திருக்கிறார்கள்.

ஆனால், நீண்ட நாள்களுக்குப் பிறகு கொஞ்சம் திருப்தி தரும் திரைப்படம் 'பிரியங்கா'.

டி. சண்முகானந்தா (செய்தித் துறைத் துணை இயக்குநர், ஓய்வு)

ஆங்கிலக் கதாசிரியர் சிட்னி ஷெல்டனின் கதைகளைப் போல ஒரு பெண்ணைச் சுற்றி நிகழ்ச்சிகள் நிகழ்வதைப் போல் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணக் கதையைக் கருவாக வைத்துக் கொண்டு அதை வளரச் செய்து நீதி மன்றம், வாக்கு வாதம் முதலியவற்றை மிகச் சாதுரியமாகப் புகுத்தி, கதைக்கு உயிரோட்டம் தந்திருக்கும் விதம் பாராட்டத்தக்கது.



'சட்டம் தன் சட்டையைக் கழற்றி வைத்து வெகு நாள்களாகி விட்டன - சட்டம் சாக்கடையாகி விட்டது' என்பதை முதலில் நம்பச் செய்து இறுதியில் 'வாய்மையே வெல்லும்' என்கிற தாரக மந்திரத்தை நிருபிக்கும் வகையில் முடித்திருப்பதற்கு சபாஷ் சொல்லலாம்.

கதை ஆரம்பத்தில் தொய்வுடன் சென்றாலும் இறுதியில் விறுவிறுப்புடன் செல்கிறது.

பேராசிரியை ச. மதனகல்யாணி (பிரெஞ்சு கல்லூரி புதுவை)

சிறப்புகள் : இக்காலத்து மக்களுக்கு எழுச்சியைத் தூண்டி நியாயத்தையும் உண்மையையும் நிலைநாட்ட வேண்டியதற்காக அமைந்த கதை. சிறப்பான வசனங்கள். உண்மையை நிலை நாட்டத் தனியாளாக இருந்தாலும் தைரியமாய்ப் பாடுபடுகல்.



குறைகள் : கதாநாயகி ரேவதி இறுதியில் கணவனுக்காக மாறுவது கதையின் ஓட்டத்தையும் வளத்தையும் குறைக்கிறது. தனி மனிதன் பலரைத் தாக்கி வெற்றி பெறலாம் என்ற பொய்யான வலிமையை மக்களிடம் காட்டி, வருவதைத் தவிர்க்க வேண்டும்.

முடிவாய் : 'இருட்டறையில் கறுப்புப் பூனையைத்...' என்பதாகிவிட்ட இன்றைய இந்தியாவின் நிலைக்கு 'இல்லை' என்று சவால் விட்டு ஒவ்வொருவரும் (மக்கள்) முரட்டுத்தனமாய் எதற்கும் பயப்படாமல் சுயநலத்தை மறந்து போராட முன்வர வேண்டும் என்பதற்கு இக்கதை நல்ல 'மாஸ் அப்பீல்'.

தொகுப்பு : நாகராஜகுமார்



மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன்சிங் பரமஹம்ச ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகளைத் தரிசித்து ஆசி பெற்றார். அருகில் ஸ்ரீபரத்வாஜ் சுவாமிகள்.

சக்தி ஸ்டெபிலைசர்

மின்சாரத் தேவை அத்தியாவசியமாகிவிட்ட இன்றைய நாள்களில் மின்சார ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படும் பாதிப்புகளையும் நாம் பொறுத்துக்கொள்ளவே வேண்டியுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் மின் ஏற்றத்தாழ்வால் ஏற்படும் நஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

நாம் ஆசையாக வாங்கும் தொலைக்காட்சி, குளிர்பதனப் பெட்டி, குளிர்சாதன கருவி, இசைக் கருவிகள் மின் ஏற்றத் தாழ்வின் பாதிப்பால் சட்டென்று பொசுங்கி விடுவது நிறைய வீடுகளில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளாகி விட்டன.

இதற்கு முடிவு கட்ட வந்திருப்பதுதான் சக்தி ஸ்டெபிலைசர்.


90 முதல் 290 வோல்ட் வரை வரும் மின்சாரத்தை ஒரே சீராக தரவல்லது சக்தி ஸ்டெபிலைசர்.

பல வண்ணங்களில், பட்ஜெட்டுக்கு உட்பட்ட விலையில், கையடக்க வடிவில், பத்து மாடல்களில் வந்திருக்கும் சக்தி ஸ்டெபிலைசர் நிச்சயம் மின்சாதனக் கருவிகளை மின் ஏற்றத்தாழ்வுகளில் இருந்து பாதுகாக்கும் தரம் கொண்டது.

நூறு மாத உத்தரவாதத்துடன் விற்பனைக்கு வந்துள்ள சக்தி ஸ்டெபிலைசர் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் கவர்ச்சிகர இலவச பரிசுகளுடன் கிடைக்கிறது.

'சக்தி'யின் அறிமுக விழாவிற்கு எல்காட்டின் வி. இராஜகோபால், கே.எஸ். லக்ஷ்மி நாராயணன், ஜி.வி. சுகுமாரா ஆகியோர் வந்திருந்து வாழ்த்தியது அதன் திறனுக்கு மேலும் உத்தரவாதமளித்தது.

— நாகு





தர முத்திரையுடன் 'தேஜஸ்'

எப்படித் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் தரத்திற்கு 'ஐ.எஸ்.ஐ' என்று முத்திரைக் குத்தப்பட்டுச் சான்று அளிக்கப்படுகிறதோ, அது போலவே வேளாண்மை விளைப் பொருள்களுக்கும், கால்நடைகள் மூலம் கிடைக்கும் உணவுப் பொருள்களுக்கும், வளத்தில் விளையும் பொருள்களுக்கும் 'இது கலப்படம் இல்லாதது - தரமானது - தூய்மையானது' என்று அரசு உத்திரவாதம் அளிப்பதே 'அக்மார்க்'.

தமிழகத்தைப் பொறுத்தவரை உணவு எண்ணெய்கள், நெய், தேன், மசாலாப் பொடி வகைகள், கடலை மாவு, கோதுமை மாவு, ரவை, மைதா, சூரியகாந்தி எண்ணெய், ஜவ்வரிசி, கொட்டை நீக்கிய புளி, அரிசி, பருப்பு வகைகள், உருளைக்கிழங்கு, கரும்பு- வெல்லம், மஞ்சள், கொத்தமல்லி மற்றும் முட்டை முதலிய உணவுப் பொருள்கள் 'அக்மார்க்' தரம் பிரிப்பு செய்யப்படுகின்றன.

இந்தியாவில் பல துறைகளில் காலூன்றி அனைத்திலும் தன் வளர்ச்சியைப் பெருக்கி வேகமாக வளர்ந்து வரும் 'டிரான்ஸ்வேர்ல்டு குரூப் ஆஃப் கம்பெனி'களில் ஒன்றான 'அசோசியேட்டட் எடிபிள் ஆயில் ரிபைனரீஸ்'ஸின் தரமான சூரியகாந்தி எண்ணெய், தமிழகத்தின் முதல் 'அக்மார்க்' தர முத்திரையைப் பெற்றுள்ளது.

ஆந்திரா, கர்நாடக் மாநிலங்களில் மூலப் பொருள்களைப் பெற்று கேரளாவிலுள்ள. பெரம்பாவூரில் சுத்திகரிக்கப்பட்டு சென்னை பாலவாக்கத்தில் அரை கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகளாகி தமிழகம் முழுக்க விற்பனைக்கு வந்த தேஜஸ் தற்போது தர முத்திரைக் கொண்ட 'தேஜஸ்' சூரியகாந்தி எண்ணெயாக மாறி விட்ட பிறகு 'தேஜஸ்'ஸின் தரத்தை வேளாண்மை விற்பனை இயக்குநர் திரு. சி.எஸ். ராஜ்மோகன் ஐ.ஏ.எஸ்., புகழ, துணை வேளாண்மை விற்பனை ஆலோசகர் திரு கே.கே. நம்பியார், முதுநிலை விற்பனை அலுவலர் திரு கே. சம்பத்குமார், வேளாண்மை துணை இயக்குநர் (விற்பனை - திருச்சி) திரு பி. ரங்கராஜு வாழ்த்த 'தேஜஸ்' விற்பனையை இனி யாராலும் கட்டுப்படுத்த முடியாததாகி விடும் என்பது நிச்சயம்.

'டிரான்ஸ்வேர்ல்டு' குருப்பின் தலைவர் திரு. எஸ். ராமகிருஷ்ணன், நிர்வாக இயக்குநர் திரு. வி. ராம் நாராயண், எக்ஸிக்யூட்டிவ் டைரக்டர் திரு. மகேஷ் ஐயர், ஆலோசகர் திரு. ஆர்.பி. ஐயரின் அயராத உழைப்பு 'தேஜஸ்' என்றாலே தரமான சூரியகாந்தி எண்ணெய் என்று மக்கள் சொல்லும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்று அக்மார்க் முத்திரையிட்டுப் பெருமையாகச் சொல்லலாம்.

— நாகராஜகுமார்



பூவண்ணனுக்கு இந்தியன் வங்கி விருது

148 நூல்களை இதுவரை எழுதியுள்ள கோவையைச் சேர்ந்த எழுத்தாளர் பூவண்ணனுக்கு 'குழந்தைக் கவிஞர் விருதை' இந்தியன் வங்கி அளிக்கிறது. இவ்விருதுடன் ரூபாய் ஐயாயிரம் ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

இந்தியன் வங்கியும் குழந்தை எழுத்தாளர் சங்கமும் இணைந்து நடத்தும் விருது வழங்கும் விழா சென்னையில் நடைபெறும்.

எழுத்தாளர் பூவண்ணன் மத்திய அரசு, மாநில அரசு, தமிழ்ப் பல்கலைக் கழகம், எழுத்தாளர் சங்க அமைப்புகளிடமிருந்து இதுவரை 19 முறை பரிசு பெற்றுள்ளார். இது, இவர் பெறும் இருபதாவது பரிசு. ●

பார்வையர் பக்கங்கள்

எண்ணிப் பார்க்கலாம் பெண்ணே!

சமீபத்தில் ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தேன். வசதியான பெண் வீட்டார். அவர்களுக்குக் கொஞ்சமும் குறையாத மாப்பிள்ளை வீட்டார். ஆடம்பரமான திருமணம். கலகலப்பாகப் பெண்கள்! பார்க்க நன்றாகத்தான் இருந்தது.

ஆனால் ஒரு விஷயம் மட்டும் கண்ணை உறுத்திக் கொண்டே இருந்தது. ஒவ்வொருத்தரும் கோட் ஸ்டாண்டு போல் ஒரு ஐம்பது பவுன் நகையாவது அணிந்து கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் மட்டுமல்ல; இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்த குழந்தைகள்கூட எக்கச்சக்க நகைகளை அணிந்திருந்தனர். கழுத்தில் ஒரு பெரிய காசு மாலை, கூடவே நாலைந்துவிதச் செயின்கள். கையில் கடகம், காப்பு என்று என்னென்னவோ! சரி, பாயிண்ட் அதுவல்ல.

ஒரே நேரத்தில், தன்னிடம் இருக்கும் எல்லா நகைகளையும் அணிந்து வந்து "இதோ பார் என்னிடம் இத்தனை நகைகள் இருக்கு" என்று காட்டும் ஆர்வம் தான் அதில் தெரிந்தது.

நகைகள் வாங்குவதில் தவறில்லை. இறங்குமுகமே இல்லாத ஓர் இன்வெஸ்ட்மெண்ட் இது. தேவையானபோது உடனே அடகு வைத்தோ, விற்றோ பணம் புரட்டுவதற்கு சுலபமான வழி காட்டும் சொத்துதான். இதைப் புரிந்து கொண்டு கையில் பணம் கிடைக்கும்போது நகைகள் வாங்கினால் தவறில்லை.

அணிந்து கொள்வதிலும் தவறில்லை. ஆனால் அது அளவோடு இருக்க வேண்டும். கண்ணை உறுத்தாத வகையில், திருடன் 'கையை வெட்டிக் கொண்டு போகலாமா?' என்று யோசிக்க இடங் கொடாத வகையில், பார்ப்பவர் வயிற்றெரிச்சல் படாத வகையில் இருக்க வேண்டும்.

ஒரு வாரம் தொடர்ந்து நாளிதழ்களைப் படித்துப் பாருங்கள். நகைக்காக எப்படியெல்லாம் கொலைகள், விபரீதங்கள், பயங்கரங்கள் நம்மைச் சுற்றி நடக்கின்றன என்பது புலப்படும்.

போலீஸ் கமிஷனரே ஒரு முறை ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார்: "திருடனைப் பிடிக்க நாங்கள் முயற்சி எடுக்கிறோம். ஆனால் திருடர்களைத் தூண்டாமல் இருக்கப் பெண்கள் முயற்சி செய்ய வேண்டும்" என்று. இது மிகப் பெரும் உண்மை!

பெண்ணுக்கு அழகு, கட்டும் புடைவையிலும், அணிந்திருக்கும் நகையிலும் மட்டுமே இல்லை. அமைதியான முகத்திலும் அழகாக வார்ந்த பேச்சிலும்தான் ரம்யமான அழகே குடிகொண்டிருக்கிறது.


இதை எண்ணிப் பார்ப்பது இனி உங்கள் பொறுப்பு!

நட்புடன்
கிரிஜா ராகவன்

உங்கள் குழந்தை படு வாலா?

இது நல்ல வெயில் காலம். போதாததற்கு ஸ்கூலெல்லாம் வேறு லீவு. இந்தக் குழந்தைகளை வீட்டிற்குள் சமாளிப்பது என்பது இருக்கிறதே அது ரொம்ப ப்ரும்மப் ப்ரயத்தனமான பெரிய விஷயம்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. எப்போதும் ஓர் ஓரமாக,



சொன்ன இடத்தில் குழந்தை உட்கார்ந்திருக்கிறது என்றால் அது சோம்பேறிக் குழந்தை. இங்கேயும் அங்கேயும் ஓடித் துறுதுறுவென்று இருக்கும் குழந்தைதான் பின்னாளில் துடிப்பாக முன்னுக்கு வரும். அதனால் அதை அடக்குவது தவறு.

பிறகு எப்படித்தான் இவர்களைச் சமாளிப்பது! குழந்தைகளைச் சமாளிக்க சிறந்த வழி அவர்களுடைய எனர்ஜிக்குத் தீனி போடுவதுதான். ஏதாவது ஒரு வேலை கொடுங்கள்.

நாலைந்து குழந்தைகளாகச் சேர்ந்தாலும் பரவாயில்லை. சின்னச் சின்ன வேலைகளாகக் கொடுங்கள். பேப்பரைத் தேதி வாரியாக அடுக்கி வைக்கச் சொல்லலாம். அரிசியில் கல் பொறுக்கச் சொல்லலாம். சமையல் ரூமில் பாத்திரங்களை வரிசையாக அடுக்கச் சொல்லலாம். அலமாரியில் பேப்பர் மாற்றச் சொல்லலாம்.

தனக்கு ஏதோ, பொறுப்பு கொடுத்து காரியங்களைச் செய்ய வைக்கிறார்கள் என்கிற குஷியில் சமர்த்தாக ஓர் இடத்தில் இருக்கும் குழந்தை. செய்து பாருங்கள் பார்க்கலாம். உங்கள் சாமர்த்தியத்தை!

— ஸ்ரீராம்

பெண்களே! உணருங்கள்



ஆணுக்கு சமமாக பெண்களும் இப்போது எல்லாத் துறைகளிலும் ஜொலிக்கத் தொடங்கியுள்ள காலம் இது. ஆனாலும் பெரும்பாலான பெண்கள், வேலை செய்யும் இடங்களில் எவ்வளவோ இடைஞ்சல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் சிகரமாக, தற்போது சற்று விநோதமான பிரச்னை ஒன்றைப் பார்ப்போம்.

அலுவலகத்தில் ஆய்ந்து ஓய்ந்து நுழையும் பெண்ணைப் பார்த்து, 'ரொம்பக் களைச்சிருக்கீங்க. போய் சூடா காபி சாப்பிடுங்க' என்பதில் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாய் அந்தப் பெண்ணின் கணவன் சாதாரணமாகச் சொன்ன சொற்களையும் பூதாகரமான பிரச்னையாக உருவாக்கும் நடுத்தரவயது ஆண்களிடம் பெண்கள் மிகமிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

தனது வயதை ஒரு ப்ளஸ் பாயிண்ட்டாகக் கொண்டு அளவுக்கு மீறி உரிமை எடுத்துக் கொள்ளும் ஆண்கள் பெருகி வருகின்றனர். இவர்களுக்கு - வீட்டிற்குப் போனால் திருமணத்திற்குக் காத்திருக்கும் பெண்கள்; வேலையின்றித் தவிக்கும் பிள்ளைகள்; மெனோபாஸ் வயதடைந்து சலிப்பின் உச்சியில் நிற்கும் மனைவி. இதுபோன்ற சூழ்நிலையில் இருந்து தப்பும் பொருட்டு, பொழுதுபோக்காக, தம்முடன் பணிபுரியும் பெண்களிடம் இவர்கள் காட்டும் போலிப் பரிவை நம்பி ஏமாந்து பின் அவதியுறும் பெண்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

எனவே அலுவலகத்தில் எக்காரணத்தைக் கொண்டும் பெண்கள் தம்முடைய சொந்தக் கவலைகளைக் கூறிக் கண்ணீர் விடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கணவனிடம் சண்டை என்றால் அவனிடமே பேசித் தீர்த்துக் கொள்வதுதான் உயர்ந்த வழி. அதை விடுத்து முதலைக் கண்ணீர்ப் பேர்வழிகளிடம் மாட்டிக் கொண்டால் அதோகதிதான் என்பதை புத்திசாலிப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

— சந்திரா ஜானகிராமன்

எண்ணிப் பார்த்தபோது...

என் பாட்டி கனிவான கதைகள் சொல்லும் பாட்டி மாத்திரமல்ல; கண்டிப்பான கட்டளைகளை எனக்கு இடும் கல்மனப் பாட்டியும் கூடத்தான்!

எனக்கு, அம்மா இல்லாததால் பாட்டியிடம்தான் வளர்ந்தேன். பாட்டிக்குத் தெரியாமல் நான் காசு வைத்துக் கொள்ளக் கூடாது. பாசமும் சிநேகமும் வைத்துக் கொள்ளக் கூடாது. எல்லாம் அவளிடம் சொல்லிவிட வேண்டும். அவளாகப் பார்த்து வளையல், ரிப்பன் வாங்கித் தருவாள். இப்படியே வளர்க்கப்பட்டதால் என் கணவர் வீட்டிலும் இதுவே பழகிப் போயிற்று. ஒரு சின்ன விஷயத்தைக்கூட, அவரிடம் சொல்லிவிடுவேன்.

எங்கள் உறவுப் பெண் ஒருத்திக்குக் குழந்தை இல்லை. பிச்சை கேட்க வந்த ஒரு போலிச் சாமியார், "உனக்கு ஒரு பெரிய குறை இருக்கு. அதை 40 நாள்களுக்குள் தீர்த்து வைக்கிறேன்" என்று சொல்லி இருக்கிறான்.

அவளும், அவனை நம்பி அவன் சொன்னபடி எல்லாம் ரகசியமாகப் பூஜை செய்தாளாம். அவனும் அவளுடைய நகைகளை எல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு போய்விட்டானாம். அதன் பிறகு, கணவனிடம் சொல்லி இருக்கிறாள்.

அவன் பயங்கரக் கோபக்காரனாகி, எனக்குத் தெரியாமல் இன்னும் என்னென்ன நடந்ததோ என்று அபாண்டப் பழி சொல்லி அவள் தாய்வீட்டுக்கே அவளைத் துரத்தி விட்டு விட்டான்.

நகை, பாத்திரங்கள் மாதத் தவணைப் பணம் கட்டுவதில் மோசடி, கம்பெனிகளில் சீட்டுக் கட்டுவதிலும் பெண்கள் கணவருக்குத் தெரியாமல் தாமே ரகசியமாக ஈடுபடுகிறார்கள். அதில் பணத்தை இழந்தபிறகுதான் வெளியில் தெரிகிறது.

இதுபோல் நம் சகோதரிகள் ஏன் ஏமாற வேண்டும்? ஏன் வீட்டுக்குத் தெரியாமல், ரகசியமாக, இப்படிச் செய்ய வேண்டும்? இதை யோசிக்கும்போது, பாட்டி என்னை வளர்த்த விதம் சரியானது தானோ என்றல்லவா தோன்றுகிறது?


சகோதரி கிரிஜா ராகவன் கேட்டுக்கொண்டபடி நான் எண்ணிப் பார்த்ததை எழுதி இருக்கிறேன். சகோதரிகள் பலருக்கும் இவை பயன்படுமானால் பெரிதும் மகிழ்வேன்.


— ஈசுவரி, பெங்களூர்.

தொட்டில் குழந்தைகள்!


சிலுவை என்ன
இயேசு வுக்குத்தான் சொந்தமா?
எங்களுக்கும்தான்!
இல்லத்து அரசியாம்
நாடில்லா ராணிகள்!
பின்னாளில் அரசு
தொட்டிலில் தூங்கும்
ராணிகள்தான்
இந்த அரசிகளோ!

— சந்திரா ஜானகிராமன்





முதலில் 7 புள்ளி நடுவில் வைக்கவும்
பின் 8, 9 8, 3, 2 இருபக்கமும் வைக்கவும்



15 புள்ளி
3 வரிசை
15 – 3 வரை
நேர் புள்ளி

இந்த மாதம் பரிசு பெறும் கோலத்தை வரைந்தவர் : ஆர்.கே. தேவி, எண்-104, கோவை புதூர், கோயம்புத்தூர் – 641 042.

பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற கோலங்களை வரைந்தவர்கள் : எஸ். ரம்யா, சென்னை, ஆர். மகாலட்சுமி, சென்னை.

வாசகர்கள் இந்த இடம் பிடித்துப் பரிசு பெற இதுவரை வெளிவராத புதுமையான சிறந்த கோலத்தை, கறுப்பு மையினால் வரைந்தனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் கோலத்துக்குப் பரிசு ரூ. 50/-

நாற்பதில் இளமை

தலைமுடியில் ஒரு நரை தெரிந்து விட்டால் போதும். பெண்கள் பெருமூச்சு விடுகின்றனர்.. "வயதாகிவிட்டதே!" என்ற எண்ணம் மனத்தை அரிக்கிறது. 'இனி மேல் என்ன இருக்கிறது' என்று நினைக்கிறார்கள். நாற்பது என்பது வாழ்க்கையின் நடுப்பருவம், வாலிப வாழ்வின் அனுபவங்கள் சந்தோஷங்கள் மனத்தை நிறைக்கும் காலகட்டம்!

முதுமையின் தொடக்கம் என்பதை விடவும் முதுமையின் இளமைக் காலம் என்று எண்ணிக் கொண்டால் அதுவே ஓர் உற்சாக டானிக்காக அமையும். இளம் பெண்களை வியக்க வைக்கும் அளவு நடுவயதுப் பெண்களின் சாதனைகள் இருக்கின்றன; இருக்க வேண்டும். நிதானமானசிந்தனை, எடைபோடும் திறன், அனுபவங்கள் கற்றுத்தந்த பாடங்கள்- இவை நடுப்பருவ மங்கையரின் வெற்றிக்குப் பெருமளவில் உதவுகின்றன.

மனத்தளவில் வயதை வென்று வாழும் பெண்களில் பலர், உடல் அழகை, ஆரோக்யத்தைப் பேணுவதில் கவனம் செலுத்த மறுக்கிறார்கள். இளமையில் அந்தப் பருவத்திற்கே உரித்தான கவர்ச்சி இருப்பதால் தோற்றத்தில் தனி கவனம் செலுத்தாவிடினும் தவறில்லை. ஆனால் நடுவயதை எட்டும் பெண்கள் தங்கள் தோற்றம், ஆரோக்யம் இவற்றிற்குரிய முக்கியத்துவத்தை உணரவேண்டும். குடும்பத்தை வெற்றிகரமாக்க, இவை மிகவும் அவசியமானதாகும்.

உடுத்தும் உடை, மதிப்புத்தரத் தக்கதாக- கண்ணியமானதாக இருக்கவேண்டும். மெல்லிய துணிகள் உடுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. வயது ஆக ஆக தோல் வறண்ட தோற்றம் தரும். எப்போதும் போடுவதுபோல கனமான 'மேக்கப்' போடுவது சரியல்ல! கன்னங்களில் ஆழ்ந்த நிறத்தில் ரூஜ் போடுவது, லிப்ஸ்டிக் தடவுவது இவற்றை விட்டு விட வேண்டும். முகச் சுருக்கங்கள் தெரியாமலிருக்க லேசான 'மேக்கப்' போடலாம்.

தலைமுடி.. நரை தோன்றும் பருவத்தில் நார் நாராக இருக்கும். கவனமாக, தினமும் இருமுறை தலைவாரி, தோற்றத்துக்கு ஏற்ற படி கொண்டையோ, போனி டெய்லோ போடலாம்.

உடம்பு, குறிப்பாக தோள்கள், சரிந்து முகத்தில் கழுத்துச் சதை விழுந்து தெரியும். ஊளைச்சதை இடுப்பைப் பெருக்க வைக்கும். இவற்றைக் குறைக்க, எளிய, உடலுக்குத் தீங்கு தராத பயிற்சிகள் செய்யவேண்டும்.



உடல்எடை கூடாமல் பார்த்துக் கொள்வதே சிறந்தது. உணவில் கொழுப்பையும், புளிப்பு, இனிப்பையும் நீக்கினால் ஓரளவு 'எடை' கூடாமல் இருக்கும்.

உடம்பு, முகம், தலை என்று பெண்கள் கவனம் செலுத்துகின்றனர். ஆனால் நடுவயதுப் பெண்கள் கவனிக்காமல் ஒதுக்குவது கைகளின் பராமரிப்பைத் தான்! 'நடு வயதுப் பெண்மணி' என்று பார்த்தவுடனே சொல்லவைப்பவை எலும்பு துருத்தி, நரம்புகள் புடைத்த கைகளும் விரல்களும் தான்!

கைகளைப் பாதுகாக்க, 'க்ரீம்'கள் கிடைக்கின்றன. அவற்றை அப்படியே தடவிக் கொண்டால் போதாது. விரலின் நுனியில் தொடங்கி மெல்ல மெல்ல கைகளின் மேற்புறம் வரை தேய்த்து விட வேண்டும். விரல் நகங்களைச் சீராக வெட்டி அழுக்கில்லாமல் பாதுகாக்கவேண்டும்.

தோற்றத்திலுள்ள இளமையைக் கைகளுக்கும் அளிக்க வேண்டும். வாரம் ஒருமுறையாவது முகத்தை சுத்தமாக்க 'மாஸ்க்' எனப்படும் அழகு சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும். முகம், சோர்வின்றி புத்துணர்ச்சியோடு காட்சியளிக்கும். தினமும் ஒரு ஐஸ் கட்டிகளைத் துணியில் சுற்றி முகத்தில் ஒத்தடம் போல் கொடுத்தால் கண்களைச் சுற்றிக் கருவளையம் விழாது; தோலில் சுருக்கம் வராது.

நாற்பதை நெருங்கும் போது பெண்களுக்கு ஏற்படும் உடலியல் மாற்றம்- மெனோபாஸ் காலம்- மனத்தை பாதிப்பதாக இருக்கும். மெனோபாஸ் என்பது இயற்கையான ஒருசெயல். இந்தக்காலத்தைக் கலக்கமின்றிக் கடக்க- தகுந்த மருத்துவ ஆலோசனைகளைப் பெற வேண்டும். உங்களுடைய நலனே, குடும்பத்தின் அடிநாதம்.

நடுவயது என்பது தவிர்க்க இயலாத ஒன்று. முதுமையை நோக்கி நடைபோடுகிறோம் என்பதை உணர்ந்து உள்ளபடி வாழப் பழகவேண்டும். கம்பீரமாகத் தோற்றமளியுங்கள். வாழ்க்கை என்ற ஏணியிலே வெற்றிப்படிகளைக் கடந்து வந்திருக்கிறோம் என்று எண்ணுங்கள். 'இனி எனக்கு என்ன வேண்டும்?' என்று சோர்வு கொள்ளாமல், 'இனியும் எனக்கு வாழ்க்கை இருக்கிறது!' என்ற நினைப்போடு, கவனத்தோடு ஒவ்வோர் அடியையும் எடுத்து வையுங்கள்! முதுமை உங்களைத் தொட இன்னும் முப்பது ஆண்டுகளாவது ஆகும்!

— கங்கா ராமமூர்த்தி

வயிற்று வலிக்கு : இளம் துளிர் வேப்பிலையை ஒரு கைப்பிடி எடுத்து அத்துடன் ஒரு டீஸ்பூன் சீரகத்தை அரைத்து (லேசாகத் தண்ணீர் தெளித்து) வடிகட்டவும். ஒன்று அல்லது ஒன்றரை அவுன்ஸ் சாற்றுடன் சிறிது சர்க்கரை சேர்த்து வெறும் வயிற்றில் காலை வேளையிலும், இரவு நேரத்தில் உணவு உண்பதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவும் சாப்பிட்டால் வயிற்றுவலி தீரும். இதைச் சாப்பிடும் நாளில் காபி, டீ, நல்லெண்ணெய் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டு மணி

தவளை ராணி!

நீண்ட காலத்துக்கு முன்பு ஒரு மன்னன் வாழ்ந்திருந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள். புதல்வர்கள் மூன்று பேரும் பெரியவர்கள் ஆனதும், "எனக்கு வயதாகிக் கொண்டு போகிறது. ஆகவே உங்கள் திருமணத்தைப் பார்க்க மிகவும் விரும்புகிறேன்!" என்றான்.

"அரசே! உங்கள் விருப்பப்படியே திருமணம் செய்து கொள்கிறோம்! நாங்கள் யாரை மணக்க வேண்டும்?" என்று கேட்டனர், மூன்று புதல்வர்களும்.

"புதல்வர்களே! நீங்கள் மூன்று பேரும் வில்லும் அம்பும் எடுத்துச் சென்று ஒரு மைதானத்தில் வில்லில் அம்பை எய்யுங்கள். அந்த அம்பு விழும் இடத்தில் உங்களுக்குரிய மணப்பெண் கிடைப்பாள்!" என்றான் அரசன்

மூத்த புதல்வன் எய்த அம்புக்குப் பரிசாக ஒரு பணக்காரனின் புதல்வி மனைவியாகக் கிடைத்தாள். இரண்டாவது புதல்வன் அம்பு எய்தபோது மந்திரியின் மகள் மனைவியாகக் கிடைத்தாள். மூன்றாவது கடைசிப் புதல்வன் அம்பு எய்தபோதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது! அந்த அம்பு எய்த இடத்தில் ஒரு தவளை கிடைத்தது! தந்தை சொற்படி நடக்க வேண்டும் என்பதால் கடைசிப் புதல்வன் அந்தத் தவளையை மணந்து கொண்டான்.

மறுநாள் அரசன் தன் புதல்வர்களை அழைத்து "யாருடைய மனைவி நன்றாகத் தைப்பாள் என்று போட்டி வைக்கப் போகிறேன்! யார் ஜெயிக்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு உண்டு!" என்றான்.

தவளையை மணந்த கடைசிப் புதல்வன் அரண்மனைக்குத் துக்கத்துடன் வந்தான்.



"எதற்காகத் துக்கப்படுகிறீர்கள்?" என்று கேட்டது தவளை.

"தந்தை தையல் போட்டி வைத்திருக்கிறார். யாருடைய மனைவி நல்ல உடை தைத்துத் தருகிறார்களோ, அவளுக்குத்தான் பரிசாம்!" என்றான் கடைசிப் புதல்வன்.

"கவலைப்படாதீர்கள். தூங்கச் செல்லுங்கள். காலை வேளை மாலை வேளையை விடப் புத்திசாலித்தனமானது!" என்றது தவளை.

தவளை ஓர் இரவில் அழகிய பெண் உருவமெடுத்து, அற்புதமான ஆடையைத் தயாரித்துக் கொடுத்து விட்டாள்! மூன்று புதல்வர்களின் மனைவிமார்களுடைய தயாரிப்பு உடைகளைப் பரிசீலித்த மன்னன் தவளை மனைவிக்குத்தான் பரிசு அளித்துக் கௌரவித்தான்! மற்ற இரு மனைவியருக்கும் ஒரே பொறாமை! தையல் போட்டியில் மூவரில் கடைசி சகோதரனின் மனைவி வென்று விட்டாளே என்று ஆத்திரம்! இதுவரை அவர்களிருவரும் அவளைச் சந்தித்ததில்லை.

அடுத்த நாளும் அரசரைச் சந்திக்கச் சென்ற கடைசிப் புதல்வன் வருத்தத்துடன் திரும்பினான்.

தவளை கெஞ்சலாக, "இன்றும் உங்களுக்கு வருத்தமா? என்ன விஷயம்?" என்று கேட்டது.

"தந்தை உணவுப் போட்டி வைத்திருக்கிறார். யார் நன்றாக சர்க்கரைப் பொங்கல் தயாரித்து தருகிறார்களோ, அவளுக்கு பரிசாம்!" என்றான் கடைசி புதல்வன்.

"துக்கத்தை விடுங்கள்! காலையில் உங்கள் போட்டிக்குரி பொருள் தயாராக இருக்கும் என்றது தவளை. ஓர் இரவி தவளை உருவில் இருந்தவ அழகிய பெண்ணாக மாறி அற்பு மாகச் சர்க்கரைப் பொங்க தயாரித்து வைத்து விட்டது.

இரண்டாவது போட்டியிலு தவளைக்கே வெற்றி கிடைத்தது கடைசிப் புதல்வனுக்கு வெற் கிடைத்தாலும் தன் மனைவி ஒ தவளை என்பதை அரசருக் அறிமுகப்படுத்த வெட்கமா இருந்தது!

அடுத்தநாள் வந்தபோதுதா கடைசிப் புதல்வனுக்கு அதி அளவு துயரம் ஏற்பட்டது.

"என்ன விஷயம்?" என் வினவிய தவளையிடம்", நாளைக் அரசர் விருந்து கொடுக்க போகிறார். அதற்கு உன்னையு அழைத்து வரச் சொல் யிருக்கிறார்!" என்றான் கடைசி புதல்வன்.

"இவ்வளவுதானா? நீங்க முதலில் அரண்மனையில் விரு தில் கலந்து கொள்ளுங்கள். நா பிறகு வந்து சேருகிறேன். நா வரும்போது இடியும் மின்னலு தோன்றும். உடனே உங்க தந்தையிடம் நான் வந்திருப்பதை தெரிவித்து விடலாம்!" என்ற தவளை.


அரண்மனையில் அரசர் ந நாயகமாக வீற்றிருக்க விருந் தொடங்கியது. இரண்டு புதல்வ களும் தங்கள் மனைவிமார்களோ வந்து அமர்ந்திருக்க, கடைசி புதல்வன் மட்டும் தனியாக வந்த அமர்ந்தான். அவன் அருகிலுள் இருக்கை காலியாக இருந்தது!

"உன் மனைவி எங்கே? வ வில்லையா?" என்று கேலி செய் னர் இரு சகோதரர்களும்.

கொஞ்ச நேரம் கழித்து, இடி யும் மின்னலும் தோன்றின. அ பொழுது ஒரு சாரட்டில் அழகி தேவதை போன்ற பெண் ஒருத்த

க்கையண்ணா

கலைவாணி



காக்கையண்ணா காக்கையண்ணா
கொஞ்சம் கேளுங்க – நீங்க
முத்தைச் சாய்த்துக் கவலையாகப்
ார்ப்பதென்னங்க?

ாயிலிருந்த வடையைத் தவற
ிட்டதேனுங்க – நீங்க
ள்ளநரியின் புகழில் கொண்ட
யக்கந்தானுங்க.

ஞ்சகரின் புகழ்ச்சி மொழியை
ம்பிடாதீங்க – வடையைப்
ாட்டி கிட்ட திருடினதால்
றி கொடுத்தீங்க

ற்றவரை ஏமாற்றி
டுத்த பொருளுமே – அது
ந்தவுடன் பறிபோகும்
றந்திடாதீங்க.

வந்து இறங்கினாள். அவள் அழகைப் பார்த்து, அனைவருமே வியந்தனர்! மூத்த இரு புதல்வர்களின் மனைவிகள் அவள் அழகைக் கண்டு பெருமூச்சு விட்டனர்!

பேச்சும் களியாட்டமும் சில மணி நேரத்துக்குத் தொடர்ந்தன. அழகிய தேவதை போன்ற அப் பெண்ணைத் தங்கள் அருகில் அழைத்து வைத்துப் பல கேள்விக் கணைகளைத் தொடர்ந்தனர் இரு சகோதரர்களின் மனைவிகள்.

அந்தச் சமயத்தில் கடைசிப் புதல்வன் தன் அரண்மனைக்கு விரைந்து. அங்குள்ள தவளை உடையை நெருப்பில் போட்டு எரித்து விட்டான்! தவளையாக அந்தப் பெண் இருப்பதை விரும்பாததால் அவன் இப்படிச் செய்து விட்டான்.

அரண்மனைக்குத் திரும்பிய அழகிய பெண் தன் தவளை உடையைத் தேடினாள். அது எரிக்கப்பட்டு விட்டது என்று அறிந்ததும் அவள் வருந்தினாள். தன் கணவனிடம், "இன்னும் இரண்டு நாள் பொறுத்திருந்தால் என் சாபம் தேவதையினால் நீங்கியிருக்கும். பிறகு உங்களுடன் சௌக்கியமாக வாழ்ந்திருப்பேனே!" என்றாள்.

"உன்னை நான் திரும்பப் பெற என்ன செய்ய வேண்டும்?" என்று கெஞ்சினான் கடைசிப்புதல்வன்.

"காரியம் கெட்டு விட்டது. நான் என்னைத் தவளையாக்கிய துர்த் தேவதையிடம் போய்ச் சேர வேண்டும். அவளிடம் கடுமையாக உழைக்க வேண்டும்" என்று வருந்தினாள் அழகிய பெண்.

அடுத்த கணம் கடைசிப் புதல்வன் வருத்தப்படும்படியாக ஒரு துர்த்தேவதையே வந்து அவளை ஒரு பறவையாக மாற்றி அழைத்துச் சென்று விட்டது!

கடைசிப் புதல்வனுக்கு மிக வருத்தம். இவ்வளவு அழகிய பெண்ணை மனைவியாகப் பெற்றும் அவளை இழந்து விட்டோமே என்று துக்கப்பட்டான்!

அரசனின் கடைசி மகன் துக்க மேலீட்டால் காடு மேடுகளெல்லாம் அலைந்து திரிந்தான். தன் அழகிய மனைவியைத் திரும்பப் பெற வேண்டுமே என்ற ஆவல் அவன் முயற்சியில் தெரிந்தது!

ஓர் அழகிய மான் காட்டில் ஓடும்போது, அதனைத் தன் வில்லிலிருந்து பொருத்திய அம்பினால் வீழ்த்த முயற்சி செய்தான். அப்பொழுது அந்த மான் பேசத் தொடங்கியது.

"மானிடனே! என்னை அம்பால் வீழ்த்தாதே. நான் உனக்கு வேண்டிய உதவி செய்வேன்!" என்றது மான்.

அம்பு எய்வதை விட்டு, மானின் அருகில் சென்றபோது, "மானே! நான் என் மனைவியை ஒரு துர்த் தேவதையிடம் இழந்து தவிக்கிறேன். நீதான் காப்பாற்றித் தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

"இந்தக் காட்டில் ஒரு நல்ல தேவதை உள்ளது. அதனிடம் அழைத்துச் செல்கிறேன். அவள் உனக்கு உதவுவாள்!" என்றது மான். அப்படியே கடைசிப் புதல்வனை அழைத்துக் கொண்டு அந்தத் தேவதையிடம் சென்று சேர்ந்தது.

தேவதையை வணங்கி விட்டு அதனிடம் கடைசிப் புதல்வன் தன் கோரிக்கையை விடுத்தான்.

உங்களுக்குத் தெரியுமா?

❒ அல்ஜீரியாவில் வயலெட் நிற ஏரி ஒன்று இருக்கிறது. இத்தகைய அபூர்வ வர்ண ஏரி தோன்றுவதற்குக் காரணம், ஏரியில் விழும் இரு நதிகள். இந் நதிகள் அபூர்வமான ரசாயனச் சேர்க்கையில் கலப்பதால்தான் இந்த அபூர்வ நிறம் தோன்றுகிறது!

❒ பிலிப்பைன் நாட்டிலுள்ள மக்கள் அன்னாசிப் பழங்களைச் சாப்பிடுவதோடு, அன்னாசிச் செடியில் வளரும் கடினமான முள் தன்மை கொண்ட இலைகளை உடைகளாகவும் அணிகிறார்கள்!

❒ மேற்கு ஜெர்மனி கண்டு பிடிப்பாளர் ஹெல்மட் ரோஹல்ட் பறக்கும் சைக்கிள் ஒன்றை உருவாக்கினார். இந்தப் பறக்கும் சைக்கிள் 1.5 கிலோ மீட்டர் தூரம் வானத்தில் 166 செகண்ட்கள் பறந்து சென்றது அதிசயம்.

❒ உலகத்திலேயே சரியான காலத்தைத் துல்லியமாகக் காட்டும் கடிகாரம் கலிபோர்னியாவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிகாரம் வான சாஸ்திரத்தில் பயன்படுத்தப்படுகிறது. 13 மில்லியன் ஆண்டுகளானாலும் ஒரு விநாடி தவறாகக் கடிகாரம் ஓடாது என்பது அதன் தனிச் சிறப்பு!

"அப்பா! உன் மனைவியைத் துர்த் தேவதை ஒரு குகையில் பத்திரமாக வைத்திருக்கிறாள். அந்தக் குகையைப் பயங்கர மிருகங்கள் பாதுகாக்கின்றன. குகைக்குப் போவதற்கு முன்பே அவை உன்னைத் தீர்த்துக் கட்டிவிடும்!" என்றது. அந்த நல்ல தேவதை.

"அந்தப் பயங்கரத்திலிருந்து என் அழகிய மனைவியை மீட்டுத் தர வேண்டும்!" என்று கோரினான் கடைசிப் புதல்வன்.

"என் மந்திரக் கோலைத் தருகிறேன். இதனை எடுத்துப் போய், அந்தக் குகையிலுள்ள மிருகங்களைச் சிலையாக்கி விடு! குகையிலுள்ள துஷ்ட தேவதையையும் இந்த மந்திரக் கோலினால் சிலையாக்கி விடலாம். ஆனால் துர்த்தேவதையைச் சிலையாக்கி விட்டுத்தான் உன் மனைவியைத் தொட வேண்டும். அதற்கு முன்னால் தொட்டு விட்டால் அந்த துர்த்தேவதை உங்கள் இருவரையுமே தவளைகளாக்கிப் பழி தீர்த்துக் கொண்டுவிடும்!" என்றது நல்ல தேவதை.

அதன்படி, குகைக்குள் சென்றதும் மிருகங்களை மந்திரக் கோலினால் சிலைகளாக்கி விட்டான். ஆனால் குகைக்குள் ஒரே உருவத்தில் இருவர் தன் மனைவியைப் போலிருக்கவே, கடைசிப் புதல்வன் மலைத்துப் போனான். யார் உண்மையான தன் மனைவி, யார் துஷ்ட தேவதை என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறினான். உண்மையான மனைவியின் கண்களில் இரு நீர்த் துளிகள் விழுவதைப் பார்த்ததும் அவன் புரிந்து கொண்டான். துஷ்ட தேவதை இந்த நீர்த் துளிகளைப் பார்க்காததால் அதைப் போல் தன் கண்களில் நீர் சொட்டாது இருந்து விட்டாள். கடைசிப் புதல்வன் மந்திரக் கோலினால் துர்த் தேவதையைச் சிலையாக்கினான். தன் மனைவியை அடைந்து மிகவும் மகிழ்ந்தான்.

"துர்த்தேவதை கொஞ்சம் அசந்திருந்தால் நம்மிருவரையுமே குகையில் இரு தவளைகளாக மாற்றியிருக்கும். நல்ல காலம்! என் கண்களை உற்றுக் கவனித்து உண்மையை அறிந்தீர்கள்!" என்றாள் கடைசிப் புதல்வனின் அழகிய மனைவி.

தன் மனைவியை அழைத்துக் கொண்டு நல்ல தேவதையிடம் சென்று மந்திரக் கோலைச் சேர்ப்பித்துவிட்டு, தன் மனைவியைக் கண்டுபிடிக்க உதவிய மானுக்கு நன்றி சொல்லிவிட்டு நாடு திரும்பினான். தன் அழகிய மனைவியோடு கடைசிப் புதல்வன் சிறப்பாக வாழ்ந்தான். மற்ற இரு புதல்வர்களைவிடத் தன் கடைசிப் புதல்வனுக்கே, மன்னனும் முடிசூட்டி மகிழ்ந்தான். 'தவளை ராணி' என்று புத்திசாலி மனைவிக்குப் பெயர் சூட்டி, அவளது அறிவுரையின்படி நாட்டைப் பரிபாலித்தான் புதிய மன்னன்.




இந்தியாவின் மிகப் பழைய பிரசித்தி பெற்ற வனவிலங்குச் சரணாலயம், வேட்டையாளர் ஜிம் கார்ப்பெட் பெயரில் வழங்கப்படுகிறது. இந்தச் சரணாலயம் 520.8 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. ராம் கங்கா நதி தீரத்தில் ப்ட்டீல்டன் செழிப்புப் பூமியில் சிவாலிக் மலைத் தொடரைப் பின்னணியாகக் கொண்டு இந்த வனவிலங்கு சரணாலயம் விளங்குகிறது.

புலி, முதலை, மான், யானை, மலைப்பாம்புகள், கரடி, குரங்கு ஆகிய வனவிலங்குகளோடு 585 வகைப் பறவை இனங்களுக்கும் வாசஸ்தலமாகத் திகழ்கிறது. ஜிம் கார்ப்பெட் வனவிலங்கு சரணாலயம் சுற்றுலாப் பிரியர்களுக்கு அரிய கண்காட்சியகம்.

தமிழோசை

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று கனவு கண்டார் பாரதியார். தேமதுரத் தமிழின் ஓசை வங்காளி மொழி வழங்கும் கல்கத்தாவில் வெகு சிறப்பாக முழங்கி வருவதை நேரில் பார்த்து மகிழ்ந்தேன். வங்காளத்தில் குடியேறியுள்ள தமிழ்க் குடும்பங்களின் குழந்தைகளுக்குத் தமிழும், தமிழ்ப் பண்பாடும், தமிழ் இசையும் மறந்து விடாமல் இருப்பதற்காகச் சிறுவர், சிறுமியருக்கு 'நன்னெறி வகுப்பு' நடத்தி வருகிறார்கள், கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தினர். திருமதி ஜானகி பத்மநாபன் இவ் வகுப்பைச் சிறப்பாக வாரந்தோறும் நடத்துகிறார். டிஸ்கோ நடனமும், அயல்நாட்டு இசை மோகமும் பச்சிளம் பாலகர்களைக் கவர்ந்து விடாமல் இருக்க இந்த நன்னெறி வகுப்பு உதவுகிறது. பக்திப் பாடல்களை மழலை மொழியில் கேட்பதற்கு மிக ஆனந்தமாயிருந்தது. பாரதியாரின் 'தமிழோசை'க் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தினர். வளர்க அவர்கள் தொண்டு! விளையும் பயிர்கள் நல்ல வளர்ச்சி பெற பக்திப் பாடல்கள், நன்னெறிக் கதைகள், பெரியோர் வரலாறுகள் நன்கு உதவும்.





சங்கப் பலகை

வீட்டில் வண்ண மீன்களை வளர்ப்பது எப்படி?

(வெளியீடு - மணிமேகலைப் ிரசுரம், த.பெ.எண். 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், சன்னை - 600 017. பக்கங்கள் - 6. விலை ரூ. 19/-).

கண்ணாடித் தொட்டிகளில் ண்ணைக் கவரும் வண்ண ின்கள் அங்குமிங்கும் உலவி ருவதைப் பல வீடுகளில் நாம் ாண்கிறோம். இத்தகைய மீன் ளை வளர்ப்பது, மீன்களைத் தர்வு செய்வது, அவற்றின் ணவு, தொட்டியில் தண்ணீர் ாற்றுதல், மீன்களுக்கு வரும் நாய்கள், அவற்றுக்கான சிகிச்சை பான்ற தகவல்களைத் தொகுத்து ழங்கும் நூல் இது.

—பாரதி சுராஜ்

டிப்பினை தரும் சம்பவங்கள்

(பதிப்பாசிரியர் - லேனா தமிழ் ாணன் எம்.ஏ., வெளியீடு - ணிமேகலைப் பிரசுரம், 4, ணிகாசலம் சாலை, சென்னை 17. ிலை - 15.50).

இந்தப் புத்தகத்தில் படிப் ினை தரும் மொத்தம் சுமார் இருபத்தாறு' வெவ்வேறு சம்ப ங்கள் ருசிகரமான கதை டிவில் தரப்பட்டுள்ளன. நாம் ல எத்தர்களால் எளிதில் மாந்து பணத்தையும் மனத்தை ம் எப்படி கோட்டை விடுகிறோம் ன்பதை அற்புதமாக விவரிக்கும் டைமுறைச் சம்பவங்கள் இவை. னைத்தும் அமெரிக்கா, ஜெர் னி, இத்தாலி, இங்கிலாந்து... ிப்படி அயல்நாடுகளைச் சுற்றி டந்தவை. வாழ்க்கையில் நாம் மாந்து விடாமல் எச்சரிக்கையாக ிருப்பதற்கு இதுபோன்ற நூல் தவும்.

கிருஷ்ண அர்ஜுனன்

(ஆசிரியர் - பாலகுமாரன் டைக்குமிடம் - திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 22/-).

மகாபாரத இதிகாசம் நம் இந்துக் கலாசாரத்தைத் தாங்கி நிற்கும் ஒரு தூண். சாதாரணத் தூண் அல்ல - மேலேயும் நடுவேயும் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த அற்புதக் கோயில் தூண். அந்தத் தூணின் நரம்பெடுத்து, இழைபிரித்து, நாவல் என்னும் படிமத்தில் அதிசயத் திருமண மாலையாகக் கோத்துத் தந்துள்ளார் பாலகுமாரன்.

'கிருஷ்ண அர்ஜுனன்' என்ற தலைப்பில் சுபத்திரை என்னும் யாதவகுலப் பேரழகிக்காக சிறந்த வில்லாளியான அர்ஜுனன் துடிக்கிற துடிப்பையும், அவளைத் திருமணம் புரிந்த பின்பு அவனது போர்த் திறமையை ஒரு சாமர்த்திய கபட நாடகம் மூலம் கிருஷ்ணனே தங்கைக்காக, தன் தங்கை முன்பு வெளிக்கொணரும் அதிசயப் பாங்கையும் நவராத்திரி நேரங்களில் வர்ணப் பந்தலிடும் மைசூர் பிருந்தாவனம் போல நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் நாவலாசிரியர்.

இந்த நூலில் கிருஷ்ண - அர்ஜுனன் என்ற குறுநாவலைத் தவிர அகன்ற இலைகளுக்கிடையில் பழுத்துத் தொங்கி மறைந்திருக்கும் கொய்யாப்பழம் போல 'அப்பா' என்ற இன்னொரு நாவலும் மறைந்திருக்கிறது. அது யோகி ராம் சுரத்குமார் போன்ற ஒரு பக்குவ ஞானியை இனம் காட்டுகிறது.

—கவிஞர் வேதம்

சத்திய சோதனை (நாடகம்)

(ஆசிரியர் - டாக்டர் கே.ஏ. குணசேகரன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600 098. பக்கங்கள் - 84. விலை ரூ. 13.50.)

முதலில் பாடல் பாடும் குழுவாகத் தொடங்கி படிப்படியாய் வளர்ந்து பரிணமித்த ஒரு கலைக் குழுவை வைத்து நடத்தும் ஆசிரியரின் அனுபவ அறிவினால் உருவான ஐந்து நாடகங்களைக் கொண்டது இந்நூல். பெண் உரிமைக்காகக் குரல் கொடுப்பது, முதியோர் கல்வியின் அவசியம், பேயோட்டம் போன்ற கிராமப்புற வழக்கங்கள் போன்றவற்றைச் சுற்றி நாடகங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஆசிரியரின் முற்போக்குச் சிந்தனையும், புரட்சிகரமான கருத்துகளும் இவற்றில் மேலோங்கி நிற்கின்றன. மேடைகளில் அரங்கேற்றினால் ஆசிரியரின் சீரிய நோக்கு நிறைவேறும்.

—வ. உமா.

புதுமைத் தமிழ்

(ஆசிரியர் - டாக்டர் கோகிலா கந்தசாமி. வெளியீடு - அமைதி அறக்கட்டளை, அமைதி நகர் காவல் துறையினர் குடியிருப்பு, திண்டுக்கல் - 624 009. விலை - ரூ. 10)

30 பக்கங்கள் கொண்ட சிறு புத்தகம். மாணவர்கள் தமிழ் கற்க மிக உபயோகமான புத்தகம். வித்யாசமான முறையில் புதுமையாகத் தமிழ் கற்றுக்கொள்ளலாம். குழந்தைகளுக்கு விளையாட்டுப் போல் இருக்கும். ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் அந்தப் பாடத்தில் மொத்தம் கற்ற எழுத்துகள் எத்தனை என்ற விவரங்களெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். குழந்தைகள் பயிலும் வகுப்புக்குப் பாடப்புத்தகமாய் வைக்கலாம். —பரணி பாலன்

சதம் கண்ட சங்கரர்

(ஆசிரியர் - புனர்வசு. வெளியீடு - புனர்வசு பதிப்பகம் ஆர்-12, 65ஆவது தெரு, 10ஆவது செக்டார், மேற்கு கே.கே. நகர், சென்னை - 600 078. விலை - ரூ. 16.00)

காஞ்சிப் பெரியவர் பரமாச்சாரியாரின் நூற்றாண்டு விழா கனகாபிடேகம் 4.8.1993இல் நடைபெற்றபோது, அந்த விழாத் தொடர்பாக நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், பங்குபெற்ற பெருமக்கள், இறைத்தொண்டு புரிந்தவர்கள், உதவி செய்த நிறுவனங்கள் பற்றிய பல விவரங்கள் உள்ளன. விழாவில் பங்கேற்ற வேத விற்பன்னர்கள், சங்கீத வித்வான்களின் முகவரிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

—தாமரைக் கண்ணன்

சங்கப் பலகை

தயா

(ஆசிரியர் – லா.ச. ராமாமிருதம் வெளியீடு – வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17. விலை ரூ. 25/-)

எட்டு சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு. ஒவ்வொரு கதையும் பிரமிக்க வைக்கிறது.

இந்தத் தொகுப்பில் 'மன்னி' என்றொரு கதை. பெண் பார்க்க வருகிறார்கள். வருகிறவர்கள் பிள்ளையின் மன்னியைப் பற்றி வாய்க்கு வாய் சிலாக்கியமாகப் பேசிக் கொள்கிறார்கள். அந்த மன்னியைச் சந்திக்கும் ஆவல் கதாநாயகிக்கு மிகுதியாகிறது. கல்யாணத்துக்கு மன்னியால் வர முடியவில்லை. கல்யாணம் முடிந்த அடுத்த நாள்- பிரசவத்தின்போது மன்னி இறந்ததாய் அறிகிறாள். கடைசியில் கையில் குழந்தை! இப்படி கதையின் ஒவ்வோர் எழுத்தும் அசத்தல்தான்.

—பரணிபாலன்

மற்றொரு சுவாசம்

(ஆசிரியர் – கவிமாமணி. பாளை இளமபூறன். வெளியீடு – ஸ்ரீ அர்ச்சனா பதிப்பகம், 17, எல்லைக்கல் தெரு, குறிஞ்சிப் பாடி – 607 302. பக்கங்கள் – 96. விலை ரூ. 15/-).

சிறந்த மரபுக் கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது இந்நூல். உவமைகளும் உருவகங்களும் கவிதைச் சொற்களில் வெளி வரும்போது மனதுக்கு இதம் தருகிறது. இவர் கவிதைகள் பெரும்பாலும் சிவப்புச் சிந்தனைகளாகவே உள்ளன. பார்வையை விரிவாக்கி, உலகின் இனிய வேறு பல சுவைகளையும் இவர் பாடலாமே!

இவருக்கு 'தலித்' கவிஞர் என்ற அறிமுகம் அவசியமில்லை. தம் கவிதைகளின் தகுதியினாலேயே இவர் நிற்பார்.



சர்க்கரை வியாதியா? புற்று நோயா?
அல்சரா? ஆஸ்த்துமாவா?
மூட்டு வலியா? சிறுநீரகக் கோளாறா?
இனி கவலையே வேண்டாம்!



மனிதர்களுக்கு ஏற்படும் அனைத்து நோய், வலி, வியாதிகளுக்கும் மூல காரணம் தூய்மையான இரத்த உற்பத்தியின்மையும், சீரான இரத்த ஓட்டமின்மையும், முறையான இரத்த சுத்திகரிப்பின்மையுமே ஆகும். உடலில் உள்ள சுரப்பிகள் (Glands) சரியாகச் சுரந்தால்தான் தூய்மையான இரத்தம் உற்பத்தியாகும். இதயம் (Heart) நன்றாக இயங்கினால்தான் உடல் முழுவதும் சீரான இரத்த ஓட்டம் இருக்கும். சிறுநீரகங்கள் (Kidneys) சீராக இயங்கினால்தான் இரத்தம் நல்ல முறையில் சுத்திகரிக்கப்படும். மேற்கூறிய உறுப்புகள் நன்றாகச் செயல்பட வேண்டுமானால் உண்ணும் உணவுகளிலிருந்து கிரகிக்கப்படும் சக்திகள் முறையாக அனைத்து உறுப்புகளுக்கும் கிடைக்க வேண்டும். கணையத்திற்கு (Pancreas) சக்திகள் கிடைக்காத நிலையிலேயே ஒருவர் சர்க்கரை வியாதிக்கு ஆளாகிறார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள கணையத்தினை முறையான உணவு மூலமும், வில்வம், வேப்பிலை, அருகம்புல் போன்ற தெய்விக மூலிகைகளை உட்கொள்வதின் மூலமும் தினமும் ஓரிரு நிமிட நேர எளிய உடற்பயிற்சியின் மூலமும் தினமும் 1/4 சதவிகிதம் படிப்படியாக குணப்படுத்தி விடலாம். உதாரணமாக ஒருவருக்கு கணையம் 75% இன்சுலின் மட்டுமே சுரப்பதாக வைத்துக் கொண்டால் மீதமுள்ள 25% இன்சுலினை நாளொன்றுக்கு 1/4 சதவிகிதம் வீதம் 100 நாள்களில் முழுவதையும் சுரக்கவைத்து விடலாம்.



மேலும் நேரிலும், கடித மூலமும் ஆலோசனை பெற :

முகவரி : ஞானோதய தெய்விக மூலிகை வைத்தியர்

Dr. C.K. மாணிக்கவாசகம் & Dr. C.K.M. சபாபதி

89/14, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை – 84

போன் : 6427638 வீடு : 6424285

தலைமை அலுவலக போன் : 04179–20469

தகவல் : சென்னை, வேலூர், ஆம்பூர், திருப்பத்தூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஓசூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோவை மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல் ஆகிய நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முழு முகாம் விவரத்தை 1.7.94 தேதிய துக்ளக் பத்திரிகையில் பாருங்கள்.

முக்கிய அறிவிப்பு : "உங்களுக்கு நீங்களே வைத்தியராக" தெய்விக மூலிகை மருத்துவ ஒரு தின இலவசப் பயிற்சி முகாம்கள், 1994ஆம் வருடம் ஜூலை & ஆகஸ்ட் மாதங்கள் சென்னை, திருப்பத்தூர் (N.A.A.), கோவை, மதுரை, சேலம் ஆகிய நகரங்களில் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கடிதம் எழுதினால் தேதி, இடம், நேரம் – பற்றிய விவரங்கள் உடனே அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு : டாக்டர் அவர்களின் 20 வருட மூலிகை பற்றிய அனுபவ ஆராய்ச்சிகளும், விளக்கங்களும் அடங்கிய "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்விக மூலிகைகள்" என்ற நூலினை பதிவுத் தபாலில் பெற ரூ. 40/-ம், இயற்கை உணவுகளின் பெருமைகளைப் பற்றியும், அரிய உண்மைகளைப் பற்றியும் அறிந்திட இவரின் புதிய படைப்பான "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ. 55/-ம் மேற்கண்ட முகவரிக்கு M.O. அனுப்புங்கள்.

சென்னை - 2இல் உள்ள ஆர்.ஜே. பிராசஸ் ஆஃப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் :
ஆர். ஜனார்த்தனன், ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி.எஸ். ராஜா.
ஆசிரியர் - கலைமாமணி விக்கிரமன், நிர்வாக அலுவலகம், 145, லிங்கச் செட்டி தெரு,
த.பெ.எண் : 5043, சென்னை - 600 001. தொலைபேசி : 5228545, 510535. ஆண்டுச் சந்தா ரூ. 72